பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆடி 01 வெள்ளிக்கிழமை (16-07-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:234

விளக்கமறியலில் இருந்த சச்சு மாஸ்டர் உட்பட

# கருணாவின் சகாக்கள் இருவர்

# மட்டு. சிறைக்குள் சுட்டுக்கொலை!

## மற்றோர் உதவியாளர் படுகாயம்!!

மட்டக்களப்பு,ஜூலை16

**மட்டக்களப்பு சிறைக்குள் இருந்தபடி கருணா அணிக்காகப் பிரசாரம் செய்து வந்தவர் எனக் கூறப்படும் சச்சு மாஸ்டர் நேற்றுக் காலை சிறைக்குள் வைத்தே சுட்டுக்கொல்லப்பட்டார். அவரது மற்றொரு சகாவும் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தார். பிறிதோர் உதவியாளர் படுகாயமடைந்தார்.**

இந்தச் சம்பவம் நேற்றுக்காலை 6.25 மணியளவில் மட்டக்களப்புச் சிறைக்குள் நடந்தது.

திருட்டுக்குற்றச்சாட்டு ஒன்றின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மகேந்திரன் புவிதரன் (வயது-23 - பெரியநீலாவணை) என்பவரே இவர்கள்மீது துப்பாக்கித் தாக்குதல் நடத்தினார்.

கருணா குழுவுக்காக இயங்கிய துரோகக் கும்பலைத் தான் சுட்டுக்கொன்றொழித்தார் என அக்கைதி பின்னர் கூறினார் என அறியவந்தது.

சச்சு மாஸ்டர் என்று அழைக்கப்படும் கணபதிப்பிள்ளை மகேந்திரன், தீபன் என்று அழைக்கப்படும் சரவணமுத்து சாந்தகுமார் ஆகிய இருவருமே உயிரிழந்தவர்களாவர். தியாகராஜா முரளிதரன் என்ற மற்றொரு விளக்கமறியல் கைதியே படுகாயமடைந்தார். இவர் தற்போது மட்டக்களப்பு வைத்தியசாலையின் அவசர

(16ஆம் பக்கம் பார்க்க)

## சச்சு மாஸ்டரைச் சுட்டவர் சிறைக் கூரையில் 4 மணி நேரப் போராட்டத்தின் பின்பே சரண்!

### அதுவும் கண்காணிப்புக்குழு, செஞ்சிலுவை அதிகாரிகள் முன்பாகத்தான்

மட்டக்களப்பு,ஜூலை16

நேற்று மட்டக்களப்புச் சிறையில் சச்சு மாஸ்டரையும், அவரது சகாவையும் சுட்டுக்கொன்ற விளக்கமறியல் கைதியான மகேந்திரன் புவிதரன், அந்தச் சம்பவத்தின் பின்னர் சிறையின் கூரையின் மீதேறி நான்கு மணிநேரம் போராட்டம் நடத்தினார்.

தம்மைக் கைதுசெய்ய எவராவது முயன்றால் குண்டை வெடிக்க வைத்துத் தற்கொலை செய்து விடுவார் என அவர் மிரட்டியதால் பொலீஸாரோ, படையினரோ, சிறைக்காவலர்களோ அவரை நெருங்க முடியவில்லை.

எனினும், அவரின் கோரிக்கைக்கு இணங்க செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மற்றும் கண்காணிப்புக்குழு ஆகியவற்றின் அதிகாரிகள் அவசர அவசரமாக சிறைக்கு அழைக்கப்பட்டனர்.

அவர்கள் அக்கைதியுடன் இலாவகமாகப் பேசி, கூரையை விட்டு இறங்கி, சரணடைவதற்கு அவரை இணங்கவைத்தனர்.

சிறைக்கூரை மீதான இந்தப் போராட்டம் சுமார் 4 மணிநேரம் நீடித்தது. காலை 11 மணி அளவில் முடிவுக்குவந்தது.

சச்சு மாஸ்டரைச் சுட்டுக்கொன்ற கையோடு இக்கைதியை சிறைக்காவலர்கள் பிடிக்க

(16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். சிறையில் கைகலப்பு; அலுவலர் இருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம்,ஜூலை16

யாழ். சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கிடையில் நேற்று இடம்பெற்ற கைகலப்பு ஒன்றில் சிறைச்சாலை அத்தியட்சகரும் மற்றொரு அலுவலரும் காயமடைந்தனர்.

சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ்.சிவீசுந்தரம் இடது காதின் பின் பகுதியிலும் -

சிறைச்சாலை உத்தியோகத்தரான எஸ். பாலேந்திரா கையிலும் காயமடைந்தநிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## சிறைச்சாலை அதிகாரி மட்டக்களப்பு விரைவு!

மட்டக்களப்பு சிறைக்குள் இருந்த விளக்கமறியல் கைதிகளிடம் எப்படி ஆயுதம் வந்தது என்பதைக் கண்டறியவும், நேற்றைய சம்பவம் தொடர்பான மேலதிக விபரங்களைத் திரட்டவும் கொழும்பிலிருந்து சிறைச்சாலைத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் மட்டக்களப்புக்கு நேற்றே விரைந்து வந்தார். சிறைச்சாலை தலைமை அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரி தி.தனசிங்க விசாரணைகளை மேற்கொண்டு நீதி அமைச்சருக்கு அறிக்கையும் சமர்ப்பிக்க உள்ளார் என சிறைச்சாலைகள் ஆணையாளர் றூமிஸ்க்குத் தெரிவித்தார்.

## சயனைட் வைத்திருந்த தமிழ் இளைஞர் கைது

மட்டக்குளி,ஜூலை16

கொழும்பு மோதறையில் சந்தேகத்தின் பேரில ஒருவர் நேற்றுக்காலை பொலீஸாரால் கைதானார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கைதாகும் போது இந்த இளைஞரிடம் சயனைட் குப்பிகளும் விடுதலைப் புலிகளுடையவை என்று சந்தேகிக்கப்படும் கடிதத் தலைப்புக்களும் இருந்தன என்று மோதரைப்பொலீஸ் அத்தியட்சகர் டீ.எஸ்.விக்கிரமசிங்க தெரிவித்தார்

(16ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாகம் குறித்து 3 நாள் விவாதம்

கொழும்பு,ஜூலை16

விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்து தொடர்ந்து மூன்று நாள்கள் 20ஆம், 21ஆம், 22ஆம் திகதிகளில் நாடாளுமன்றில் விவாதிக்க அரசு கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்துள்ளதாக அறியவருகின்றது.

எதிர்வரும் 20ஆம் திகதி நான்காவது முறை

(16ஆம் பக்கம் பார்க்க)




லெப்.சீலன் (சாள்ஸ் அன்ரனி), வீரவேங்கைக் ஆனந்த் ஆகியோரின் 21ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் மீசாலை, வெள்ளாம்போக்கட்டி சீலன் பூங்காவில் நேற்று மாலை நடைபெற்றன. நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சி.செம்மனன் ஏற்றுவதையும், ஈகச்சுடரினை தென்மராட்சிக் கோட்ட அரசியல் பொறுப்பாளர் செ.கலைவாணன் ஏற்றிவைப்பதையும், மாவீரர்களின் திருவுருவப்படத்திற்கு முதியவர் ஒருவர் மலரஞ்சலி செலுத்துவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: எஸ்.எஸ்.ரூபன் - கொடிகாமம் செய்தியாளர்)



இப்பொழுது தேசிய சேமிப்பு வங்கி 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த பிரஜைகளுக்கு...

நிலையான வைப்புகளுக்கு 2% மேலதிக வருடாந்த வட்டியை மாதாந்தம் வழங்குகின்றது.

இன்றே அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தற்போது நடைமுறையிலுள்ள வட்டி வீதம் 8.75% வருடாந்த விளைவு வட்டி 9.1%

நிபந்தனை விதி மற்றும் ஆகக்கூடிய முதலீட்டுத்தொகை 15 லட்சம்

கௌரவ

மூத்த பிரஜைகளை கௌரவிக்கும் திட்டம்

NSB

உங்கள் குடும்ப வங்கி

# புலிகளை ஏமாற்றிவிடலாம் என கருணா மனப்பால் குடிக்கின்றார்

## அமெரிக்க ஆய்வு மையம் கருத்து

நியூயோர்க்,ஜூலை16

அரசியல் கட்சியொன்றை ஆரம்பிப்பதில் தமக்கு அக்கறை இருப்பதாகக் கருணா பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் கூறியிருந்தார். அவ்வாறு பொதுமக்கள் கண்ணில்படும் வகையில் அவர் வெளியில் வரப்போவதானது நிச்சயமாகப் புலிகளின் தாக்குதலுக்கான முக்கிய இலக்காக அவர் அமைந்துவிடுவார் என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். இதை மனதில் வைத்துக்கொண்டுதான் தாம் அரசியலுக்குள் வரப்போவதாக அறிவித்து, யுத்தத்தை ஊக்குவித்துப் புலிகளை மேலும் பலவீனப்படுத்திவிடலாம் என்று அவர் கருதியிருக்கிறார்.

-இவ்வாறு கூறியிருக்கிறார்கள் அமெரிக்க கேந்திர முன்னறிவிப்பு மையத்தைச் சேர்ந்த அரசியல் ஆய்வாளர்கள்.

விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்து சென்ற முன்னாள் தளபதி கருணாவுக்கு அமெரிக்காவின் மறைமுக சம்மதத்துடன் இலங்கை அரசின் உயர்மட்ட ஆதரவு இருந்து வருகின்றது. புலிகளைப் பலவீனமாக்குவதும் எதிர் நடவடிக்கைகளுக்குள் இழுத்துவிட்டு இறுதிக்கட்டமாக அவ்வமைப்பை முற்றுமுழுதாக அழித்தொழிப்பதுமே இத்திட்டத்தின் நோக்கமாகும் என்று தெரிவித்துள்ள ஆய்வாளர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

கருணா தொடர்ந்தும் புலிகள் இயக்கத் தலைமையைக் கண்டித்துவருவாரானால், அது அவரது அணிக்கும் புலிகளுக்குமிடையிலான போரை புதுப்பிக்கவே செய்யும். இதையே கொழும்பும் எதிர்பார்த்துக்கொண்டிருப்பது மட்டுமல்ல, முனைப்பாக மேலூக்கிவிடவும் செய்கின்றது.

அமைதிமுயற்சியை எவ்வாறு முன்நகர்த்துவது என்பதில் ஈடுபட்டிருக்கும் அதேநேரம், உள்சண்டைகளினால் புலிகள் பலவீனமடையவும் வேண்டும் என்பதையே கொழும்பு அதிகமாக விரும்புகின்றது. அதனால்தான் கருணா ஆரம்பித்த கிளர்ச்சியின்போது அரசு மறைமுக ஆதரவை வழங்கியது. இப்பவும்கூட அது கருணாவுடன் தொடர்புவைத்துள்ளது.

அவரது ஆறுவாரகால கிளர்ச்சி நசுக்கப்பட்டதின் பின் மூன்று மாதகாலம் கண்ணில் படாமல் இருந்துவந்த கருணா, கடந்த வாரம் மீண்டும் வெளிப்பட்டுள்ளார். ஸ்ரீலங்கா தொலைக்காட்சிக்கும் பி.பி.ஸிக்கும் தமிழ் செய்திச் சேவைக்கும் பேட்டியளித்துள்ளார்.

புலிகள் பல வருடங்களாகக் கொழும்புடன் போராடி வருகின்றார்கள். இந்தநிலையில், போர் தொடங்குமானால் இருதரப்பிலும் பெருமளவில் இரத்தம் சிந்தப்பட்டதன் பின்னரே ஒரு முடிவு ஏற்படமுடியும்.

புலிகள் பலவீனப்பட்டுவிடலாம், தன்னாட்சிக் கோரிக்கையை வற்புறுத்தும் நிலையிலிருந்து தளர்ந்து விடலாம். அதன்மூலம் உளநாட்டுக் கலவரம் முடிவுக்குவரலாம் என்று கருதப்படக்கூடும். ஆனால், காயமுற்ற புலியை ஏமாற்றுவதென்பது பயங்கர விளையாட்டாக முடிந்துவிடலாம்.

அமைதிப் பேச்சுக்கள் நிறுத்தப்பட்டுள்ள நிலையில் புலிகள் தமது கோரிக்கையைக் கைவிட்டால் அல்லது அரசு விட்டுக் கொடுத்தால் மட்டுமே, பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படமுடியும். அதுவரை காத்திருக்க வேண்டியது தான். இவ்வாறு 'ஸ்ட்ராட்போர்' என்ற அந்த ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. (ப)

## சுவிஸ் தமி[illegible]களின் உதைபந்தாட்ட அணிவருகை

யாழ்ப்பாணம்,ஜூலை16

புலம்பெயர்ந்து சுவிஸ் நாட்டில் வசிக்கும் ஈழத்தமிழர்களின் உதைபந்தாட்ட அணி ஒன்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்துள்ளது.

இந்த அணியினர் இன்று யாழ்ப்பாணத்தில் சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி ஒன்றில் பங்குகொள்ளவுள்ளனர்.

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் பிற்பகல் 4 மணிக்கு யாழ்.உதைபந்தாட்ட லீக் அணியுடன் சுவிஸ் அணியினர் மோதுவர். (ஐ)

## அமெரிக்க அரசியல் பிரமுகர் இன்று யாழ்.விஜயம்

கொழும்பு,ஜூலை16

அமெரிக்க தூதரகத்திலுள்ள அரசியல் அதிகாரிகளில் ஒருவர் கொடி சி.டெய்லர் அம்மையார் இன்று யாழ்ப்பாணம் விஜயம் செய்கின்றார்.

இலங்கையின் வடபகுதியில் உள்ள அரசியல் நிலைமைகள் குறித்து தெரிந்துகொள்வதற்காகவே அவர் இந்த விஜயத்தை மேற்கொள்கின்றார் எனத் தெரிவிக்கப்பட்டது.

அரச அதிகாரிகளையும் சிவில் சமூகத் தலைவர்களையும் இவர் சந்தித்து உரையாடுவார்.

டெய்லர் அம்மையாருக்கு பிரெஞ், தமிழ் மொழிகளில் பணியாற்றும் திறமையுண்டு.(ப)

## படகில் வெடிபொருள் இருந்ததாகக்கூறி

# குருநகர் மீனவர்கள் நால்வர் நேற்றுப் பொலீஸாரால் கைது!

மீன்பிடிப் படகில் வெடிபொருள்களை வைத்திருந்தனர் எனத் தெரிவித்து நான்கு மீனவரை குருநகர் - சீநோர் இறங்குதுறையில் வைத்து நேற்றுப் பொலீஸார் கைதுசெய்தனர்.

மத்திய கிழக்கு வீதி, குருநகரைச் சேர்ந்த வின்சன் சுமன், தொடர்மாடிப் பகுதியைச் சேர்ந்தவர்களான டொனால்ட் றீகன், கிறேசியன் ஜெகன் மற்றும் இராஜேந்திரா வீதி, குருநகரைச் சேர்ந்த மொஸ்கோ டால்கன் அல்லது ராஜன் ஆகியோரே இவ்வாறு சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

சீநோர் இறங்குதுறையில் இருந்து நேற்று முன்தினம் கடற்றொழிலுக்குச் சென்ற இவர்கள் நேற்றையதினம் கரைதிரும்பியபோது அங்கு கடமையில் இருந்த பொலீஸாரும், இராணுவத்தினரும் படகைச் சோதனை செய்தனர் என்றும் -

அப்போது குறித்த படகில் இருந்து உயிர்ச்சேதத்தை விளைவிக்கக் கூடியதான ஒரு கிலோ கிராம் நிறையுடைய ரி.என்.ரி. வெடிமருந்தும் அதற்குப் பயன்படுத்தப்படும் கருவிகள் நான்கையும் கைப்பற்றினர் - என்றும் கூறப்பட்டது.

இதனையடுத்து, சந்தேகத்தின்பேரில் குறிப்பிட்ட படகில் பயணம்செய்த நான்கு மீனவர்களையும் பொலீஸார் கைதுசெய்தனர்.

நால்வரும் நேற்று யாழ் நீதிமன்றில் மேலதிக மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில வைக்குமாறு உத்தரவு பிறப்பித்த நீதிபதி, வெடிபொருள்களை யாழ். பொலீஸ் நிலையத்தில பாதுகாப்பில் வைக்குமாறும் உத்தரவிட்டார். (எ-5-6)

# வீரமக்கள் தினத்தை ஒட்டி புளொட் அமைப்பு அறிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை16

புளொட் அமைப்பு அதன் வீரமக்கள் தினத்தை இன்று அனுஷ்டிக்கின்றது. இதனை ஒட்டி புளொட் அமைப்பின் யாழ். மாவட்ட உறுப்பினர்கள் இன்று முற்பகல் யாழ். ஆஸ்பத்திரி இரத்த வங்கிக்கு இரத்ததானம் செய்வர் என்று தெரிவிக்கப்பட்டது.

வீரமக்கள் தினத்தை ஒட்டி புளொட் அமைப்பின யாழ். மாவட்டப் பொறுப்பாளர் செ.இருதயராஜன் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த 25 வருடங்களாக நடைபெற்றுவரும் தமிழ்மக்களுடைய உரிமைப் போராட்டத்தில் சகல போராட்ட அமைப்புக்களையும் சேர்ந்த பல தலைவர்களையும், முப்பதினாயிரத்திற்கும மேற்பட்ட போராளிகளையும், அறுபதினாயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களையும் இழந்துள்ளதுடன் பல ஆயிரக்கணக்கான அங்கவீனர்களையும், மனநோயாளிகளையும், விதவைகளையும், அநாதைகளையும் உருவாக்கியுமுள்ளது. அப்படியிருந்தும், இதுவரை சரியான ஒரு தீர்வும் கிடைக்கப்பெறாத நிலையிலும் கடந்த 2002 ஆம் ஆண்டு அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒரு கேள்விக்குறியாகக் காணப்படுவதனால் தமிழ்மக்களின் நெஞ்சங்களில் மீண்டும் ஒரு யுத்தப் பீதி ஏற்பட்டுள்ளது. எமக்கு ஒரு விடிவு ஏற்படாதா? என ஏங்கித் தவிக்கின்றனர்.

இந்நிலை நீடித்துச் செல்வதற்குக் [illegible]ணம் எமது போராட்ட வரலாற்றில் தாம் விட[illegible] ஏதோ ஒரு தவறுதான் அடிப்படை என்பதை[illegible] சகல தரப்பும் உணர்ந்து, அத்தவறைத் திருத்துவதன் மூலமே உண்மையான, நீதி, ஜனநாயகம், மனிதநேயத்துடன் கூடிய ஒரு விடுதலையை வென்றெடுக்க முடியும். இதை உணர்ந்து சகல தரப்பும் தமது கட்சி வேறுபாடுகளை மறந்து ஒரு சரியான ஐக்கியப் பாதையில் செல்வதன் மூலமே எமது இலக்கை அடையமுடியும்.

இதுவே, போராட்ட வரலாற்றில் தம் இன்னுயிர்களை ஈந்த தலைவர்கள், தளபதிகள், அனைத்துப் போராளிகள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் நாம் செய்யும் உண்மையான அஞ்சலியாகும். உண்மையான ஐக்கியமே விடுதலைக்கான ஒரேவழி என்று எமது தலைவர் க.உமாமகேஸ்வரனின் கூற்றை நினைவுகொள்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அமெரிக்க விசாவுக்கு விண்ணப்பம்: முன்கூட்டியே அனுப்பக் கோரிக்கை

கொழும்பு,ஜூலை16

அமெரிக்காவுக்குச் செல்லவிரும்பும் இலங்கையர்களை முன்கூட்டியே விசாவுக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும்படி அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

அமெரிக்காவுக்கு வர்த்தக விடயங்களுக்காகவும், உல்லாசப் பயணங்களுக்காகவும் போக விரும்பும் இலங்கையர்களை விசாவுக்கும், நேர்காணலுக்குமான விண்ணப்பங்களைத் தொலைநகல் (பக்ஸ்) மூலம் அனுப்பிவைக்கும்படியும்-

விண்ணப்பங்களுக்கான பதில் இரண்டு வேலைநாள்களுக்குள் அனுப்பிவைக்கப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

தூதரகத்துக்கு ஏராளமான விண்ணப்பதாரிகள் வந்து சிரமப்படுவதைத் தவிர்ப்பதற்காக சகல விசா வழங்கும் நடவடிக்கைகளும் தொலைநகல் மூலமே மேற்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பயணம் மேற்கொள்வதற்கு ஆறு கிழமைக்குள் அல்லது அதற்கு முன்னதாக பயணிகள் தமது விசா மற்றும் நேர்காணல் செயறபாடுகளை முடித்துக்கொள்ளவேண்டும் என்றும்- தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## ஈழவேந்தனுக்கு இந்தியப் பிரதமர் கடிதம்

யாழ்ப்பாணம்,ஜூலை16

இந்தியாவின் பிரதமராகப் பதவியேற்றதற்கு வாழ்த்துத் தெரிவித்து தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் அனுப்பிவைத்த கடிதத்துக்கு இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் நன்றி, பாராட்டுத் தெரிவிக்கும் பதில் கடிதம் ஒன்றை ஈழவேந்தனுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

கடந்த 18.06.2004 ஆம் திகதியன்று நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாழ்த்துக்கள்' என்ற தலைப்பில் அனுப்பிவைத்த வாழ்த்துத்தெரிவிக்கும் கடிதத்துக்கே தற்போது இந்தியப் பிரதமரால் பதில் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (எ)

## நெல்லியடியில் திரைப்பட வட்ட படக்காட்சி

யாழ்ப்பாணம்,ஜூலை16

கட்டைவேலி - நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கலாசாரப் பெருமன்ற ஆதரவில் திரைப்பட வட்டம் நடத்தும் படக்காட்சி நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஜனநாதன் இயக்கத்தில் உருவான 'இயற்கை' என்னும் தமிழ்த்திரைப்படம் காண்பிக்கப்படும்.

திரைப்படத்தின் முடிவில் விமர்சனமும் கலந்துரையாடலும் இடம்பெறும். (ஐ)

# நெருப்புக்காய்ச்சலைத் தடுக்க[illegible] காரைநகரில் தீவிர நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை16

காரைநகர்ப் பகுதியில் பரவும் நெருப்புக்காய்ச்சல் நோயைத்தடுக்கும் நடவடிக்கையில் தமிழீழ சுகாதார சேவைகள் பிரிவினரும், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களும் இணைந்து ஈடுபட்டுள்ளனர்.

நெருப்புக்காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை குறித்து பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் கருத்தரங்குகளை அவர்கள் நடத்திவருகின்றனர். அத்துடன், நீர்நிலைகளுக்கு 'குளோரின்' இடும்பணியும் மேற்கொள்ளப்படுகிறது.

இதேவேளை, நெருப்புக்காய்ச்சலால் பாதிப்படைந்து சுற்றயல்கூறு மருத்துவமனைக்குச் சிகிச்சைக்காக வருவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதனால் ஏற்பட்டுள்ள இடநெருக்கடியைச் சமாளிக்க தேசிய எழுச்சிப் பேரவையினர் மருத்துவமனை வளாகத்தில் கொட்டகை அமைத்துக் கொடுத்துள்ளனர்.

இதற்கிடையில், காரைநகர் சிவகாமி அம்மன ஆலயத்திருவிழாவின்போது குடிதண்ணீருக்காகவும் சமையல் தேவைக்காகவும் பயன்படுத்தப்பட்ட கிணற்றுத்தண்ணீர் இந்த நோய் பரவ முக்கிய காரணம் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தமிழீழ சுகாதார சேவைகளின யாழ். மாவட்ட அமைப்பாளர் குணாளன் தெரிவித்தார். (ஒ)

## ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில்

# மணல் பெறுவதில் சிரமம்; கட்டடப் பணியில் தடங்கல்

ஊர்காவற்றுறை,ஜூலை16

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டடப் பணிகளுக்குத் தேவையான மணலை பெற்றுக்கொளவதில் துடங்கல ஏற்பட்டுள்ளதால் கட்டடப் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பகுதி கட்டடப் பணிகளுக்குத் தேவையான மணல் இதுவரை காலமும் வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சாட்டி, மண்கும்பான், அல்லைப்பிட்டி ஆகிய இடங்களில் இருந்து பெறப்பட்டு வந்தது.

ஆனால், அங்கு தொடர்ச்சியாக மணல் அகழ்வதன் மூலம் கடல்நீர் உட்புகுந்து அல்லைப்பிட்டியில் உள்ள குடிதண்ணீர் கிணறுகளை உவர்த்தன்மை கொண்டவையாக மாற்றிவிடும் அபாயம் உள்ளது எனக் கூறி வேலணைப் பிரதேச செயலகம் மணல் அகழ்வதற்குத் தடைவிதித்துள்ளது.

இந்தத் தடையினால் ஊர்காவற்றுறைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவந்த கட்டடப் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மணல் அகழ்விற்கு பொருத்தமான இடத்தினை தெரிவுசெய்து வழங்க வேண்டும் எனப் பொதுமக்கள் தரப்பில் எதிர்பார்க்கப்படுகிறது. (எ-9-16)

## நிவாரணம் பெறுவோர் விவரம் மீளாய்வு

ஊர்காவற்றுறை,ஜூலை16

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராமசேவை அலுவலர் பிரிவு ரீதியாக உலர் உணவு பெறுபவர்களின் விவரங்கள் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

இவ்வாறு மீளாய்வு செய்யப்பட்டு ஆயிரத்து 500 ரூபாவிற்கு உட்பட்ட வருமானம் பெறுபவர்களின் பெயர்ப்பட்டியல் கிராம சேவை அலுவலர்களினால் தயாரிக்கப்பட்டு பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்படவுள்ளது.

எனவே, பொதுமக்கள் மேற்படி பட்டியலை தத்தமது பிரிவு கிராமசேவை அலுவலர் அலுவலகத்தில் பார்வையிட்டு அது தொடர்பான ஆட்சேபனை ஏதும் இருப்பின் அதனை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு சமர்ப்பிக்குமாறு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் அறிவித்துள்ளார். (எ-16)

## யூபிலித் திருவிழா

யாழ்ப்பாணம்,ஜூலை16

இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தின் 125 ஆவது ஆண்டு யூபிலித் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தினமும் மாலை 6 மணிக்கு நவநாள் வழிபாடுகள் நடைபெறும். (8)

உதயன்

# அரசுக்கும் அழுத்தம் கொடுக்குமா அமெரிக்கா?

கொழும்பு கொள்ளுப்பிட்டி பொலீஸ் நிலையத்துக்குள் நடந்த தற்கொலைக் குண்டு வெடிப்பை அமெரிக்கா கண்டித்திருக்கின்றது.

இந்தத் தாக்குதலின் சாயலைப் பார்க்கும்போது இது தமிழீழ விடுதலைப் புலிகளின் கைவரிசை என்பது போலத் தோன்றுகின்றது என அமெரிக்கா தெரிவித்துள்ளது. இவ்விவகாரம் தொடர்பாகக் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் ஒரு கண்டன அறிக்கையையும் வெளியிட்டுள்ளது.

இதேபோன்ற கருத்து குண்டுத் தாக்குதல் இடம்பெற்று சில மணி நேரத்தில் வாஷிங்ரனிலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாக அறியவருகின்றது.

அச்சமயம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவரான இரா. சம்பந்தன் எம்.பியும் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பியும் வாஷிங்ரனில் இருந்தனர். அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான பிரதி அமைச்சர் கிறிஸ்ரீனா ரொக்காவை அவர்கள் இருவரும் அப்போது சந்திக்க ஏற்பாடாகி இருந்தது.

சில மணி நேரங்களுக்கு முன்னர் கொழும்பில் இடம்பெற்ற இந்தத் தற்கொலைக்குண்டுத் தாக்குதலை ஒட்டி, இச்சந்திப்பின்போது ஈழத்தமிழர்களுக்கு எதிராகக் கரித்துக்கொட்டிக் கருத்து வெளியிட்டனராம் அமெரிக்கத் தரப்பினர். தமிழர் பிரதிநிதிகளும் பலமாகப் பதில் கொடுத்தனர் என அறியக்கிடக்கிறது.

விடுதலைப் புலிகளினால் புதிய வடிவம் கொடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டதே 'உயிராயுதம்' என்று கூறப்படும் இந்தவகைத் தற்கொலைத் தாக்குதல்களாகும்.

இராணுவ ரீதியிலும், ஆயுத வலுவிலும், தொழில்நுட்ப வசதியிலும் மிகுந்த பலம்பெற்று விளங்கும் அமெரிக்கா போன்ற நாடுகளுக்குக்கூட இன்று சர்வதேச ரீதியில் தலையிடி கொடுக்கும் விவகாரமாக மாறியிருப்பது இந்த உயிராயுதம்.

அந்த ஆயுதம் புதிய பரிணாமமும், பரிமாணமும் பெற்ற மண்ணில் மீண்டும் அது பயன்படுத்தப்பட்டிருப்பது அமெரிக்காவுக்கு மிகுந்த எரிச்சலை ஊட்டியிருக்கும் என்பது, சர்வதேச நடப்புகளை அறிந்து கொண்டோருக்கு - விளங்கிக் கொண்டோருக்கு - நன்கு புரியும். அதையே அமெரிக்கத் தரப்பு வெளிப்படுத்தியிருக்கின்றது.

ஆனால், இத்தகைய நிலைமை இந்த மண்ணில் மீண்டும் துளிர்த்ததற்கான - துளிர்ப்பதற்கான - காரணத்தையும் அமெரிக்கா புரிந்துகொள்ள முன்வரவேண்டும் என்பதே தமிழரின் விநயமான எதிர்பார்ப்பாகும்.

இனத்தின் வாழ்வுரிமைக்காக - இருப்புக்காக - பாதுகாப்புக்காக - உயிர்களைத் தற்கொடை செய்து, ஆயுதம் ஏந்திப் போராடிய ஓரினம், தன்னுடைய போராட்டத்தையும் ஆயுதங்களையும் ஒதுக்கிவைத்துவிட்டு அமைதி வழியில் - சமாதான முறையில் - ஒரு தீர்வைக் காண வாய்ப்பளித்து, அதற்கான தீராத தாகத்தோடு காத்து நிற்கின்றது.

இரண்டரை வருட யுத்தநிறுத்தகாலம் பலனின்றி அவமே கழிந்த நிலையில், பேரினவாதத்தின் கபளீகரப் பிடி மீண்டும் இறுகி வருவதையே தமிழினமும் சர்வதேச உலகமும் இன்று காண்கின்றன.


ஈழத்தமிழர் கேட்பதெல்லாம் பேரழிவினாலும் போரழிவுகளினாலும் நாசமான தமது தாயகப் பூமியின் அடிப்படை மனிதாபிமானத் தேவைகளை அவசரமாக நிறைவு செய்வதற்கு அதிகாரப் பலமுடைய ஓர் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை ஏற்படுத்தித் தாருங்கள் என்பதைத்தான். அதைச் செய்து, அதன் மூலம் இதுவரை காலமும் போரினால் அவலப்பட்டு, நலிவடைந்து, நிர்க்கதியாகி அந்தரிக்கும் தமிழ் மக்களுக்கு ஒரு தற்காலிக நிம்மதிப் பெருமூச்சைவிட வாய்ப்பளித்துவிட்டு, நிரந்தரத்தீர்வு குறித்துப் பேசலாம் என்பதைத்தான்.

அதைச் செய்யாமல் - செய்யமுன்வராமல் - காலத்தை இழுத்தடித்து, மீண்டும் ஒரு போரைத் தமிழர் மீது திணிக்கத் தயாராகின்றது பேரினவாதம். இதனை அமெரிக்கா புரிந்துகொள்ள முன்வரவேண்டும்.

ஈராக் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்புக் கடந்த ஆண்டுதான் ஆரம்பமாயிற்று. ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கிய அந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காணமுடியாத அமெரிக்க அரசு, இப்போது அங்கு இடைக்கால அரசு ஒன்றைத்தான் உருவாக்கிக் கொடுத்துவிட்டு - அந்த நாட்டைக் கைகழுவிவிட்டு - நழுவப் பார்க்கின்றது.

தன்னுடைய நேரடி ஆக்கிரமிப்பில் இருக்கும் நாட்டில் - ஆக ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பமான பிரச்சினைக்கு - இடைக்கால நிர்வாகத்தைத்தான் இப்போதைக்குத் தீர்வாகவைக்க முடிந்துள்ளதை உணர்ந்துள்ள அமெரிக்க அரசு, சுமார் ஐம்பது ஆண்டுகால சரிதம் கொண்ட இலங்கை இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்று உடனடியாகச் சாத்தியமானது அல்ல என்பதையும் ஈராக் போன்று இயங்கும் இடைக்கால நிர்வாகமே முதலில் அவசியம் என்பதையும் ஏற்றுக்கொள்ள முன்வரவேண்டும்.

தற்கொலைக் குண்டுத் தாக்குதலைக் கண்டிக்கும் அதேவேகத்தில் - அதே உரத்தோடு - இடைக்கால நிர்வாகத்தை வழங்க முன்வரும்படி சிங்களப் பேரினவாதத்துக்கும் அழுத்தம் கொடுக்க அமெரிக்கா முன்வரவேண்டும். அதுதான் பக்கச்சார்பற்ற நியாயம். அதைச் செய்யுமா அமெரிக்கா?



நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வருகைதந்த பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, மல்லாகம் நீதிமன்றுக்கும் விஜயஞ்செய்தார். பொலீஸ் பாதுகாப்புடன் நீதியரசர் மல்லாகம் நீதிமன்றின் முன்றிலில் வாகனத்தில் வந்திறங்குவதையும், அங்கு இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் உரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம். மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா, மல்லாகம் நீதிபதி மாவட்ட திருமதி சறோஜினி இளங்கோவன் ஆகியோர் இரு மருங்கிலும் காணப்படுகின்றனர். *(படங்கள்: தெல்லிப்பழைச் செய்தியாளர்)*

# 'அம்புலன்ஸ்' படகின் தரிப்பிடம் குறிகாட்டுவானிலேயே அமையும்

யாழ்ப்பாணம்,ஜூலை16

தீவகத்துக்கான 'அம்புலன்ஸ்' படகு குறிகாட்டுவானிலேயே தரித்து நிற்கும். இதில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ள முடியாது.

- இவ்வாறு தெரிவித்தார் பிரதி மாகாணச் சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி இ.தெய்வேந்திரம்.

தீவகத்தில் நோயாளர் அம்புலன்ஸ் படகுச் சேவை ஆரம்பிக்கப்பட்டால் அம்புலன்ஸ் படகை நெடுந்தீவுத் துறைமுகத்தில் தரித்துநிற்க ஆவனசெய்யுமாறு கோரி நெடுந்தீவுப் பிரதேச செயலர் பிரதி மாகாணச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரத்திற்குக் கடிதமொன்றை அனுப்பிருந்தார்.

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் நிதியுதவியுடன் தீவகப் பகுதிக்கான நோயாளர் படகுச் சேவை அடுத்த மாத முற்பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன் அடிப்படையிலேயே பிரதேச செயலர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

நெடுந்தீவுப் பகுதியில் உள்ள துறைமுகத்தில் அம்புலன்ஸ் படகினைத் தரிதது நிற்க உதவினால் இப்பகுதியில் உள்ள நோயாளர்களை வெகுவிரைவாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லமுடியும.

இதனால், இப்பகுதி மக்கள், குறிப்பாக நோயாளிகள் தமது அசௌகரியங்களைத் தவிர்த்துக்கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தக் கடிதம் தொடர்பாகப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி கருத்துத் தெரிவிக்கையில்:-

நயினாதீவு, அனலைதீவு, நெடுந்தீவு, எழுவைதீவு ஆகிய பகுதிகளிலுள்ள நோயாளர்களை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரும் பணியில் ஈடுபடவுள்ள இந்தப் படகிற்குக் குறிகாட்டுவான்தான் தரிப்பிடமாக அமையும். அதுவே அனைத்துப் பகுதிகளுக்கும் பொதுவான இடமாகும். எனவே, குறிகாட்டுவான் பகுதியிலேயே இந்தப் படகின் தரிப்பிடம் அமையும். இதில் எந்தவித மாற்றங்களையும் செய்யமுடியாது - என்றார்.

இந்த நோயாளர் அம்புலன்ஸ் படகுச் சேவையினை ஆரம்பிப்பதற்கான ஆயத்த வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. அடுத்த வார முற்பகுதியில் படகுச் சேவையிலீடுபடும் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-13)

## பொதுமக்கள் அதிருப்தி

வலி.மேற்கு,ஜூலை16

வலி.மேற்குப் பிரதேச சபையின் வீதிப் புனரமைப்பு நடவடிக்கை குறித்து பிரதேச மக்கள் அதிருப்தி வெளியிடுகின்றனர்.

வலி.மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பல முக்கிய வீதிகள் கடந்த பல வருடங்களாக கவனிப்பாரற்று குண்டும் குழியுமாகக் காட்சியளிக்கின்றன. இந்த நிலையில் பிரதேச சபையினர் பொதுமக்கள் மிகக் குறைந்த அளவில் பயன்படுத்தும் சிறிய வீதிகளைத் திருத்தியமைப்பதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் நடைபெற்ற வலி. மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் இது குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது. (ஒ-175)

## அரியாலை, நெடுங்குளத்தில் தகாத செயல்கள் அதிகரிப்பு

கொழும்புத்துறை,ஜூலை16

அரியாலை, நெடுங்குளம் பகுதிகளில் கசிப்பு உற்பத்தியும், சட்டவிரோத மதுபான விற்பனையும் அதிகரித்துக் காணப்படுகிறன.

இப்பகுதிகளில் உள்ள மக்கள் மீளக் குடியமராத சேதமடைந்த கட்டடப் பகுதிகள் கசிப்பு உற்பத்தி செய்யப்படும் இடங்களாகப் பயன்படுகின்றன.

கசிப்பு மற்றும் மதுபானம் அருந்திப் போதை தலைக்கேறியவர்கள் வீதிகளில் தகாத வார்த்தைகளைப் பேசியும் பெண்கள் உட்படப் பாதசாரிகளுக்குத் தொல்லை விளைவித்தும் வருவதாகவும் மக்கள் தரப்பில் கூறப்படுகிறது.

இதேவேளை, இவ்வாறான மக்கள் குடியமராத வீடுகளில் இரவுபகலென்று பாராது ஜோடிகள் பலவும் தகாத செயல்களில் ஈடுபட்டு வருகின்றன என்றும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ஒ-30)

## உதயவாக்கு

ஆடி மாதத்தில் தேடி விதை போடு.

## நாளை

ஆடி 02
சனிக்கிழமை
(17.07.2004)
திதி : அவமாசை
பகல் 5.19 வரை.
அமாவாசை விரதம்
நட்சத்திரம்: புநர்பூசம்
இரவு 9.51 வரை.
சுபநேரம்: 3.00 - 4.30
ராகுகாலம்: 9.00 - 10.30
(பழைய நேரப்படி)

### மக்கள் வங்கியில் நடைமுறையிலுள்ள

# சேமிப்பு, கடன் திட்டங்களுக்கு தமிழில் பெயரிட நடவடிக்கை

தென்மராட்சி,ஜூலை16

மக்கள் வங்கியினால் சிங்களப் பெயர்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சேமிப்பு மற்றும் கடன் திட்டங்களைத் தமிழ்ப் பெயர்களில் செயற்படுத்துமாறு மக்கள் வங்கியின் வடவலயத்தினர் மக்கள் வங்கியின் தலைமைப்பீடத்தைக் கோரியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சிங்களப் பெயர்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தத் திட்டங்களைத் தமிழ் வாடிக்கையாளர் விளங்கிக் கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இதனை மக்கள் வங்கியின் தலைமையகத்திற்கு வடவலயத்தினர் விளக்கியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து விரைவில் இந்தத் திட்டங்கள் தமிழ்ப் பெயர்களில் தமிழ்ப் பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது மக்கள் வங்கியில் நடைமுறையில் உள்ள சிசு உதான, இசுறு உதான, வனிதா வாசனா, ஜனஜெய போன்ற சேமிப்புத் திட்டங்களிலும் -

குருசெத, சுவசெவன, பிரணாம போன்ற கடன் திட்டங்களிலும் - பயன்படுத்தப்படும் சிங்களப் பெயர்கள் தமிழ்ப் பெயர்களில் செயற்படுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக மக்கள் வங்கியின் வடவலய வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-117)

# விசர் நாய்க்கடித் தடுப்பு மருந்துக்கு யாழ். மருத்துவமனையில் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம்,ஜூலை16

விசர் நாய்க்கடிக்குள்ளாவோருக்கு தடுப்பூசி போடமுடியாத அவலநிலை யாழ். போதனா வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ளது.

யாழ். மருத்துவமனையில் விலங்குக் கடிச்சிகிச்சைப் பிரிவு மருத்துவர் ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது நாய்க்கடிக்கு இலக்காகிச் சிகிச்சைபெறுவதற்காகத் தினமும் குறைநதது 10 பேராவது யாழ் மருத்துவமனைக்கு வருகின்றனர்.

இராணுவ முகாம் மற்றும் பொலீஸ் நிலையங்கள் ஆகிய பகுதிகளையண்டிய இடங்களிலேயே கட்டாக்காலி நாய்கள் அதிகம் காணப்படுகின்றன. இவை வீதியில் செல்லும் பொதுமக்களைக் கடித்து வருகின்றன.

கடந்த மாதம் மட்டும் சுமார் 260 பேருக்குத் தடுப்பூசி போடப்பட்டது. தற்போது இந்தத் தடுப்பூசி கொழும்பிலிருந்து தருவிக்கப்படுவது குறைந்துவிட்டது.

இதேவேளை, கட்டாக்காலி நாய்களின் கடிக்கு இலக்காகிவருவோரின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கிறது.

எனவே, இதற்குப் பொறுப்பான நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்காவிட்டால் நாய்கடியால் இறப்போரின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அவர் தெரிவித்தார்.

கடந்த சில நாள்களாக நாய்கடிக்கு இலக்காகி வருவோரைத் தடுப்பூசி ஏற்றுவதற்காக வேறு மருத்துவமனைகளுக்கு அனுப்பிவருவதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ-117-185-15)

## இன்று ஆடிப்பிறப்பு

*ஆடிப்பிறப்பும் வந்ததடி ஆனந்தமுமே வந்ததடி*
*ஒடியேவந்து சேருங்கடி ஒற்றுமையாக வாருங்கடி*
*கூடிப் பனங்கட்டிக் கூழுங் குடிக்கலாம்*
*கொழுக்கட்டை தின்னலாம் வாருங்கடி*
*பாடிப்பாடி நின்றே பந்தும் அடிக்கலாம்*
*பலரும் குடிக்கலாம் ஓடிவாருங்கடி*
*தேடிப்பிடித்து நல்ல கும்மியடிக்கலாம்*
*கூடிக் குடிக்கலாம் ஓடி வாருங்கடி.*

- திருவரன்.

# மாகாணப் பாடசாலை ஆசிரியர்கள் இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்

கொழும்பு,ஜூலை16

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலை ஆசிரியர்களிடமிருந்து 2005 ஆம் ஆண்டிற்கான இடமாற்றங்களை மேற்கொள்வதற்கு மாகாணக் கல்வித் திணைக்களம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இதுதொடர்பான சுற்றறிக்கையொன்று மாகாணக் கல்விப் பணிப்பாளரால் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

குறித்தவொரு வலயத்துக்குட்பட்டதாகவும், இரு வெவ்வேறு வலயங்களுக்குமிடையிலும், மாவட்டங்களுக்கிடையிலும், மாகாணங்களுக்கிடையிலும் என நான்கு வகையான இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மாவட்ட மற்றும் மாகாணங்களுக்கிடையிலான இடமாற்றங்களைக் கோரும் விண்ணப்பங்களை ஆசிரியர்கள் தமது பாடசாலை அதிபர் ஊடாக செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்கவேண்டும். வலயத்துக்குட்பட்ட இடமாற்றத்திற்கான விண்ணப்பங்கள் ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னரும் -

வலயங்களுக்கிடையிலான இடமாற்ற விண்ணப்பங்கள் ஒக்ரோபர் 29 ஆம் திகதிக்கு முன்னரும் அனுப்பிவைக்கப்படவேண்டும்.

2005 ஆம் ஆண்டு ஜனவரி மாத ஆரம்பத்தில் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் அந்தச் சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-13)

## சமாசத்தின் பொதுக்கூட்டம்

குருநகர்,ஜூலை16

வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பொதுக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். பிரதானவீதியில் உள்ள சமாசப் பணிமனையில் நடைபெறவுள்ளது. (10-201-51)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

### உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 2678527 இலிருந்து 2696946 வரை

சீட்டிழுப்பு இல. 1521 திகதி 14.07.2004

வெற்றி எண்கள்

12 17 33 38 53

போனஸ் எண் 08

ஜக்பொட் பரிசு ரூபா. 1,01,27,150/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | ஒரு பரிசுத்தொகை |
|---|---|---|---|
| 5 | - | 1,01,27,150/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 02 | 1,00,000/- | 2,00,000/- |
| 4 | 114 | 10,000/- | 11,40,000/- |
| 3 | 5,773 | 500/- | 28,86,500/- |
| 2 | 97,055 | 20/- | 19,41,100/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 12ம் எண் (போனஸ் எண் தவிர்ந்து) | 1,19,481 | 10/- | 11,94,810/- |

இந்த சனிக்கிழமை ஜக்பொட்

Rs. 1,05,87,650/-

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ. 73,62,410/-

தொடர் இல. 3636709 க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுக்கள் 2004 ஜூலை 17 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

சனிக்கிழமை அதிர்ஷ்டச் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகை, தையல் இயந்திரம் மற்றும் பைசிக்கிளை வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2683381-5-70
2681632-1-79
2679988-1-90
2681796-7-16
2687576-8-52


## 31ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 1935 - 07 - 05 |  | 2004 - 06 - 16 |

அமரர் **செல்லையா சிவபாக்கியம் J.P.**

(வேங்கை - முன்னாள் தலைவர்,
அரியாலை, தெ.ப.வ.அ.கூ. சங்கம்)

*பெருஞ்சுமை தான்தாங்கிய பெரு விருட்சமே! ஐயாவே!*
*பெருமைகளும் தான்தாங்கிய பேரறிவுளரே! ஐயாவே!*
*வறுமைநிலை தெரியாது வளர்த்தவரே! ஐயாவே!*
*குறுகியதொரு காலமதில் எங்குற்றீரோ! ஐயாவே!*

இன்று (16.07.2004) வெள்ளிக்கிழமை எமதில்லத்தில் நடைபெறும் எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டி நிகழ்விலும் அவரின் நினைவார்ந்த மலர் வெளியீட்டிலும் தொடாந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

'மனோகரா'
மாவடிச்சோலை,
அல்வாய் தெற்கு, அல்வாய்.

- குடும்பத்தினர்.

(34158)(24-19-34)

## சிரமதானம்

நீர்வேலி,ஜூலை16

உள்ளூராட்சி வாரத்தையொட்டி வலி.கிழக்கு பிரதேச சபையின் அச்சுவேலி உப அலுவலக ஏற்பாட்டில் பிரதேசசபை ஊழியர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை அச்சுவேலி இந்து மயானத்தைச் சிரமதானமூலம் துப்புரவுசெய்தனர்.

இதேவேளை - உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி பிரதேச சபைக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே கரபந்தாட்டம், எல்லே போட்டிகள் நடத்த விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

(ஜ-110)

## சமாசத்தெரிவும் கலந்துரையாடலும்

நீர்வேலி,ஜூலை16

2004ஆம் ஆண்டுக்கான நன்கொடை வழங்கல் தொடர்பான கலந்துரையாடலும், சனசமூக நிலையங்களுக்கான சமாசத்தெரிவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பி.ப. 3.00 மணிக்கு நீர்வேலி கந்த சுவாமி கோயிலடியில் உள்ள மாதர்சங்கக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா கலந்துகொண்டு கருத்துரை வழங்குவார். இப்பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலைய உறுப்பினர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு சபையின் செயலாளர் கேட்டுள்ளார்.

(ஜ-110)

## தமிழ்த்தின விழா

வட்டுக்கோட்டை,ஜூலை16

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியின் தமிழ்த்துறையினர் நடத்தும் தமிழ்த்தினவிழா எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணிக்குக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் சிரேஷ்ட மாணவத்தலைவி ஆ.அனுசியா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ்ப்பாணக் கல்லூரிப் பட்டப்படிப்புகள் பீட இயக்குநர் அ.குமாரவேலும் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வின் இறுதியில் கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

(10-161)


FedEx Express

விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது

இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும் விரைவாக பொதிகள், கடிதங்களை அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

THIRUMURUGAN COM NET

Opposite Diolag phone shop
259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7835
Fax:021 222 7836 E.mail:thirumurugan5@lycosmail.com

46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
T.P: 021 222 7560
Fax:021 222 7310


## Applications are called for Project Management Assistant in Planning Division

**Qualifications:** Graduate in management studies in English medium.

Applications to be sent to Director of Planning, Tamils Rehabilitation Organization, Kandy Road, Kilinochchi, Before 25th of July.

**TRO, Board of Directors.**

(34153)(42)

## தென்மராட்சி மக்கள் நலச்சேவைகள் சங்கம்

ஆஸ்திரேலியா - தென்மராட்சி அபிவிருத்தி நிறுவனம்

மற்றும்

சாவகச்சேரி நகரசபை

ஆகியவற்றின் அனுசரணையுடனான

### கணனிக் கற்கை நெறி

மேற்படி கற்கை நெறியில் கொழும்பு பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் (வெளிவாரி) தகவல் தொழில்நுட்பமானி (BIT) பரீட்சைக்குரிய வகுப்புகள் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளன. இக்கற்கை நெறிக்குத் தகுதிவாய்ந்த விரிவுரையாளர்களிடமிருந்து பின்வரும் பாடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. கணனிக் கற்கைக்கான கணிதம் (Mathematics for Computing)
2. கணனிச் செயலொழுங்கு அடிப்படைகள் (Fundamentals of Programming)
3. தற்பயன் கணனிப் பிரயோகங்கள் (PC Applications)
4. தொகுதிப் பகுப்பாய்வும் வடிவாக்கலும் (Systems Analysis and Design)

தங்கள் சுயவிவரம் அடங்கிய விண்ணப்பத்தை பின்வரும் முகவரிக்கு 28-07-2004ஆம் திகதிக்குப் பிந்தாமல் அனுப்பிவைக்கவும்.

கு.அரசநாதன்
இணைப்பாளர்,
தென்மராட்சி மக்கள் நலச் சேவைகள் சங்கம்,
இல.10, கண்டுவில் ஒழுங்கை, சாவகச்சேரி.
தொலைபேசி: 0777 - 613653

(34155) (24-19-34)


## பரதநாட்டிய அரங்கேற்றம்



அன்புடையீர்!
எங்கள் செல்வப் புதல்வியும்,
திருமறைக் கலாமன்ற மாணவியும்
நுண்கலைமாணி,
நாட்டியக் கலாவித்தகர்
ஸ்ரீமதி ஆனந்தஜோதி தர்ஷனன்
அவர்களின் மாணவியுமாகிய

செல்வி சுதர்சினி லூர்த்துநாதன்



அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம்
18.07.2004 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு
யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளதால்
உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும்
கலை ஆர்வலர்கள் அனைவரும் குடும்ப சமேதரராய்
வருகைதந்து அரங்கேற்றம் காணும் செல்வியை ஆசீர்வதித்து,
வாழ்த்தி விழாவைச் சிறப்பிக்குமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

28. இரண்டாம் குறுக்குத் தெரு,
குருநகர், யாழ்ப்பாணம்.

தங்கள் நல்வரவை நாடும்:
திரு.திருமதி லூர்த்துநாதன்.



(C-36001)

# ஆசியக்கிண்ணம் எந்த அணிக்கு?




# ஆறு நாடுகள் களத்தில்

**ஆ**று நாடுகள் கலந்துகொள்ளும் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி இன்று கொழும்பில் கோலாகலமாக ஆரம்பமாகிறது.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ்,ஹொங்ஹொங் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய ஆறு நாடுகள் போட்டியில் கலந்துகொள்ளவுள்ளன. இந்த ஆறு நாடுகளும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு 'ஏ' பிரிவில் பாகிஸ்தான், பங்களாதேஷ், ஹொங் ஹொங் ஆகியனவும் 'பி' பிரிவில் இந்தியா, இலங்கை, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகியனவும் இடம்பெற்றுள்ளன.

இந்த அணிகளுக்கிடையிலான லீக் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன. போட்டிகள் யாவும் கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்திலும், ஹெத்தாராம மைதானத்திலும், தம்புள்ள மைதானத்திலும் நடைபெறவுள்ளன. லீக் போட்டிகளின் நிறைவில் இரு பிரிவுகளிலும் முதலிரண்டு இடங்களைப் பெறும் அணிகள் இரண்டாவது சுற்றுக்குத் தகுதிபெறும். இச் சுற்றில் ஒவ்வோர் அணியும் மற்றய அணிகளுடன் மோதவுள்ளன. இப்போட்டிகளின் இறுதியில் முதலிரு இடங்களைப் பெறவுள்ள அணிகள் அடுத்தமாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ள இறுதியாட்டத்தில் மோதவுள்ளன.

இப்போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள 6 அணிகளில் ஹொங்ஹொங் அணியும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியும் கிரிக்கெட்டைப் பொறுத்தவரையில் கத்துக்குட்டிகள் என்றே சொல்லவேண்டும். அதேபோன்று பங்களாதேஷ் அணி பல ஒருநாள் போட்டிகளில் விளையாடியிருந்தாலும் கூட இதுவரையில் எந்தத் தொடரிலும் வெற்றியீட்டியதில்லை. விரல்விட்டு எண்ணக்கூடிய அளவுக்கு மூன்று நான்கு போட்டிகளில் மாத்திரமே வெற்றியீட்டியுள்ளது. இரு தடவைகள் மேற்கிந்தியத் தீவுகள் அணியையும் ஒருதடவை பாகிஸ்தான் அணியையும் வெற்றிகொண்டுள்ளது.

**ஜெயஸ்ரீ**

எனவே, கிண்ணத்தைக் கைப்பற்றுவதற்குப் போராடக்கூடிய அணிகளாக இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய மூன்று அணிகளையே கிரிக்கெட் ரசிகர்களும் சரி அவதானிகளும் சரி எதிர்பார்க்கிறார்கள். இந்த அணிகளில் கிண்ணத்தைக் கைப்பற்றப்போவது எந்த அணி என்பது தீர்மானிக்க முடியாத ஒரு விடயமாகவே உள்ளது. ஏனெனில் மூன்று அணிகளிலும் கணிசமான அளவில் இளம் வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். இடம்பெற்றுள்ள அந்த வீரர்கள் யாவரும் தமது திறமைகளை நன்கு வெளிப்படுத்தியும் வருகின்றனர். அதிலும் குறிப்பாக இந்திய அணி அண்மைக்காலமாகப் பல வெற்றிகளை ஈட்டியுள்ளது. அந்த அணியில் இடம்பெற்றுள்ள வீரர்கள் பலரும் தமது அணி ஆசியக் கிண்ணத்தைக் கைப்பற்றும் என்று தெரிவித்துள்ளனர். அதற்காகப் பாகிஸ்தான் அணியையோ அல்லது இலங்கை அணியையோ குறைவாக மதிப்பிடமுடியாது.

இலங்கை அணியைப் பொறுத்த வரையில தனது சொந்த நாட்டில் விளையாடுகிறது. அதுவே ஒரு பலத்தை அணிக்குக் கொடுக்கும். அத்துடன் இளம் வீரர்கள் பலர் அணியில் இடம்பெற்றுள்ளனர். அவர்கள் பந்துவீச்சிலும் துடுப்பாட்டத்திலும் நன்கு பிரகாசித்து வருகின்றனர். பாகிஸ்தான் அணியிலும் கடந்த உலகக் கிண்ணப் போட்டியின் பின்னர் பல சிரேஷ்ட வீரர்கள் நீக்கப்பட்டுப் புதிய இளம் வீரர்கள் உள்வாங்கப்பட்டனர். அந்த வீரர்கள் மிகவும் சிறப்பாகத் தமது பங்களிப்பை அணிகு வழங்கி வருகின்றனர். அண்மையில் இந்திய அணியுடன் இடம்பெற்ற 5 போட்டிகள் கொண்ட ஒருநாள்த் தொடரை இந்திய அணி 3-2 என்ற கணக்கில் கைப்பற்றியிருந்தாலும்கூட பாகிஸ்தான் அணி மிகவும் போராடியே தோல்வியுற்றது. எனவே பாகிஸ்தான் அணியும் ஏனைய அணிகளுக்குச் சவாலாகவே இருக்கும்.

2002 ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற மினி உலகக் கிண்ணப் போட்டியின் இறுதிப் போட்டியில் இலங்கை அணியும் இந்திய அணியும்விளையாடியபோதும் மழையின் காரணமாக வெற்றிதோல்வி தீர்மானிக்கப்படவில்லை. இரு தினங்கள் இறுதிப்போட்டி நடைபெறறது. முதல்நாள் மழை குறுக்கிட்டதை அடுத்து மறுநாள் மீண்டும் போட்டி நடைபெற்றது. மறுநாளும் மழை குறுக்கிட்டதை அடுத்து இரு அணிகளுக்கும் கிண்ணம் வழங்கப்பட்டது. ஆயினும் இரண்டு நாள்களும் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணியை 220 ஓட்டங்களுக்குள் இந்திய அணி ஆட்டமிழக்கச் செய்ததை குறிப்பிடத்தக்கது. இதனபோது இந்திய அணி துடுப்பெடுத்தாடியிருந்தால் நிச்சயம் போட்டியில் வெற்றியீட்டிக் கிண்ணத்தைக் கைப்பற்றியிருக்கும் என்றே அநேகமான ரசிகர்கள் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

எது எப்படியோ கிண்ணம் எந்த அணிக்கு என்ற வழமையான எதிர்பார்ப்பை விட்டுவிட்டு அடுத்த மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் விளையாடவுள்ள இரு அணிகளும் எவை? என்று சற்று வித்தியாசமாக எதிர்பார்ப்போம். ★

*முதற் கட்டப் போட்டிகள்*

**இன்று:** பங்களாதேஷ்-ஹொங்ஹொங்-(எஸ்.எஸ்.சி.), இந்தியா-ஐ.அ.எமிரேட்ஸ்-(தம்புள்ள),

**நாளை சனிக்கிழமை:** பாகிஸ்தான்-பங்களாதேஷ் (எஸ்.எஸ்.சி.), இலங்கை-ஐ.அ.எமிரேட்ஸ் (தம்புள்ள),

**நாளை மறுதினம்ஞாயிறுக்கிழமை:** பாகிஸ்தான்-ஹொங்ஹொங் (எஸ்.எஸ்.சி.), இலங்கை-இந்தியா (தம்புள்ள)

# முதியோர் இல்லக் கூரை இடி தாக்கியதில் சேதம்

சமீபத்தில் பெய்த அடைமழையின்போது கைதடி அரசமுதியோர் இல்லக்கட்டத்தின் கூரைப் பகுதி இடிதாக்கிச் சேதமடைந்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடியுடன் கூடிய மழைபெய்துகொண்டிருந்தது. இதனால் அங்குள்ள முதியோர்கள் வெளியே செல்லாது தமது விடுதிகளிலே ஓய்வு எடுத்துக்கொண்டிருநதனர். இவ்வேளை ஆண்கள் தங்கிஇருக்கும் இரண்டாம் விடுதியின்மேல் திடீரென இடி தாக்கியது. விடுதியின் கூரை சேதமடைந்ததோடு தீராந்தி மரமும் முறிந்து வீழ்ந்தது. சம்பவம் நடைபெற்றபோது விடுதியில் 6இற்கும் மேற்பட்டோர் தங்கியிருந்தபோதும் தெய்வாதீனமாக ஒருவருக்கும் காயம் ஏற்படவில்லை.

## தபால்துறைப் பணிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஜூலை16

யாழ். குடாநாட்டிலுள்ள அஞ்சல் அலுவலகங்கள், உபஅஞ்சல் அலுவலகங்கள் என்பவற்றில் சிற்றூழியர்களைப் பதிலாள்களாகப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பங்கள் மாவட்ட அஞ்சல் அத்தியட்சகரினால் கோரப்பட்டுள்ளது.

இப்பதவிக்கு 18 வயதிற்கு மேற்பட்ட 40 வயதிற்கு உட்பட்ட ஆகக்குறைந்தது 8 ஆம் தரம் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க விரும்புவோர் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 23 ஆம் திகதிக்கு முன்னர் அஞ்சல் அத்தியட்சகர், அஞ்சல் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ-5)

## வீடமைப்புக் கடன்பெறுவதில் மக்களுக்கு ஆர்வமில்லை

தென்மராட்சி,ஜூலை16

பளைப் பிரதேசத்திலுள்ள யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்த வீடுகளைப் புனரமைக்க வீடமைப்பு அதிகாரசபை கடன் வழங்க முன்வந்துள்ளபோதிலும் கடன்களைப் பெறுவதற்குப் பாதிக்கப்பட்ட மக்கள் முன்வரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இக்கடனுக்கு அறவிடப்படும் வட்டித்தொகை அதிகமாக உள்ளதாலேயே கடனைப்பெற மக்கள் பின்னடிப்பதாகக் கூறப்படுகிறது.

சேதமடைந்த வீடுகளின் ஒரு பகுதியினை புனரமைக்க 75 ஆயிரம் ரூபாவும்

முழுமையாகப் புனரமைக்க ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபாவும் கடனாக வழங்கப்படவிருந்தது. வங்கியொன்றின் அனுசரணையுடன் வீடமைப்பு அதிகாரசபை இக் கடன்களை வழங்க முன்வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## இருநாள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை16

'பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளும் சட்ட சம்பந்தமான அறிவுரைகளும்' என்னும் தலைப்பிலான இருநாள் கருத்தரங்கு இன்றும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் உள்ள தொடர்பக மண்டத்தில் காலை 9 மணி முதல் 5மணி வரை நடைபெறவுள்ளது.

மனித உரிமைகள் இல்லம் அமைப்பினால் நடத்தப்படுகின்ற இக்கருததரங்கில் அமைப்பின் கொழும்பு அலுவலகத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டு கருத்துரைகளை ஆற்றவுள்ளனர். (10)

## தென்னம் நாற்று உற்பத்தி

வலி.தென்மேற்கு,ஜூலை16

சண்டிலிப்பாய், மாகியப்பிட்டியில் இயங்கி வரும் கீரிமலை கமநல கேந்திர நிலையத்தில் தென்னைச் செய்கையை ஊக்குவிக்கும் திட்டத்தின்கீழ் 2ஆயிரத்து 500 தென்னம் நாற்றுகள் நாற்றுமேடையில் வளர்க்கப்படுகின்றன.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில் இந்தத் தென்னம் நாற்றுகள் இப்பகுதி மக்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளன என்று நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன

இதேவேளை - நிலைய வளவில் முந்நூறு கமுகம் பாக்கு நாற்றுகளும் நாற்றுமேடையில் போடப்பட்டுள்ளன. (ஒ-135)

## கைதடியில் மரநாய்கள் தொல்லை

கைதடி ஜலை.16

மரநாய்களின் தொல்லையால் கைதடி மத்தி பிரதேச மக்கள் சிரமங்களைச் சந்திப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. .

இப்பிரதேசத்தில் இரவுவேளைகளில் நடமாடும் மரநாய்கள் மரங்களிலும், கூடுகளிலும் உறங்கிக் கொண்டிருக்கும் கோழிகளைக் கொன்று விடுகின்றன.

இவற்றின் தொல்லையால் பொதுமக்கள் இரவு வேளைகளிலே விழித்திருந்து தமது கோழிகளைக் காவல் காக்கும் நிலைக்கு உள்ளாகி உள்ளனர்.

## கிரபந்தாட்டம்

சங்கானை,ஜூலை16

வலிகாமம் மேற்குப் பிரதேசசபையும், அப்பிரதேச சனசமூக நிலையங்களும் இணைந்து நடத்தும் உள்ளூராட்சி வாரக் கரபந்தாட்டப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை சங்கானை, சிலம்புப்புளியடி இளைஞர் மன்றத்தின் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அராலி பாரதி சனசமூக நிலைய அணியை எதிர்த்து அராலி சரஸ்வதி சனசமூக நிலைய அணியும் திருவள்ளுவர் சனசமூக நிலைய அணியை எதிர்த்து திருமகள் சனசமூக நிலைய அணியும் விளையாடவுள்ளன. (10-201)

# யாழ்.பல்கலைக்கழக கற்கைகளில் வெற்றிடம் நிரப்ப 53 மாணவர் தெரிவு

யாழ்ப்பாணம்,ஜூலை16

யாழ்பல்கலைக்கழகத்தில் 2003 - 2004 ஆம் ஆண்டு கல்வியாண்டில் மாணவர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான 3ஆம் கட்ட பட்டியல் தெரிவு மூலம் விவசாயப்பீடத்திற்கு 16 பேரும், பௌதிக விஞ்ஞானத்திற்கு 14 பேரும், உயிரியல் விஞ்ஞானத்திற்கு 23 பேரும் என மொத்தமாக 53 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களின் பெயர் விவரவருமாறு:

**உயிரியல் விஞ்ஞானம**

எஸ்.நிர்மலகாந்தன் (வவுனியா), வி.சிறீபிரதீபன் (வவுனியா), ரி.காந்தராஜா (முல்லைத்தீவு), பி.கஜிதா (அச்சுவேலி), எஸ.துளசி (அரியாலை), ரி.என்.அருமைநாயகம் (சில்லாலை), ஆர்.செந்தில்[illegible]ரன் (யாழ்ப்பாணம்), இசற்.கணேஷ்வர்ணன (நல்லூர்), எஸ்.சந்திரிகா (புலோலி), எஸ்.ஜெனா (ஆனைக்கோட்டை), பி.பாலினி (அல்வாய), என்.கல்யாணி (சாவகச்சேரி), என்.யோககுருநாதன் (கொக்குவில்), யு.சந்திரபோஸ் (கொக்குவில்), ரி.இராஜசிங்கம் (யாழ்ப்பாணம்), எஸ்.தங்கராஜா (யாழ்ப்பாணம), எஸ்.வினோதன் (கொழும்பு), ரி.காயத்திரி (புலோலி), கே.விசாலாட்சி (மூளாய்), பி.வானதி (கொக்குவில்), எச்.இராஜரட்ணம் (கிளிநொச்சி), என்.தனபாலசிங்கம் (யோகபுரம்), எல்.நித்தியானந்தம் (கிளிநொச்சி).

**பௌதிக விஞ்ஞானம்**

பி.முரளிதரன் (பருத்தித்துறை), ஐ.வினோதன (கொடிகாமம்), எப்.சி.சந்துரு (பண்டத்தரிப்பு), எஸ்.புவியரசி (மல்லாகம்), ஆர்.சஞ்சீவன் (கரணவாய்), ஏ.ரகுரட்ணம் (யாழ்ப்பாணம்), கே.கீர்த்தனா (சங்கானை), கே.கிஷ்ணானந்தன் (ஆவரங்கால்), ரி.கோபி (சாவகச்சேரி), ஆர்.தேவகி (கரவெட்டி), ரி.கீர்த்தனா (மீசாலை), வி.ஆயகுலன் (வவுனியா), கே.உதயராஜ் கண்ணா (அரியாலை), எஸ்.[illegible]கேந்திரன் (விஸ்வமடு).

**விவசாயம்**

என்.அஸ்மத் (புத்தளம்), கே.அருணாசலம் (வல்வெட்டித்துறை), சி.தர்சிகா (துன்னாலை), பி.ஜனனி (சுன்னாகம்), பி.சுப்பிரமணியம் (கொக்குவில்), என்.நடராஜா (யாழ்ப்பாணம்), ரி.கோகுலன் (இணுவில்), எஸ்.குணசிங்கம் (உரும்பிராய்), கே.துரைசிங்கம் (நீர்வேலி), ரி.சுப்பிரமணியம் (கைதடி), வை.வெள்ளையம்பலம் (வட்டுக்கோட்டை), எஸ்.சசிகலா (சண்டிலிப்பாய்), எஸ்.றீகன் (மானிப்பாய்), கே.துளசி (நல்லூர்), ஆர்.சசிகுமார் (பரந்தன்), எம்.அமிர்தகிரனன் (வட்டக்கச்சி).

தெரிவான மாணவர்கள் உடனடியாக யாழ.பல்கலைக்கழகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பிரதிப் பதிவாளர் அறிவித்துள்ளார். (ஒ-13-201)

# பாரம்பரிய கலைவிழா இன்றைய நிகழ்வுகள்

மண்டைதீவு,ஜூலை16

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் கலை விழாவின் ஆரம்பநிகழ்வு கழகத் தலைவர் வைத்திய கலாநிதி வை.தியாகராசா தலைமையில் இன்று பிற்பகல் மூன்று மணிக்கு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ் அரச அதிபர் செ.பத்மநாதன் ஆகியோர் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வர்.

மங்கள விளக்கேற்றல், அகவணக்கம், கழககீதம் என்பவற்றைத் தொடர்ந்து ஆசியுரையை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் அருட்திரு இம்மானுவல் அடிகள் ஆகியோர் வழங்க உளளனர். பின்னர் கலைஞர்கள் மகுடம், பொன்னாடை, மாலை சூட்டிக் கௌரவிக்கப்படுவர்.

நாடக மேடைப் பாடல்களைத் தொடர்ந்து இசை நாடகப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்குப் பொற்கிழி, சான்றிதழ்கள் வழங்கப்படும்.

தொடர்ந்து போட்டியில் முதல் பரிசுகள் பெற்ற மாதனை வேணுகானசபை வழங்கும் 'காத்தவராயன் கூத்துர்' நாவாந்துறை புனித நீக்கிளஸ் நாடக மன்றத்தின் தென்மோடி நாட்டுக்கூத்தான 'ஏரோதியாள் சபதமும்' இடம் பெறும். (ஒ-88)

## ச.ச. நிலையம் புனரமைப்பு

கைதடி,ஜூலை16

கடந்தகால யுத்த நடவடிக்கைகளினால் முற்றாகச் சேதமடைந்த நாவற்குழி, செல்வ நகர் அருள் சனசமூகநிலையம் தற்போது புனரமைக்கப்படுகிறது.

1996 மற்றும் 2000ஆம் ஆண்டு ஆகிய காலப்பகுதிகளில் இச்சனசமூகநிலையம் போர் நடவடிக்கைகளால் பாதிப்புற்றது தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு புலம்பெயர்ந்த இப்பகுதி மக்களின் நிதி உதவியுடன் இந்த சனசமூக நிலையம் புனரமைக்கப்படுகிறது.

மேலும் இப்பகுதியில் காணப்படும் மிதிவெடிகள், வெடிக்காத எறிகணைகள் போன்றவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கையினைத் தாம் விரைவில் சம்பந்தப்பட்டோரோடு தொடர்பு கொண்டு மேற்கொள்ள இருப்பதாக நிலைய நிர்வாகிகள் தெரிவித்தனர். (ஒ-75)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்


## விற்பனைக்கு

எம்மிடம் வீட்டுப் பாவனையிலுள்ள மிற்சுபிசி லான்சர் கார் 12 சிறி XXXX விற்பனைக்குண்டு. தொடர்பு: D.சுரேஸ் T.P. 021 - 222 3461.(34141)

கலர்மீன்கள், தொட்டிகள், அழகுப் பொருள்கள், குருவிகள், கூடுகள், பூங்கன்றுகள், சாடிகள், டாஸ்கண்ட், கொக்கஸ்பனில் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 40/11, சீனியர் லேன், தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம். (34148)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணக் கல்லூரி வீதியில் வட்டுக் கோட்டையில் நன்னீர்க் கிணற்றுடன் கூடிய கல்வீடும் நான்கு பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: த.சிவலிங்கம் (ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர்), வட்டு தென் மேற்கு, வட்டுக்கோட்டை. (சி-36188)

## தவறிவிட்டது

சுப்பிரமணியக்குருக்கள் சிறீகரசர்மா என்பவரின் கொமர்ஷல் வங்கிப் பணம் புத்தகம், சிறுவர் அலங்காரப்பொருள்கள், உடுப்புகள் அடங்கிய கறுப்பு நிறப்பை 13-07-2004இல் ஓமந்தை - முகமாலை இராணுவ சோதனைச் சாவடிகளுக்கு இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 021 - 4591649 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (34139)

சிவானந்தலிங்கம் அன்னலட்சுமி என்பவருடைய தே.அ.அ. இல.536974083V மற்றும் வங்கிப் புத்தகங்கள், முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேஸ் ஒன்று ஸ்ரான்லி வீதிக்கும், ஆரிய குளம் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 33, செல்லர் வீதி, நல்லூர் எனும் முகவரிக்கு ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (34145)


# வருமான வரியை ஒழுங்காக அறவிட அரசு புதிய திட்டம்

அரசுக்கு வருமானவரி செலுத்தாமல் ஏமாற்றி வருபவர்களைக் கண்டுபிடிக்கவும், வரியை ஒழுங்காக அறவிடுவதற்கும் அரசு புதிய திட்டங்களை வகுத்துச் செயற்பட உத்தேசித்துள்ளது.

அரசுக்குச் சேரவேண்டிய வருமானவரி, பெறுமதி சேர்க்கப்பட்டவரி, பற்றுவரி போன்றவைகள் செலுத்தப்படாமல் தேங்கியிருக்கின்றன. இதனால், அரசு பெரும் நிதிநெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கவேண்டிய ஓர் இக்கட்டான நிலையில் இருக்கின்றது. பெரும் தொகையானவர்கள் போலி அத்தாட்சிகளைக் காட்டி அரசுக்கு வருமானவரி செலுத்தாமல் ஏமாற்றிவருகின்றனர்.

இந்த நெருக்கடி நிலையைச் சரிசெய்வதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களததை மறுசீரமைத்து வரி அறவிடல் தொடர்பான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த நிதி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்காக தேசிய இறைவரித் திணைக்களத்தில் காலியாகவுள்ள 60 வெற்றிடங்களுக்குச் சிறந்த ஆளுமைமிக்கவர்களை நியமித்து, அதன் செயற்பாடுகளை அதிகரிக்க அரசு தீர்மானித்துள்ளது. இதை மேற்பார்வை செய்வதற்கென இறைவரிச்சபையொன்றை நிதி அமைச்சர் நிறுவியுள்ளார். (க)

# சாவகச்சேரிப் பிரதேசத்தில் 21 வீதிகள் புனரமைப்பு

உலக உணவுத் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் 21 வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

தவசிக்குளம் பாலாவி இணைப்பு வீதி, கெற்பேலி - பாலாவி ஊரெல்லை வீதி, தவசிக்குளம நாச்சிமார் கோயில் வீதி, ஈச்சங்காடு இந்து ஆலயவீதி, நாவற்குழி வீரபத்திரர் கோயில் வீதி, நாவற்குழி சித்தி விநாயகர் ஆலய வீதி, செல்லப் பிள்ளையார் வீதி, மட்டுவில் கண்ணன் கோயில் வீதி, மந்துவில் பிரம்படி வீதி, சின்னஎருவன் கட்டிபறிச்சான் இணைப்பு வீதி, மாசேரி நாவலடி காட்டுப்புல வீதி, திம்புனுவில் வீதி, நாவற் காடு புல்லாந்தி வீதி, மந்துவில் கேறுவலம் வீதி, தாவளை இயற்றாலை கலட்டி வீரபத் திரர் வீதி, நாவற்காடு கணபதிப்பிள்ளை வித் தியாலய வீதி, மாசேரி சிவப்பிரகாச வித்தி யாலய வீதி, இடைக்குறிச்சி கரம்பைக் குறிச்சி வீதி, சுட்டிபுரம் மிருசுவில் இரனகிறினி குளம் வீதி, வரணி இயற்றாலை வீரபத்திரர் வீதி, பூனையடி வீதி ஆகிய வீதிகளே புனரமைக்கப்படவுள்ளன.

கடந்த வருடம் சாவகச்சேரி பிரதேச சபையால் இவ்வுலக உணவுத் திட்டத்தின் கீழ் 18 வீதிகள் புனரமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-74)

# பத்திரிகையாளர்களுக்கெதிரான அச்சுறுத்தல்களுக்கு முடிவுகட்டுக!

## சுதந்திர செய்தியாளர் ஸ்தாபனம் வலியுறுத்து

இலங்கையில் பத்திரிகையாளர்களுக்கு இருந்துவரும் அச்சுறுத்தல்களுக்கு முடிவுகட்டுமாறு எல்லைகளற்ற பத்திரிகை நிருபர்கள் அமைப்பு இலங்கை அரசை வலியுறுத்தியிருக்கிறது.

இலங்கையில் பத்திரிகையாளர்களுக்கு இருந்துவரும் அச்சுறுத்தல்கள் பற்றி விரிவான ஆய்வொன்றை நடத்தியுள்ள எல்லைகளற்ற நிருபர்கள் அமைப்பு தனது ஆய்வுமுடிவுகள் தொடர்பான அறிக்கையொன்றை விடுததுள்ளது.

அந்த அறிக்கையில் பத்திரிகையாளர்களின் பாதுகாப்பைப் பேணுவதற்கான 9அம்ச யோசனை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

போர்நிறுத்தக் கட்டுப்பாட்டு அதிகாரிகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்குதல், அரசுக்குச் சொந்தமான ஊடகங்கள் சுயேச்சையாகஇயங்க அனுமதித்தல், பாதுகாப்புப் படைகள் போர்நிறுத்த மீறல்கள் புரிவதைத் தடுத்தல், பன்மைத்துவத்தை ஏற்றுக்கொள் ளும்படி புலிகளை வற்புறுத்தல், முஸ்லிம்களின் கருத்து வெளியிடும் சுதந்திரத்தை ஏற்றுக் கொள்ளல், மாகாண மட்டத்தின் செயல்படும் நிருபர்களின் பாதுகாப்பையும் சுதந்திரத்தையும் உறுதிப்படுத்தல், வெறுப்பைத் தூண்டி வடும் ஊடகத் துறைச் செயற்பாடுகளுக்கு முடிவு கட்டுதல் ஆகியனவே அந்த யோசனைகளாகும்.

எல்லைகளற்ற நிருபர்கள் அமைப்பு தனது அறிக்கையில் பத்திரிகையாளர்கள் வெளியிடும் செய்திகள் தொடர்பாக அவர்கள் தாக்குதல்களுக்கும் கொலைகளுக்கும் உள்ளாக நேர்கிறது. இதனால், இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரம் பெரிதும் பாதிப்புக்குளளாகிறது என்று குறிபபிடப்பட்டுள்ளது. (ப-8)

## பயிற்சிப் பாசறை

கராத்தே பிரதம ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான கராத்தே பயிற்சிப் பாசறை நாளை சனிக்கிழமையும், மறுநாள ஞாயிற்றுக்கிழமையும் யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி பாசறையில் கலந்துகொள்வதற்காகக் கராத்தே மாணவர்கள் தங்கள் பிரதம ஆசிரியர்களுடன் நாளை காலை 8.30 மணிக்கு மேற்படி பாடசாலைக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.(10-201)


The Chartered Institute of Marketing

The Global Path to Professional Marketing

Stage I

Commencing on 25 July 2004

Lectures Conducted by British Qualified Lecturer
Vibhu Wickramasinghe
(MBA – UK, Management Consultant)

UNIVENTURES
Institute of Business Management

55, Martin Road, Jaffna
021- 222 - 7666, 0777 918280

(சி-36003)


## வன்முறைகள் தொடர்பான

# கண்காணிப்புக்குழுவின் தீர்ப்பு அரசு - புலிகளிடம் கையளிப்பு

கொழும்பு,ஜுலை16

கிழக்கில் அண்மைக்காலமாகத் தொடரும் வன்முறைகள் மற்றும் கொழும்பில் நடந்த தற்கொலைத் தாக்குதல் என்பன தொடர்பாக விசாரணை நடத்திய இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு, தனது தீர்ப்பை அரசு, புலிகள் இரு தரப்பினரிடமும் வழங்கியுள்ளது.

அந்தத் தீர்ப்பில் என்ன தெரிவிக்கப்பட்டிருக்கின்றது என்ற விவரத்தைக் கண்காணிப்புக் குழு வெளியிடவில்லை. ஆனால், சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் அந்தத் தீர்ப்பைப் பெற்றுள்ளனர் என்பதைக் குழுவின் பேச்சாளர் தீஸா பின்லோகா உறுதிப்படுத்தினார்.

# பங்குச் சந்தை தொடர்பான கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜுலை16

கொழும்பு பங்குப் பரிவர்த்தனை, யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றத்தின் இணை அனுசரணையுடன் பங்குச்சந்தை பற்றிய கருத்தரங்கு ஒன்றை எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர் கூடத்தில் நடத்தவுள்ளது.

இதில் பல்வேறு தலைப்புகளில் பலர் கருத்துரை வழங்கவுள்ளனர். (10-201)

## தபாலகத்தின் அமைவிடம் பற்றிய கலந்துரையாடல்

சுன்னாகம் தபாலகத்தினைப் பொருத்தமான வேறு இடத்துக்கு இடம்மாற்றுமாறு தொடர்பாகக் கலந்துரையாடல் ஒன்று கூட்டப்பட்டுள்ளது.

தபாலகத்தின் அமைவிடம் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடாகி உள்ளது. நாளை முற்பகல் 11மணிக்கு சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோயில் மண்டபத்தில் கலந்துரையாடல் இடம பெறும். யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் அதில் கலந்து கொள்வார். (ஐ)


தரம் 1 முதல் G.C.E.(O/L) வரை

இரண்டாம் தவணைப் பயிற்சிப்பரீட்சை

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும்

சுந்தர் வெளியீடு
844,ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம் ☎ 021 222 7086
(கோயில் வீதிச்சந்திக்கருகாமை)



## கண்ணீர் அஞ்சலி



இளவாலை சென்.ஹன்றியரசர் கல்லூரியின் முன்னாள் அதிபரும். இளவாலைப் பங்கின் முன்னாள் பங்குத் தந்தையும். எனது வாழ்க்கைப் பாதையின் வழித்தீபமும் ஆகிய

அருட்தந்தை
**அன்ரன் திலகரத்தினம் இராசநாயகம்**

அவர்களின் பிரிவுச்செய்தி கேட்டு நாம் பெருந்துயர் கொண்டுளளோம். அடிகளாரை இழந்து வருந்தும் அவர்களது சகோதரர்கள், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அடிகளாரின் பாதங்களில் எங்கள் கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாகச் செலுத்திநிற்பதோடு, அடிகளாரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக ஆண்டவரை மன்றாடுகின்றோம்.

நன்றி மறவா அன்பன்:
சௌந்தரநாயகமும் (சந்திரன்) குடும்பத்தினரும்.

கல்லூரி வீதி,
இளவாலை.
(34143)(34-21-19-12)



## வீட்டுக்கிருத்திய அழைப்பு



16.06.2004 புதன்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பவிளக்கு

அமரர்
**கார்த்திகேசு நல்லதம்பி**
( விக்னேஸ்வராக்கல்லூரி ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அவர்களின் வீட்டுக்கிருத்தியம் 16.07.2004 இன்று காலை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சாமியன் அரசடி,
நெல்லியடி கிழக்கு,
கரவெட்டி.
(34147)(42)
குடும்பத்தினர்.



## இதோ உங்களுக்காக!

★ தச்சுவேலை உபகரணங்கள்
10", 12",14",16" சைனா மிசின்கள்
★ எலக்ரிக் டிசைன் ரவுட்டர்கள்
★ றில்லர்கள் ★ கிரைண்டர்கள்
★ வளைவு வெட்டும் வான்சோ

☞ ஏனைய தச்சுவேலைக்கான உபகரணங்களும் உதிரிப்பாகங்களும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

விவரங்களுக்கு: சுதா றேடேர்ஸ்
உரிமையாளர்: கி.சுதாகரன்
(34076)(37) அரசடி வீதி, நல்லூர், யாழ்.



## தவறிவிட்டது

சந்தனராசா, சிறீஸ்கந்தராசா எனும் பெயருக்கு உரித்தானவருடைய 6416 இலக்கமுடைய காணி உறுதியுடன் கூடிய கோவை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் *முகவரிக்கு கனகா பத்திரிகை முகவர், திருநெல வேலிச் சந்தியில் ஒப்படைத்துதவவும்.*

சன்மானம் வழங்கப்படும் (34144)



## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி சிவலிங்கம்



ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிவலிங்கம் 11.07.2004 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.07.2004) சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உசத்தியோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.மகேஸ்வரி (மனைவி),
S.P.நாதன் (மகன்).

ஏழாலைகிழக்கு, ஏழாலை.
T.P.:0777 - 422629.
(34146)
(34-21-19-19)

# "...பாதுகாப்புச் சேவைப் பணி... ..என் சின்ன வயது ஆசை!..."

**இன்று பெண்கள் சகல துறைகளிலும் பிரகாசிக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் இப்போது தனியார் பாதுகாப்புச் சேவையில்கூட பெண்கள் வந்து விட்டார்கள். 'கோல்டன் ஈகிள்' பாதுகாப்புச் சேவை நிறுவனம் முதல் முறையாக பெண்களை இந்தச் சேவைக்குள் உள்வாங்கியிருக்கின்றது. யாழ்.போதனா மருத்துவ மனையிலும் வேறு சில நிறுவனங்களிலும் பாதுகாப்புக் கடமையில் பெண்கள் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர். சவால்கள் நிறைந்த இந்தத் துறையில் இணைந்து பணியாற்ற ஏன் முன்வந்தீர்கள் என்று பெண் பாதுகாவலர் ஒருவரை அணுகிக்கருத்துக் கேட்டோம். யாழ்.போதனா வைத்தியசாலையில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த செல்வி சுகந்தினி சந்திரனின் (வயது 23) கருத்துக்கள் இன்றைய திலகம் பகுதியில் விரிகின்றன.**

***கேள்வி:* முதலில் உங்களைப் பற்றிச் சிறிது கூறுங்களேன்.....**

*பதில்:* எனது பெயர் சுகந்தினி சந்திரன். வயது 23. ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை எழுதி விட்டு பெறுபேற்றிற்காகக் காத்திருக்கின்றேன். அம்மா, அப்பா, மூன்று தம்பிகள் எனது குடும்பம.

***கேள்வி:* யாழ்ப்பாணத்தில் முதன் முறையாகத் தனியார் பாதுகாப்புச் சேவையில் ஈடுபட பெண்கள் முன்வந்திருக்கிறார்கள். இதனை குறிப்பிடக்கூடிய ஒரு மாற்றம் என்று கருதலாம். அந்த வகையில் இத்துறையில் இணைந்து பணியாற்ற முன்வந்தமைக்கான காரணம் என்ன?**

*பதில்:* ஒவ்வொருவருக்குள்ளேயும் ஒவ்வொரு கனவிருக்கும். எனக்கும் சின்ன வயதில் இருந்து பாதுகாப்பு உத்தியோகம் பாாக்க வேண்டும் என்ற ஆசை. அந்த ஆசை இப்போது நிறைவேறி இருக்கிறது. அது மட்டுமல்ல, இந்த அவசரஉலகில், ஆணுக்கு பெண் சரிநிகர்தான். ஆண்களால் செய்ய முடிகின்ற எந்த வேலையையும் பெண்களால் செய்ய முடியும் என நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள். இக்காலத்தில் ஆணுக்கு, பெண்ணுக்கு என எந்த வேலைகளும் வேறுபாடானவையல்ல. எங்கள் சமூகம்தான், பெண்கள் என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும். பாரமான, பலமான வேலைகளைச் செய்யக் கூடாது, மெதுவாகப் பேசவேண்டும், மெதுவாக நடக்க வேண்டும் என வரையறைகளை உருவாக்கியது. இதனால், ஆண்கள் மட்டும்தான் சில வேலைகளைச் செய்யலாம் என்ற வரன்முறை தோன்றக் காரணமாக இருந்தது. இன்றைய சூழலில் அவ்வாறு இல்லை. எந்தத் துறையென்றாலும், எந்தத் தொழில் என்றாலும் பெண்களால் செய்யமுடியும் என நிரூபித்துக்கொண்டிருக்கிறார்கள், சாதனைகளாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அத்தகைய பெண்களில் நானும் ஒருத்தியாகத் திகழ வேண்டும் என்ற ஆசைதான் இத்துறையில் இணைந்து பணியாற்றக் காரணமாக அமைந்தது.

**செவ்வி கண்டவர்: தயா**

***கேள்வி:* இத்துறையில் இணைந்து பணியாற்றத் தீர்மானித்த போது உங்கள் குடும்ப உறுப்பினர்களின் நிலைப்பாடு எப்படி இருந்தது.....?**

*பதில்:* ஆரம்பத்தில் பூரண சம்மதம் தரத்தயங்கினார்கள். ஆனால் என்னுடைய ஆசை நிறைவேறத் தடையாக இருக்கவில்லை. ஆரம்பத்தில் எல்லோரும் ஒரு மாதிரியாக 'இவா என்ன செக்கிரிட்டி வேலை செய்கிறா' என்றுதான் பார்த்தார்கள். பெண்பாதுகாப்பு சேவையைப் பற்றி விளக்கியதும் அந்தநிலை மாறி விட்டது. சமூகத்திற்குத் தேவையான அவசியமான வேலையைத்தான் செய்கிறேன் எனப்புரிந்து கொண்டதும் கூடுதல் சிநேகிதமுடன் பழகுகிறார்கள். இந்நிலைமை மேலும் எனக்குள் நம்பிக்கையை வளர்த்துள்ளது என்றுதான் கூற வேண்டும்.

***கேள்வி:* வெறும் ஊதியத்தை நோக்கமாகக் கொண்டா அல்லது சவால்கள் நிறைந்த இப்பணியில் ஈடுபட வேண்டும் என்ற விருப்பத்திலா இணைந்துகொண்டீர்கள்..?**

*பதில்:* வெறும் ஊதியம் மட்டும் தான் என்னுடைய குறிக்கோள் என்றால் எத்தனையோ சுயதொழிலில் ஈடுபட்டு என்னால் சம்பாதித்திருக்க முடியும். ஆனால், ஆரம்பம் முதலே இத்துறையில் இருந்த ஈடுபாடு காரணமாகவே இணைய முற்பட்டேன். சவால்களை எந்தப்பெண்ணும் எதிர்கொள்ள வேண்டும். ஓடி ஒழியக்கூடாது. அந்த வகையில் நானும் சவால்களைச் சாதனைகளாக்குவேன் என்ற நம்பிக்கை இருக்கிறது. மக்களுக்குச சேவை செய்யவும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். பெண்ணினுடைய பிரச்சினைகளைப் பெண்தான் சரியாகப் புரிந்துகொள்வாள். நான் தற்போது யாழ்.வைத்தியசாலையில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருக்கிறேன். அண்மையில்கூட ஓர் இளம் பெண்ணின் தாலிக்கொடியை இன்னொரு பெண் எடுத்து நெஸ்ரமோல்ட் ரின்னுள் மறைத்துவிட்டார். சரியான முறையில் கடமையைச் செய்ததால் அந்தப் பெறுமதி வாய்ந்த நகையை மீட்டு உரிய பெண்ணிடம் கொடுக்க முடிந்தது. இத்தகைய நல்ல செயல்களைச் செய்யும்போது என்னுள் ஆத்ம திருப்தி ஏற்படுவதை உணரமுடிகிறது. இத்தகைய சந்தர்ப்பங்களைப் பார்க்கும்போது என்னுடைய விருப்பங்கள் நிறைவேறிக்கொண்டிருக்கின்றன என்றுதான் சொல்லவேண்டும்.

***கேள்வி:* பாதுகாப்புச் சேவைப்பணி உடல் வலுவுடன் தொடர்புபட்டது. அந்த வகையில் ஆணகளுக்கு நிகராகப் பெண்கள் இத்துறையில் தொடர்ந்து ஈடுபடமுடியும் என நம்புகிறீர்களா?**

*பதில்:* மனிதப் படைப்பில் ஆண், பெண் சமம்தானே. ஆண்கள்மட்டும் தான் மனிதர்கள் என்று பார்த்த காலம் மலையேறிப்போய் விட்டது. பெண்கள்தான் எந்தத்துறையிலும் முன்னேறிக்கொண்டிருக்கிறார்கள். ஏன் உலக சனத்தொகையில் ஆண்களைவிடப் பெண்கள் தான் அதிகம் எனப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. என்ன ஆண்களுக்கு உடல் வலிமை இருந்தாலும் பெண்ணுக்கு அதைவிடச் சிறந்த மன வலிமையும், தன்னம்பிக்கையும் கை கொடுக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். அதற்காக பெண்ணிடம் உடல் வலிமை இல்லை என்று சொல்வதற்கில்லை. தன்னுள் உள்ள வலிமையை உணர்ந்துகொள்ள நினைப்பதில்லை. அதுதான் காரணமாய் இருக்கும்.. இன்றைய போராட்டத்தில்கூட பெண்களின் பங்களிப்பு பெருமைப்படவேண்டிய விடயம். உடல் வலிமையை உணர்ந்து வெளிக்காட்டியதால்தான் வெற்றிகள் கிடைத்தன. பெண்கள் தங்களிடமுள்ள மனவலிமை, திறமைகள், உடல் வலிமைகள் யாவற்றையும் வெளிக்கொண்டுவந்து செயற்படும் போது வெற்றிகள் எமக்காய் காத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.




***கேள்வி:* இத்துறையில் சந்திக்கின்ற சவால்கள் உங்கள் தனிப்பட்ட வாழ்வில் பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்று கருதுகிறீர்களா?**

*பதில்:* நிச்சயமாகப் பாதிப்புக்களை ஏற்படுத்தாது என்று கருதுகின்றேன். ஆசிரியத் தொழில், கைத்தொழில் போன்ற துறைகள் போன்று பாதுகாப்புத்துறையும் ஒன்று. எல்லா இடங்களிலும் பிரச்சினைகள் இருக்கும். எதிர்நோக்கும் சந்தர்ப்பங்கள்தான் சற்று வேறுபடும். எந்தப் பிரச்சினையும், சரியான நேர்மையான வழியில் தீர்க்கும்போது பிரச்சினைகள் காணாமற்போகின்றன. பின் வாழ்வைப் பாதிக்கும் என்பது தேவையற்ற பயம். ஏனெனில், எதிர்கால வாழ்க்கைத் துணையை என்னைப் புரிந்து கொண்டவராகத் தேடிக்கொண்டால் எந்தப் பிரச்சினையும்வராது என்பது எனது நம்பிக்கை.



***கேள்வி:* பாதுகாப்புத்துறையில் ஈடுபட விரும்பும் பெண்களுக்கு என்ன கூறவிரும்புகிறீர்கள்..?**

*பதில்:* சாதனைகள் செய்ய காலங்கள் காத்திருக்காது. நினைத்ததை உடனே செய்து முடி. எத்தனையோ படித்த யுவதிகள் 'வேலையில்லை' என வீட்டில் காத்திருக்கின்றனர். எந்தத் தொழிலும் இழிவானது அலல. பாதுகாப்புத்துறை, மக்கள் சேவை சாா்நதது. முதற்தடவையாக இத்துறையில் உள்வாங்கப்பட்டதையிட்டு மகிழ்வடைகின்றேன். ஏனைய பெண்களும், இத்துறையில் ஈடுபட முன்வரவேண்டும். இத்தொழில் ஆண்களுக்கு மட்டும் உரித்தானதல்ல என்பதை இத்துறையிலும் பெண்கள் ஈடுபட்டு நிரூபிக்க வேண்டும். பெண்களின் பங்களிப்பு இத்துறையை மேலும் வளர்க்கும் என்பதில் எவ்வித ஐயமில்லை. பெண்களால் புதிய சரித்திரம் எழுதப்படும் இக்காலகட்டத்தில் இத்துறையிலும் முத்திரை பதிப்போம். ★

## புறப்படு பெண்ணே!

பெண்ணே!
விடியல்களின்
வெளிச்சத்தில்
வேதனைத் தழும்புகளுடன்
நீ மட்டும் ஓரமாய்
முடங்கிப் போய்......
உனக்கு நீயே
முகமூடி போட்டு
மறைத்து வாழ்வது ஏன்?
தடைக்கல்லை
படிக்கல்லாக்கு
விமர்சனங்'களை
வெற்றிகளாக்கு
பண்பாடு,
பழக்கவழக்கத்துக்குள்
கட்டி வைக்கப்பட்ட நீ
வெளிவந்து வெற்றி
நடைபோடு
காதல் அடிமையாக
போகப் பொருளாக
வாழ்ந்தது போதும்
உனக்கான பாதை
உன் கண்முன்
விரிந்து கிடக்கிறது
உனக்காய் காற்றும்
விண்ணும் மண்ணும்
வாழ்த்தொலி பாடும்
புதிய சரித்திரத்துக்கான
பேனாமுனைகள்
உனக்காய் காத்திருக்கின்றன.

- மதி -

## காத்துக்கிடக்கும் ரோஜாக்கள்

கணிதத்தில் தானே
தோற்றாய்
தோல்வியில் துவளாதே
என்செல்ல மகளே!
சோர்வைத் தழுவாதே

இடறல் இன்றி
வெற்றி கிடைத்தால்
சுவை குறைவே
போராடி
விழுந்து
களைத்து
மனம்மாய்ந்து
மீண்டும் எழுந்து
போராடி
பெறுகின்ற வெற்றியின்
இன்பம்
அருமையானது
மறக்க இயலாதது
எனவே,
அழாதே, என் இனிய மகளே!
கண்ணீரைத் துடைத்தெறி
சீரி
சீலிர்
சிந்தி
செம்மையாய்ச்
செயற்படு அழாதே
தோல்வியைக் கிழி
உள்ளே உற்றுப்பார்
அது உனக்கு
நான்கு திசைகளையும்
காட்டும்

தோல்வியைப் பயில்
பின்
வாழ்வைப் பயில்
பின்னர்,
தோல்வியையும் கண்ணீரையும்



வெற்றிக்கு உரமாக்கும்
இரசாயனம் பயில்
இறுதியில் கணிதம் பயில்
தேர்வெனும் பாலை நிலத்தில்
கணித பாடத் தோல்வியை
கானல் நீராய்க் கொள்
வெற்றியெனும் சோலை
கூப்பிடு தூரத்தில் உள்ளது

துணிவை உண்
தளர்வைத் தவிர்
வான் உனதே
'பேசி'யை வடிவமைத்த
விஞ்ஞானி
சறுக்கியது, பலமுறை
இதை நீ உணர்
'பேசி' யில் பேசும் போதெல்லாம்
காவியம் படைத்து
பா ரதம் ஆனான்
இங்கிலாந்தில்
கவிஞன் ஒருவன்
இது வரலாறு
நீயும்
வெற்றிபெறும் போது
வரலாறு
உன்னைக் கணக்கில்
குறித்துக்கொள்ளும்

நம் வீட்டுத்தோட்டத்தில்
ரோஜாக்கள்
பனியில் குளித்துக்
காத்துக் கிடக்கின்றன
கட்டப்பட மட்டுமல்ல
வெற்றி மாலையாய்
என் மகள் கழுத்தில் விழவும

மேலும் இங்கு என்
இருகரங்கள் காத்திருக்கின்றன
நீ சரிந்தால்
தூக்கி நிறுத்தவும்
வென்றால்
தட்டிக் கொடுக்கவும்

நன்றி: மங்கையர் மலர்.

வெற்றி நிச்சயம் வாங்கிப் படியுங்கள்

**ஆசிரியர் தெரிவுப்** போட்டிப் பரீட்சைக்குரிய மிக அண்மைய சர்வதேச, இலங்கை நடைமுறை விடயங்கள் கல்வித் தரவுகள், எதிர்பார்க்கை வினாக்கொத்து உள்ளடங்கிய துரித மீட்டல் கையேடு

**"பொது அறிவு"**

இத்துறையில் 08 வருடமாகப் புத்தகம் வெளியிட்டுவரும் அனுபவமிக்க ஆசிரியர் திரு.வே.தபேந்திரன் B.Com. அவர்களால் இவ்வாரம் விசேடமாகத தொகுக்கப்பட்டது.

★ விலை ரூபா 35/= மட்டுமே

எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.


ஏகவிநியோகஸ்தர்

ஸ்ரீலங்கா புத்தகசாலை,

231.கே.கே.எஸ் வீதி. யாழ்.

(34056)(34)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்னை மடியில் 14 - 10 - 1921

ஆண்டவன் அடியில் 16 - 06 - 2004

அமரர்

### கதிர்காமு வேலுப்பிள்ளை (வேலாயுதம்)

(புத்தூர்)

திதி - அபரபக்க சதுர்த்தசி (16.07.2004)

எமது பாசமிகு அன்புத் தெய்வமே! குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து எமக்கு நல்வழிகாட்டிய பாசத்தீபமே! நாம் எல்லோரும் ஒன்றாக மகிழ்ந்திருப்போம் என எண்ணியிருக்க பாதியிலே எம்மை விட்டுப் பிரிந்து போய்விட்டீர்களே! என்ன செய்வோம்? நீங்கள் மறைந்தாலும் உங்கள் அன்பு முகமும் அறிவுரைகளும் எங்கள் நெஞ்சை விட்டு அகலவே அகலாது. உங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


இன்று (16.07.2004) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் ஆகிய நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

'ராஜபவனம்'
புத்தூர் மேற்கு,
புத்தூர்.

அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(34090)(40-21-19-18)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் 59 ஆவது பிறந்தநாள் நினைவலைகளும்



### சரவணமுத்து ஜெயானந்தம்

(கோயிலர் - ஜீவா திருமணசேவை)

மண்ணில் 16-07-1945

விண்ணில் 16-06-2004

நேர்மைச் சுடராகி திருமணசேவையை திறம்படவே ஆற்றி
அன்பிற்கு ஆழியாய் அரவணைத்த எம் தந்தையே!
எம்மைவிட்டு மறைந்திட்டதேனோ?
மெழுகுவர்த்தியாய் சுடர்விட்டவரே
மெழுகாய் நீங்கள் உருகியதேனோ?
உம்நினைவுகள் என்றும் எம் உள்ளத்தில்
நீங்கா நினைவாலே.

இன்று (16.07.2004) வெள்ளிக்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்.

(34131)(34)

# இலங்கை அரசு

## வடக்கு - கிழக்கு மாகாணசபை

வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத்திட்டம்

கடன் இல.: 2880 - சி.இ.(C.E.)

## தேசிய போட்டிக் கூறுவிலை கோரல்

## (நிர்மாண வேலைகள்)

# கேள்வி அறிவித்தல்-ஐ.எவ்.பி. (I.F.B.)

ஐ.எவ்.பி. இல.: எம்யூ/நீர்ப்/ஐடி/04

திகதி: 16.07.2004

01. வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத்திட்டத்தின் ஆகுசெலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழே உள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒருபகுதியை பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடம் இருந்து பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. ஐ.பி.ஆர்.டி. (I.B.R.D.) கடன்வசதி, ஐ.டி.ஏ. (I.D.A.) நம்பிக்கையின் கீழான வசதி.

02. பணிப்பாளர், மாகாண நீர்ப்பாசன திணைக்களம், வ.கி.மா. திருகோணமலை இலங்கை அவர்களால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடம் இருந்து கீழ் தரப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கு கோரப்படுகின்றன. ஒப்பந்தகாரர்கள் தனி ஒரு வேலைக்கோ அல்லது எல்லா வேலைகளுக்குமோ கூறுவிலைகளை சமர்ப்பிக்கலாம்.

03. மீளளிக்கப்படாத கட்டணமாக அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பொதிக்கும் தனித்தனியாக காசாகவோ அல்லது திருகோணமலையில் மாற்றத்தக்கதான, பணிப்பாளர், மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் திருகோணமலை, இலங்கை அவர்களின் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (Draft) சமர்ப்பிப்பதன் பேரில் முல்லைத்தீவு பிராந்திய பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர், பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், முல்லைத்தீவு, இலங்கை அவர்களிடமிருந்து 17.08.2004 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை கேள்விப்பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இருபிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரங்களை கீழ்தரப்பட்ட முகவரியில் இலவசமாக பார்வையிடுவதோடு மேலதிக விவரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர்,
முல்லைத்தீவு பிராந்திய பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம்,
வவுனிக்குளம், மாங்குளம்,
முல்லைத்தீவு, இலங்கை.

05. சமர்ப்பிக்கப்படும் கேள்வி, கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 90 நாள்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல்வேண்டும். அத்துடன், பணிப்பாளர், மாகாண நீர்ப்பாசன திணைக்களம், வ.கி.மா. திருகோணமலை, இலங்கை அவர்களின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையும், கேள்விகளுடன் இணைக்கப்பட்டு பின்வரும் முகவரிக்கு 18.08.2004 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு முன் கையளிக்கப்படல்வேண்டும்.

தலைவர்,
திணைக்கள கேள்விச் சபை,
மாகாண நீர்ப்பாசன திணைக்களம்,
வ.கி.மா. திருகோணமலை, இலங்கை

அதேதினம் பிற்பகல் 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில் காரியாலயம் மூடப்படவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலைநாளன்று அதேஇடத்தில், அதேநேரத்தில் கோரல்கள் பெறப்பட்டு திறக்கப்படும்.

06. வேறு விவரங்கள் தேவைப்படின் கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

### அட்டவணை

| கேள்வி குறியீட்டு இல. | வேலை விவரம் | கேள்விப் பிணை ரூபா | கேள்வி ஆவணங்களின் பெறுமதி ரூபா | வேலை நிறைவேற்றப்படவேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| எம்யூ/நீர்ப்/ஐடி/04/பி1 | ஒட்டுசுட்டானில் 10000 லீற்றர் கொள்ளளவு உள்ள நீர்த்தாங்கி மீள்நிர்மாணிப்பு | 12.000.00 | 750.00 | 03 மாதங்கள் |
| எம்யூ/நீர்ப்/ஐடி/04/பி2 | ஒட்டுசுட்டானில் நீர்ப்பாசன சிற்றூழியர்களுக்கான இணைந்த வதிவிடத் தொகுதி (06 அலகுகள்) மீள்நிர்மாணிப்பு | 43.000.00 | 750.00 | 03 மாதங்கள் |
| எம்யூ/நீர்ப்/ஐடி/04/பி3 | ஒட்டுசுட்டானில் நீர்ப்பாசன கனிஷ்ட அலுவலர்களுக்கான விடுதி மீள்நிர்மாணிப்பு | 30.000.00 | 750.00 | 03 மாதங்கள் |
| எம்யூ/நீர்ப்/ஐடி/04/பி4 | மாங்குளம் நீர்ப்பாசன சிரேஷ்ட அலுவலர்களுக்கான விடுதி மீள்நிர்மாணிப்பு | 50.000.00 | 750.00 | 03 மீதங்கள் |
| எம்யூ/நீர்ப்/ஐடி/04/பி5 | மாங்குளம் நீர்ப்பாசன கனிஷ்ட அலுவலர்களுக்கான விடுதி மீள்நிர்மாணிப்பு | 30.000.00 | 750.00 | 03 மாதங்கள் |

07. கேள்விதாரர்கள், கேள்விதாரர்களுக்கான செயற்பிரமாணக் குறிப்புகள் 04 ஆம் பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளை ஆகக்குறைந்த தகைமைகளாகக் கொண்டிருத்தல் வேண்டுமென இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது. இந்தக் கேள்வி விளம்பரத்தில் உள்ள ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களை வழங்கும்போது கேள்விதாரர் இவ்வேலைகளை நிறைவேற்றுவதற்குரிய வளமும், ஆளணியும் அனுபவமும் இருப்பது ஒரு தனி ஒப்பந்தத்திற்கு தேவைப்படும் தகைமையை திருப்திப்படுத்துவதாக இருத்தல்வேண்டும்.

எந்திரி.எஸ்.சர்வலோகநாதன்
பணிப்பாளர், மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம்,
வ.கி.மா., திருகோணமலை.

(சி-36184)(34)

# சபாரத்தினம் சுவாமிகள் பேரில் ஆச்சிரமம் திருக்கேதீஸ்வரத்தில் நிறுவப்பட வேண்டும்

**திருவாசகம் சுவாமிகள் என அழைக்கப்படும் ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகளின் நூற்றாண்டு ஜயந்திதின நிகழ்வுகள் அண்மையில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றன. இந்தத் தருணத்தில் சுவாமிகளின் வாழ்வுப் பணிகளை நினைவு கூரும் வகையில் இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

உலகம் உய்வதற்காக, எங்களிடையே எத்தனை எத்தனையோ ஞானிகளும், சித்தர்களும், யோகிகளும் தோன்றினார்கள். இவர்கள் தங்களுக்காக வாழ்ந்துவிடாமல் உலகம் உய்வதற்காகவே சாமதான்யர்போல் தோன்றி, நல்வழிப்படுத்த ஆத்மார்த்தமாகவே முயன்றும் வந்தனர். உலகம் இயங்கிக்கொண்டிருக்கும் போது, பாவ, புண்ணிய வினைகளுக்கேற்ப ஆன்மாக்கள் பிறப்புக்கள் எடுப்பதும், அல்லற்படுவதும் அதற்குப் பரிகாரம் தேட, ஆன்ம ஞானம் பெற்றோரை நாடுவதும் இயற்கையான விடயமாகும்.

இந்த விடயத்தில், தம்மை நாடும் அடியார்களிடத்தே திருவாசகத்தினை ஒரே மந்திரமாகக் கொண்டு ஞானத்தேன் வழங்கிய திருக்கேதீஸ்வரம் திருவாசக சுவாமிகளை - ஸ்ரீசபா

## ஞானக்கதிர்

ரத்தினம் சுவாமிகளின் அருள் ஞானப்பணியினை நாம் என்றுமே மறக்கமுடியாது.

திருக்கேதீஸ்வரத்தில் திருவாசகமடத்தினை நிறுவுவதற்கு ஆரம்ப மூல காரணகர்த்தா இவரேயாவர். எனினும், இவர் இருந்து, அடியார்களுக்கு உடலுக்கும், உயிர்க்கும் உணவளித்த பூமி திருக்கேதீஸ்வரம் கௌரீஸ்வரியின் மூலஸ்தானம் பார்த்த வண்ணம் உள்ள எதிர்த்திசையின் கண்ணே அமைந்துள்ள இடமாகும். இங்கு சிறு ஆச்சிரமத்தினை அமைத்து அங்கிருந்த வண்ணமே தன்னை நாடிவரும் அடியார்களுக்கு உணவளித்தும், ஆறுதல் அளித்தும் வந்தார். எப்பொழுதுமே பகல், இரவு என்று பாராமல், திருவாசக விளக்கம் கேட்பதற்குக் கூட்டம் நிரம்பவரும். நான் சின்னவயது முதலே அவரிடம், எனது பெற்றோருடன் கூடச்சென்றிருக்கின்றேன்.

திருவாசகத்தினை ஒருவரைக் கொண்டு பாடுமாறு கேட்பார்கள். அவர் கண்களை மெதுவாக மூடியபடியே விளக்கம் சொல்லுவார். அதில் ஒரு வரி, ஒரு எழுத்துத் தவறவிட்டாலும கூட மீண்டும் அந்தத் திருவாசகப் பதிகத்தைப் பாடும்படி கூறிவிடுவார். அவர்பாடும் பதிகத்தில் திருப்தி கண்டாலேயே அடுத்த வரிக்கு விளக்கத்திற்குச் செல்வார். அதற்கிடையில் அங்கு வருபவர்கள் திருவாசகத்தின் பாவை (பாட்டை) அறிந்து ஆனந்தம் கொள்வதுடன், அதனை மனனம் செய்தும் விடுவார்கள்.

எந்தவித மமதையும் இன்றி, தன்னைச் சுற்றி எத்தகைய தரத்தினர் இருந்தாலும



கூட, எல்லோரையும் சமனாக எண்ணும் இயல்பு எல்லோருக்கும் வந்துவிடுமா? இன்று மேல்த்தட்டு வர்க்கத்தினர்கள் பலர் தம்மை ஆன்மீகவாதிகளாகக் காட்டுவதற்காக ஆன்மீகத் தலைவர்களை நாடுவதும், அவர்களிற் சிலர் பணக்காரவர்க்கத்தினரை மட்டுமே கண்டுகொள்வதுமே, சாதாரணமான சங்கதிகளாக இருக்கின்றன.

ஒரு முறை சுன்னாகம் பஸ்நிலையத்தில் பஸ்ஸில் இருந்து நான் இறங்கியபோது, தற்செயலாகச் சபாரத்தினம் சுவாமிகளைக் கண்டுவிட்டேன். அப்போது, நான் வேலையொன்றில் புதிதாகச் சேர்ந்திருந்தேன். சுவாமிகளைக் கண்டதும் நேரே சென்று, அவரை வணங்கிய போது, எனது சுகநலன்களை அவர் விசாரித்தார். பின்னர் அவர் புறப்படத் தயாரானபோது, நான் தயங்கினேன். என்னடா... என்ன விஷயம் என்று கேட்டார். அந்தநேரம் என்னிடம் பத்து ரூபாய் இருந்தது. நான் தயங்கியவாறே சுவாமி, இந்தாருங்கோ..... என்றபடி அதைக் கொடுத்தேன். அவரோ.... சின்னச் சிரிப்பொன்றை உதிர்த்தவாறே, நீ அப்ப பெரிய மனுஷன் ஆகிவிட்டாய், "எனக்குக் காசுதர வெளிக்கிட்டு விட்டாய்" என்றபடியே, அதைப் பேரன்பு காரணமாக வாங்கிவிட்டார்.

நான் அவருக்குக்கொடுத்த சிறுபணம், அவர் ஈந்த வரம் எனக் கருதுகின்றேன். அவர் என்ன சொல்லப் போகின்றார் எனப் பயந்தேன். என்றாலும்கூட, எனது மனம் வேதனைப்படக் கூடாது என்பதற்காகவே என் பொருட்டு அதனை ஏற்றுக்கொண்டார் என்பது நான் அறிவேன்.

அவரிடம் தினமும், மடத்தில் சனங்கள் கூடுவார்கள். அவரிடம் வந்துவிட்டால், அவர்களைச் சாப்பிடச் செய்து அனுப்புவது வழக்கமாகும். இது நான் கேள்விப்பட்ட ஒரு விடயமாகும். ஒரு தடவை திடீரென அவரது அடியார்கள்

**- பருத்தியூர் பாலவயிரவநாதன்**

அவரிடம் சென்றபோது மடத்தில் காய்கறி எதுவும் இல்லை. ஆயினும், சுவாமிகளோ கோயிலுள்ள இளநீர்க் கோம்பைகளை எடுத்து, கறிக்கு உகந்த பாகங்களைச் சீவி நேர்த்தியாகக் கறிசமைத்து வழங்கினார்கள். எனினும், சாப்பிட்டவர்களுக்கு அதன் அற்புதமான சுவை பொருந்திய கறி எப்படி ஆக்கப்பட்டது என்பது தெரியவில்லை. பின்னர் அதனைக் கேள்விப்பட்டு வியந்து போயினர். அன்புடன் இழைந்த உணவு அல்லவா? கொடுப்பவர் கொடுத்தால் எதுவுமே அற்புதம்தானே?

இன்று திருக்கேதீஸ்வரத்தில் சுவாமிகளின் பெயரில் ஓர் ஆச்சிரமம் பெரியதாகவோ, சிறிதாகவோ ஸ்தாபிக்கப்படவில்லை. நாட்டின் அசம்பாவித சூழ்நிலைகள் காரணமாக எல்லாமே அற்றுப்போயின. எனவே, திருவாசகப் பெருங்கடலான சபாரத்தினம் சுவாமிகளின் (திருவாசகம் சுவாமிகள்) பெயரில் ஓர் ஆச்சிரமம் அமைக்கவேண்டியது அனைத்து அவரது அடியார்களின் திருவுளமாகும். யோகசுவாமிகளின் ஆசியைப் பெற்று, தமது ஆசிரியப் பணியினையே துறந்து மக்கள் சேவைக்காகவே, ஞானமூட்டி வந்த பெருந்தகை சபாரத்தினம் சுவாமிகளாவார். மேற்படி பணியினை மேற்கொள்ளச் சைவப் பெருமக்களாகிய நாம் எம்மால் இயன்ற பங்களிப்பினை நல்கவேண்டும். திருக்கேதீஸ்வரம், ஆலயத் திருப்பணிச் சபையினர் இக்கைங்கரியத்திற்கு நிச்சயமாக ஒத்துழைப்பினை நல்குவார்கள் என எதிர்பார்க்கலாம்.

திருவாசக மடம் அமைத்தமை, கௌரீசர் பாடசாலை அமைத்தமை, இவற்றுடன் நெசவு சாலை, நன்னீருக்கான குடிதண்ணீர் கிணறுகள் போன்ற அருட்பணிகளைச் செய்தும், அடியார்களுக்கு, சமய அறிவிற்காகத் தம் உடல் பொருள் ஆவி அனைத்தையுமே, தன்னலமற்ற ஈந்த சுவாமிகளை நாம் என்றுமே நினைவு கூரல் வேண்டுமல்லவா?

சுவாமிகள் மூலம் திருவருள், குரு அருளைப் பெற்ற அனைத்துத் தொண்டர்களின் விருப்பம் நிறைவெய்தியே தீரும். எனவே, தற்போதைய சூழலில், திருக்கேதீஸ்வரத்தில், அவர் வாழ்ந்த சூழலில் ஒரு மடத்தினை நிறுவ நாம் பூரண ஒத்துழைப்பு நல்குவோமாக. ★


## தெய்வீக ஸ்தலங்களில்...



சண்டிலிப்பாய், கல்வளை விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற இரதோற்சவத்தின் போது விநாயகப்பெருமான் தேரில் வீதியுலா வருவதைப் படத்தில் காணலாம். (10-13)



கோப்பாய் தெற்கு, பழைய வீதி வீரபத்திரர் ஆலயத் தேர்த்திரு விழா அண்மையில் நடை பெற்றபோது எடுக்கப்பட்ட படம்.
*(படம்: வலி. கிழக்குச் செய்தியாளர்)*



வழக்கம்பரை முத்து மாரி அம்பாள் ஆலய வருடாந்தத் திருவிழாவில் அம்பாள் அழகிய கப்பல் வாகனத்தில் எழுந்தருளி வீதியுலா வருவதைப் படத்தில் காணலாம்.
*(படம்: சுழிபுரம் செய்தியாளர்)*

# மனதை அடக்கத் தெரிந்து கொண்டவன் மகத்துவம் மிக்கவாழ்வைப் பெறுவான்

இருபத்தோராம் நூற்றாண்டு விஞ்ஞானம் மேலோங்கி மெஞ்ஞானம் குன்றியுள்ள காலம். பொய்யான புலன்நெறிமீது மக்கள் போதையுற்று மயங்கும் காலம். பொருளாட்சி ஓங்கி அருளாட்சி வீழ்ச்சியுற்ற காலம்.

மனிதன் அம்புலியில் அடிபதித்தது அறிவியலின் அரிய சாதனை. இது அறிவியலின் புதுமை. விஞ்ஞானிகளின் மகத்தான வெற்றி. இது மனிதன் அறிவின் உச்சியில் அமர்ந்துள்ளதை அறுதியிட்டுக் காட்டுவது. அறிவு கொழுந்துவிட்டுக் கோலோச்சினாலும் அகிலத்தில் ஆலயங்களும், மடங்களும், ஆதீனங்களும், தவ

**திருமதி பரமேஸ்வரி சிவராமலிங்கம்**

சிரேஷ்டர்களும், ஞானிகளும், மகான்களும் இருக்கவே செய்கிறார்கள்.

அலை அலையலையாக இவ்விடங்களுக்கு மக்கள் இஷ்டமுடன் செல்வதற்குக் காரணம் நிலையில்லா உலக வாழ்வில் கஷ்டத்தைத் தவிர்த்து மனஅமைதியைப் பெறுதற்கேயாம். அறிவால் ஆகாதது அவனியில் எதுவுமில்லை என்ற நிலை நிலவுகின்றபோதிலும் ஆன்ம சுகத்தை வழங்கவல்லது அறிவா, ஆன்மீகமா? என்ற வினாவிற்கு ஆன்மீகம்தான் என்று அடித்துக்கூற வேண்டியுள்ளது.

உணர்ச்சிபூர்வமான மனங்களில் ஏற்படும் சபலங்களைச் சமனப்படுத்துவதுதான் ஆன்மீகம். வீட்டில் குழப்பத்திற்கும், நாட்டில் கொந்தளிப்பிற்கும் காரணம் மனித மனங்களில் ஏற்படும் மாறுபட்டதன்மை எனலாம். மனம் மனிதனை ஆட்டிப்படைக்கின்றது. எனவே, மனத்தை ஆண்டால் மகத்துவம் பெறலாம்.

பேயாய் உழலும் மனத்தைத் தெய்வீக சிந்தனை மூலம் கட்டுப்படுத்தலாம். 'மனத்தானாம் மாண்பு' என்பதற்கேற்ப மனம் மாசுமறுவின்றி இருந்தால் மனிதனும் தெய்வமாகிவிடலாம். 'மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்து அறன்' என்பது வள்ளுவர் கருத்து.

தெய்வீக சிந்தனையால் மனம் தேகசுகம் பெறுகின்றது. 'உள்ளத்தனையது உயர்வு' எனவே, மனம் தெளிந்தால் தூய்மை உடையதாய் இருந்தால் அங்கு இறைவன் உவந்து உறைவான். உள்ளக் கமலம் உத்தமனார் வேண்டுவது இறையருள் கைகூடிவிட்டால் உடம்பிலும் முகத்திலும் சாந்தி ஏற்படும். அது பலரைக் காந்தமாக இழுப்பதுடன் சாந்திக்கும் வழிசமைக்கும். தனி மனித எண்ணங்களும் சிந்தனைகளும் மாற்றமடையும்போது உலகம் உன்னதநிலையடையும். இளைய சமூகம் ஆன்மீக உணர்வு பெறுவதற்கு இன்றைய கல்வி முறை காரணமாக அமையவேண்டும.

காரண காரியத் தொடர்பை விளக்குவது அறிவியல். இதற்கு அப்பால் தெய்வீக அருள் விந்தையை - அற்புதத்தை விளைக்கவல்லது. அவனின்றி அணுவும் அசையாது என்பது தமிழர் தம் தொன்மைச் சிந்தனை. இன்று மேற்கு நாட்டவர்களும் ஆன்மீகத்தில் அதிக நாட்டம் கொண்டு வருவதற்குக் காரணம் பணம் வழங்கும் பரமசுகத்தைவிடப் பகவான் அருள் வழங்கும் பேரின்பம் பலமடங்கு அதிகமானது - நிச்சயமானது என்பதே.

இரண்டாம் உலக யுத்தத்தின்போது பிரித்தானியப் பிரதமராக இருந்த வின்ஸ்டன் சேர்ச்சில் படைகள் பக்கபலமாக இருந்தபோதிலும் பகவான் அருளைவேண்டி, யேசுபிரானைப் பிரார்த்தனைசெய்த பின்னரே - போரில் பங்குகொண்டார் என்பதிலிருந்து உரிய நேரத்தில் உதவும் தெய்வசக்தியின் ஆற்றல் எத்தகையது என்பதை நாம் அறியலாம். ✦

# யா/புனித ஹென்றியரசர் கல்லூரி முன்னாள் அதிபர்

வணக்கத்திற்குரிய

# அமரர் அருட்திரு. அன்ரன் இராசநாயகம் அடிகளார்

அவர்களின்

# இறுதி அஞ்சலி இதழ் - 16.07.2004

மலர்வு




1932



மறைவு




2004

குருத்துவம்: 21.12.1957

## அமரரின் வாழ்க்கை வரலாறும் அளப்பரிய சேவையும்

ஈழவளநாட்டின் மூளைவளமிக்க குடாநாட்டின் தீவகப்பகுதியிலுள்ள பொன்பூத்த கரம்பொன் என்னும் அழகிய ஊரின் தவப்பயனே இந்த அவதாரபுருஷன், மறைந்த அருட்திரு. அன்ரன் திலகரட்ணம் இராசநாயகம் அடிகளாராவார்.

இவர் உயர்கத்தோலிக்க குடும்பத்தில் தாசீசியஸ் இராசநாயகத்திற்கும் செலஸ்ரீனா முத்துவீற்கும் மூத்த புதல்வனாக 1932ஆம் ஆண்டு ஆனித்திங்கள் 12ஆம் நாள் பிறந்தார்.

'முதற்பலன் முதல்வனுக்கே' என்ற அவருடைய பெற்றோர்களின் தியாக மனப்பாங்கு அவரது சேவைக்கு வித்திட்டதால் சிறுபராயம்தொட்டே ஒழுக்க சீலராய், கல்வியில் வல்லோனாய், சேவையில் நல்லோனாய் உயர வளர்க்கப்பட்டார்.

தனது ஆரம்பக் கல்வியைப் புனித சாள்ஸ் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் தொடங்கினார். இறைவனின் திராட்சைத் தோட்டத்தில் பணிபுரிய அழைக்கப்பட்டதன் விளைவாகப் புனித மாட்டினார் சிறிய குருமடத்தில் இணைந்துகொண்டே புனித பத்திரிசியார் கல்லூரியில் தனது இடைநிலைக் கல்வியைத் தொடர்ந்தார்.

இறைபணியில் கொண்ட உறுதி கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் பெரிய குருமடத்தில் மெய்யியல் கல்விக்காகக் கொண்டுவந்து சேர்த்தது. இவரது விவேகம், அறிவுத்திறன், ஆற்றல் என்னும் அரிய பண்புகள் இறையியல் கல்வியைத் தொடர உரோமாபுரிக்கு அனுப்பியது.

1957ஆம் ஆண்டு மார்கழி மாதம் 21ஆம் நாள் இவர் உரோமாபுரியில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

இவர் தமது பணியைத் தாய்த்திருநாட்டில் மன்னார் புனித செபஸ்ரியார் ஆலயத்தில் உதவிப்பங்குத்தந்தையாக ஆரம்பித்தார். பின்னர் 1960 தொடக்கம் 1963 வரை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் உதவி அதிபராகப் பணிபுரிந்தார். 1963இன் ஆரம்பகாலத்தில் தற்காலிகமாக சுண்டுக்குளி புனித அன்னாள் ஆலயத்தின் பங்குத் தந்தையாகவும் பின்பு 1963தொடக்கம் 1964 வரை முல்லைத்தீவிலும் அருட்பணி புரிந்தார்.

ஆளுமைமிகுந்த இவர், 1964 - 1966 காலப்பகுதியில் புனிதமாட்டினார் குருமடத் தலைவராக இருந்தார். மேலும் 1966இலிருந்து 1969 வரை யாழ். மரியன்னை பேராலயத்தின் பங்குத் தந்தையாகப் பணிபுரிந்தார்.

மேலும் 1969 - 1974 காலப்பகுதியில் உரோமாபுரியிலுள்ள 'புரொபக்கண்டா' கல்லூரியிலும் 1975இல் ஒட்டோவாவிலும் தனது உயர்கல்வியை மேற்கொண்டு முதுமாணிப்பட்டம் பெற்று மீண்டும் தாயகம் திரும்பினார்.

தனியார் கத்தோலிக்கக் கல்லூரியாக இருந்த எம் கல்லூரி அரச மயமாக்கப்பட்ட அந்த இக்கட்டான காலகட்டத்தில் 1976இல் எமது அன்பான அதிபராகக் கடமையேற்று வந்தார். "காரணமில்லாமல் காரியமில்லை" என்று சொல்லிச் சொல்லிப் பலவற்றைச் சாதித்த காரியவீரன் இவர் என்றால் மிகையாகாது. கல்வி, சமயத்துறை மட்டுமல்ல விளையாட்டு, கலை, கலாசார ரீதியாகவும் அதிக ஈடுபாட்டினை ஏற்படுத்தி அகில இலங்கை ரீதியாக களம் பல கண்டு வெற்றி பல ஈட்டிய பெருமகன் இன்று மறைந்துவிட்டார்.

குறிப்பாக கல்லூரி மைதானத்தின் மாடிக் கட்டடம், திறந்த வெளியரங்கு போன்றன உருவாகக் காரணகர்த்தாவாக விளங்கினார். இவர் அப்போது அதிபராக மட்டுமல்ல இளவாலை மறைக்கோட்ட முதல்வராகவும் 1988வரை பணி புரிந்தார்.

பின்பு நோய்வாய்ப்பட்ட போதும் பணியில் சளைக்காது 1989இல் மானிப்பாய் பங்குத் தந்தையாகவும் 1993இல் மீண்டும் யாழ். மரியன்னை பேராலய பங்குத் தந்தையாகவும் முடிந்த மட்டும் தொடர்ந்தார். பின்னர் இவரது நோய் இவரை ஓய்வு நிலைக்குத் தள்ளியதால் 1996 தொடக்கம் கொழும்பில் தனது ஓய்வுகாலத்தைச் செபத்தில் கழித்தார். கிறிஸ்து மறையில் அவர் கொண்டுள்ள பற்றினாலும் அவரது சேவை மனப்பான்மையாலும் இறைவன் இவருக்குப் பல பொறுப்புக்களையும் பதவிகளையும் கொடுத்து மிகுந்த கனிதரும் விருட்சமாகத் தழைக்கச்செய்தார். எமது கல்லூரிச் சமூகம் இவர் பணியை உள்ளத்திலே ஏந்தி வாயாரப் போற்றுவதோடு, இவர் அமைதியில் இளைப்பாற ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றது.

## கல்லூரி அதிபரின் இரங்கல் செய்தி

எமது கல்லூரியின் முன்னாள் அதிபர் வணபிதா அன்ரன் இராஜநாயகம் அடிகள் அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு எமது கல்லூரிக் குடும்பமானது ஆழ்ந்த துயரில் மூழ்கியுள்ளது.

அமரத்துவம் அடைந்த அடிகளார் அவர்கள் உப அதிபராக 3 ஆண்டுகள். அதிபராக 13ஆண்டுகள் எமது கல்லூரியில் பணி புரிந்துள்ளார். றோமாபுரியில் குருத்துவக் கல்லூரியில் உப அதிபராகக் கடமைபுரிந்த அடிகளார் அவர்கள் எமது கல்லூரியில் ஏற்பட்ட அதிபர் வெற்றிடத்தை நிரப்புவதற்காக எமது கல்லூரியின் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

அடிகளார் அவர்கள் எமது கல்லூரி அதிபராகப் பதவி வகித்த காலம் எமது கல்லூரிக்குப் பொற்கால மாகும். இக்காலப்பகுதியில் கல்லூரியின் வளர்ச்சி. கல்வி. விளையாட்டு. கலை. சாரணீயம் போன்ற பல்வேறு துறைகளில் ஏற்பட்டிருந்தது. குறிப்பாக விளையாட்டுத்துறையில் தேசிய மட்டத்தில் இடம்பெற்ற உதை பந்தாட்டப் போட்டியில் எமது பாடசாலை அணி முதலிடம் பெற்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

மேலும் அடிகளார் அவர்கள் மாணவர்களது நல்லொழுக்கம். ஆன்மீக வாழ்வு போன்றவற்றில் அதிக அக்கறை கொண்டு சிறந்ததொரு மாணவர் சமுதாயத்தை உருவாக்கினார். அவரது மாணவர்கள் இன்று உலகின் பல பகுதிகளிலும் உயர்நிலைகளை வகித்து அடிகளார் அவர்களுக்கும் கல்லூரிக்கும் பெருமை சேர்த்தவண்ணம் உள்ளனர்.

மேலும் அடிகளாரது சேவையின் சின்னமாகக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் அவரால் அமைக்கப்பெற்ற இரு மாடிக்கட்டடங்கள் அவரது பெயரை நினைவுகூர்ந்தவண்ணம் உள்ளன.

அடிகளார் அவர்கள் பாடசாலை அதிபராகக் கடமைபுரிந்தது மட்டுமன்றி. பங்குப் பணிகளிலும் ஈடுபட்டதோடு. இளவாலை மறைக்கோட்ட முதல்வராகவும் விளங்கினார். சிறந்த நிர்வாகத்திறன் வாய்ந்தவராக விளங்கிய அடிகளார் அவர்கள் பாடசாலையில் ஆசிரியர்களிடம் மிக அன்பாகப் பழகிப் பணிகளை இலகுவாக்குவதில் சாமர்த்தியம் மிக்கவராக விளங்கினார்.

நிமிர்ந்த நன்நடையும். நேர்கொண்ட பார்வையும். திமிர்ந்த ஞானச்செருக்கும் கொண்ட அடிகளாரின் சேவைகள் எண்ணிலடங்காதவை.

இத்தகைய பல சேவைகளைப் புரிந்த அடிகளார் அவர்கள் இன்று எம்மைவிட்டுப் பிரிந்தாலும் அவர் ஆற்றிய சேவைகள் இன்றும் எம்மத்தியில் நிலைத்திருக்கின்றன. அவரது ஆன்மா சாந்திடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

**வணபிதா.க.ஜேம்ஸ் சிங்கராயர்,**
அதிபர், புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை.

## கண்ணீர் அஞ்சலி

*உருவம் மறையும் மட்டும் ஊதுவர்த்தி மணம்பரப்பும்*
*அருட்குரு அன்ரன் இராசநாயகம் மறைந்தாலும் வரலாறு புகழ்பரப்பும்*
*கருணை ஒழுகும் உங்கள் விழிகள் கல்லறைக்குள் துயின்றாலும்*
*இருள் நீக்கிய எழுகதிரே! என்றியரசர் எப்படி உம்மை மறக்கும்*

*ஆண்டுகள் மூன்று ஈங்கு உபஅதிபராகி உயர்ந்த சேவையும் மீண்டு*
*பதின்மூன்றாண்டுகள் அதிபராய் ஆற்றிய பெரும்பணியும்*
*ஈண்டு நாம் இரைமீட்டு இதயம் மகிழ்ந்து நின்றாலும்*
*காண்போமா இனி காசினியில் உங்கள் நடமாட்டத்தை*

*வருடமது 1977 இல் எம் கல்லூரி நிதி வலுக்குன்றியதால்*
*உருக்குலைந்து அரசிடம் கையளிக்கப்பட்ட நெருக்கடி வேளைதனில்*
*வருத்தமுற்ற கல்லூரியின் அதிபராய் போஷாக்கு ஊட்டி*
*திருமகளாய் திகழவைத்தீர்கள் எங்கள் கல்லூரித் தாயவளை*

*முனிவே கொள்ளாத எங்கள் கல்லூரியின் முன்னாள் முதல்வா!*
*கனிவான உங்கள் சேவையால் எம்வாழ்வு இன்று ஒளிர்கின்றது*
*இனிய சொல் ஈன்று எம்மை நன்னெறிக்குய்த்த நல்மேய்ப்பனே*
*நனிசிறந்த உங்கள் பணியை எம்வாழ்வு பறைசாற்றி நிற்கும்*

*விரிந்த நெற்றியும் கனிந்த பார்வையும் குழைந்த பேச்சும்*
*நேரிய போக்கும். நிர்வாகத்திறனும் நிதானமும். கொண்ட*
*சீரிய அதிபரென அன்றைய ஆசிரியர் அலுவலர் அகம் மகிழ்ந்தனர்*
*பிரிந்தும். பிரியாது ஓய்வுபெற்றாலும். ஒன்றியிருந்தது உம் இதயம் என்றியரசர் கல்லூரியுடன்*

*எண்ணிறைந்த இளைஞர்களை இளவாலையூரில் ஏற்றம் பெற வைத்தவரே!*
*புண்ணியப் பேறாய் எம் கல்லூரியன்னை அன்று அதிபராய் உமைப் பெற்றாள்*
*வண்மையுறச் சேவைசெய்த. எம் சிந்தை நிறை கலங்கரை விளக்கே!*
*கண்ணீர் அஞ்சலி செலுத்துகின்றோம் பழைய மாணவர்கள் நாம் அணிதிரண்டு.*

**இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி,**
**பழையமாணவர் சங்கம்.**

## ஆசிரியர்களின் உள்ளங்களிலிருந்து....

யா/புனித ஹென்றியரசர் கல்லூரியில் மூன்று ஆண்டுகள் உப அதிபராகவும், பதின்மூன்று ஆண்டுகள் அதிபராகவும், தன்னிகரில்லாத கல்விப்பணி நல்கிய சேவையின் செம்மல், அருட்திரு. அன்ரன் திலகரட்ணம் இராஜநாயகம் அடிகளார் ஆவார்.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமையுடைத் திவ்வுலகு" என்ற வள்ளுவர் பெருமானின் வாக்கிற்கு இலக்கணமாகி இன்று எம்மை விட்டுப்பிரிந்து அமரத்துவம் எய்தியமை எமக்கெல்லாம் பேரிழப்பாகும்.

சிறந்த குருவாய், சீரமைந்த நிர்வாகியாய், நெறிப்படுத்தும் வழிகாட்டியாய், ஆலோசகராய் தன்னலமில்லாச் சேவை மனப்பான்மை கொண்டு செயலாற்றிய அடிகளாரின் தோற்றப் பொலிவே தெய்வீகம் மிக்கது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அடிகளாரின் ஆத்மா இறைவனின் இணைமலர்ப் பாதங்களில் நித்தியானந்த இன்பம் பெறவேண்டி இறைவனைப் பிரார்த்தித்து நிற்பதோடு எமது கண்ணீர்ப் பூக்களையும் காணிக்கையாக்குகின்றோம்.

**ஆசிரியர் கழகம்,**
**யா/புனிதஹென்றியரசர் கல்லூரி, இளவாலை.**

# மழைகாலத்துக்கு முன்பாக கழிவு வாய்க்கால்கள் திருத்தம்

## யாழ். ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம்,ஜூலை16

யாழ். பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கழிவுநீர் வாய்க்கால்களை மழைகாலத்துக்கு முன்பாக துப்புரவுசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேற்கண்டவாறு யாழ். பிரதேச செயலாளர் பிரிவில் பிரதேச செயலாளர் பா.செந்தில்நந்தன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

கடற்கரைப் பிரதேசத்தில் உள்ள வீதிகளில் மீனவர்கள் தமது வலைகளை காயவிடுவதினால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. இது சம்பந்தமாக கடற்தொழிலாளர் சங்கத்துடன் தொடர்பு கொண்டு இதற்கு மாற்று நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

யாழ்.மடம் வீதிப் பகுதியில் அத்துமீறிக் குடியிருப்பவர்களினால் கழிவுநீர் வாய்க்கால்கள் வேலிகள் போட்டு தடைசெய்யப்பட்டுள்ளன. இதனால், இப்பகுதியில் கழிவுநீர் தேங்கி பல்வேறு நோய்கள் பரவுவதற்கும் வழியாகவுள்ளன.

இப்பகுதி மக்களின் நன்மை கருதி கழிவு நீர் செல்லும் வாய்க்காலை அடைத்துள்ள வேலிகளை நீக்கி கழிவுநீர்செல்ல நடவடிக்கை எடுத்தல்.

யாழ். சிறைச்சாலையில் அம்மைநோய் பரவிவருகின்றது. இந்நோய் காற்றினால் பரவுவதினால் அயல்ப் பகுதியில் உள்ள மக்களுக்கும் நோய்பரவ சந்தர்ப்பம் உண்டு. ஆகவே, சுகாதாரப் பகுதியினர் சிறைச்சாலைக்கு சென்று இந்நோயைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யாழ். பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பின்தங்கிய கிராம அலுவலர் பிரிவுகளில் பொதுத் தொலைபேசிகள் இணைப்புகளை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

யாழ். மாநகர சபையினால் தனியார் ஒருவரின் வசதியை முன்னிட்டு குடிதண்ணீர் குழாய் பொருத்த இடம்தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இத்தண்ணீர்க் குழாயை பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய இடத்தில் பொருத்தவேண்டும்.

மாநகரசபையின் அங்கீகாரம் இன்றி கட்டப்பட்ட மற்றும் கட்டப்பட்டு வரும் கட்டடங்களுக்கு தொலைபேசி இணைப்புகள், மின்சார இணைப்புகள் போன்றவற்றை வழங்காது தடைசெய்ய வேண்டும் ஆகிய தீர்மானங்கள் இறுதிசெய்யப்பட்டன. (ஒ-86)

# வடமராட்சிக்கு கால்நடைகளை கொண்டு செல்லத் தடைவிதிப்பு

கரவெட்டி,ஜூலை16

வடமராட்சிக்கு வெளிமாவட்டங்களில் இருந்து கால்நடைகள் கொண்டுவரத்தடை விதிக்கப்பட்டுள்ளது. கரவெட்டிப் பிரதேச அரசினர் கால்நடை வைத்திய அதிகாரி திருமதி என்.சரோஜினிதேவி இதனைத் தெரிவித்தார்.

மேற்படி நடைமுறை இராணுவம், பொலீஸ் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு போன்றவற்றின் ஒத்துழைப்புடன் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஏனைய பிரதேசங்களில் கால்நடைகளுக்கு கால்வாய்ப்புண் நோய் காணப்படுவதால் மேற்படி இடங்களில் இருந்து கால்நடைகளை வடமராட்சியிப் பகுதிக்குக் கொண்டுவருவது தடை செய்யப்பட்டுள்ளது. நோய்த் தொற்றைத் தடுக்கவே இத்தடை உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கால்நடைகளுக்கான மருந்துகளுக்கும் தடுப்பு ஊசிமருந்துகளுக்கும் விவசாய, கால்நடை அபிவிருத்தி அமைச்சிடம் இருந்து பண உதவி எதுவும் செய்வதில்லை. இதனால் மேற்படி சிகிச்சைக்கான பணத்தை கால்நடைகளின் உரிமையாளர்களிடம் பெற்றே சிகிச்சையளித்து வருகின்றோம்.

தற்போது "கால்வாய் புண்நோய்" சம்பந்தமான சிகிச்சைக்குரிய "ஒலட்டைப்' என்ற மருந்து தற்போது தம் வசம் இல்லை எனினும் வடமராட்சிப் பகுதியில் இதுவரை கால்நடைகளுக்குரிய நோய் காணப்படவில்லை என்றார் அவர். (ஒ-70)

# கணக்காய்வுக் குழு விஜயம்

யாழ்ப்பாணம்,ஜூலை16

யாழ். குடாநாட்டில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு மாகாணக் கணக்காய்வு பிரதி செயலாளர் குழு கடந்த செவ்வாய்க்கிழமை திடீர்விஜயம் மேற்கொண்டது.

மாகாணக் கணக்காய்வுப் பிரதிச் செயலாளர் டாக்டர் கே.தியாகராஜா தலைமையில் 4 பேர் கொண்ட குழுவே திடீர் விஜயம் மேற்கொண்டது.

கடந்த காலங்களில் உள்ளூராட்சி சபைகளின் கணக்குகள் குறித்து இக்குழுவினர் ஆராய்ந்தனர்

அத்துடன், மாகாணக் கணக்காய்வு அதிபதியால் கோரப்படும் சந்தேகங்களுக்கு விடையளிப்பது தாமதமாவது குறித்தும் இக்குழு ஆராய்ந்தது. (ஒ-185)



கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு இளவாலை புனித யூதாதேயு சனசமூக நிலையத்தினர் நிலையப் பகுதியில் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர். சிரமதானத்தில் ஈடுபட்டிருப்போரைப் படத்தில் காணலாம். மாரீசன்கூடல் றோ.க.த.க. பாடசாலை அதிபர் எஸ். உதயகுமாரும் படத்தில் உள்ளார்.

*(படம்: மாதகல் செய்தியாளர்)*

# சுவரில் ஏறிய குடும்பஸ்தர் தவறி கிணற்றில் வீழ்ந்து மரணம்

யாழ்ப்பாணம்,ஜூலை16

கிணற்றோடு இருந்த மதிலைக் கடக்க மதிலில் ஏறியவர் மதில்சுவர் உடைந்ததால் தவறிக் கிணற்றினுள் வீழ்ந்து உயிரிழந்தார்.

நாவாந்துறையில் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெற்ற இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த நீக்கிலாஸ் பாலதாஸ் (வயது 34) என்ற 5 பிள்ளைகளின் தந்தையே மரணமானவராவார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட இவரது சடலம் நேற்றுமுன்தினம் அங்கு இடம்பெற்ற மரண விசாரணை, பிரேத பரிசோதனையை அடுத்து உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நபர் மதிலுக்கு அப்பால் இருந்த தனது வீட்டுக்குச் செல்ல மதிலைக் கடக்க முற்பட்டபோதே இச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-15)

## கொடி பறக்கவிடாமல் குறிகாட்டுவான் நோக்கி வந்த பயணிகள் படகு வழிமறிப்பு

நெடுந்தீவு,ஜூலை16

நெடுந்தீவிலிருந்து நேற்றுமுற்பகல் 10மணியளவில் குறிகாட்டுவான் நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியார் படகு கடற்படையினரால் திடீரென வழிமறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டது.

இந்தப் படகில் வழமைபோன்று தேசியக் கொடி பறக்கவிடப்பட்டிருக்கவில்லை என்றும்-

அதை அவதானித்தே கடற்படையினர் அந்தப் படகை வழிமறித்துச் சோதனையிட்டனர் என்றும் - கூறப்படுகிறது.

சிறிதுநேர தாமதத்தின் பின் படகு குறிகாட்டுவான் துறையை அடைந்தது. (ஐ)

## தென்னை, பனை வள கற்கை நெறிக்கான விரிவுரைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை 16

யாழ். பல்கலைகழக விவசாய பீடத்தினால் நடத்தப்படவுள்ள பனை, தென்னை வள தொழில்நுட்ப சான்றிதழ் கற்கை நெறிக்குரிய இரண்டாம் அரையாண்டுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

விரிவுரைகள் விவசாய பீடத்தில் நடைபெறும் என்று கற்கைநெறி இணைப்பாளர் கலாநிதி திருமதி சிவமதி சிவச்சந்திரன் அறிவித்துள்ளார். (ஐ)

## மக்கள் தொடர்பாடல் பணிப்பாளர் பதவி

யாழ்ப்பாணம்,ஜூலை16

மக்கள் தொடர்பு, தொடர்பாடல் பணிப்பாளர் பதவிக்கு பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர், மக்கள் தொடர்பு மற்றும் விளம்பரம் சம்பந்தப்பட்ட துறைகளில் நிபுணத்துவம் உள்ளவராக இருந்தல் வேண்டும்.

செயலாளர், புனர்வாழ்வு, புனரமைப்பு அகதிகள் மீளக்குடியமர்வு அமைச்சு, முதலாவது மாடி இல.177, காலி வீதி, கொழும் 3 எனும் முகவரிக்கு விண்ணப்பத்தை அனுப்பிவைக்கலாம். விண்ணப்பதாரர் கணனியறிவு மற்றும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் எழுத, வாசிக்க சரளமாகத் தெரிந்திருக்கவேண்டும். விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் வியாழக்கிழமை ஆகும். (ஒ-185)

## தென்மராட்சியில் கல்விக் கண்காட்சி

தென்மராட்சி,ஜூலை16

தென்மராட்சிக் கல்வி வலய பாடசாலைகளின் மாணவர்களுக்கிடையிலான வலய மட்டக் கல்விக் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

முதல் நாள் கண்காட்சியினை தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசனும், இரண்டாம் நாள் கண்காட்சியினை சாவகச்சேரி இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் இ.கயிலைநாதனும் ஆரம்பித்துவைப்பார்கள்.

முதல்நாள் மாணவர்களும் இரண்டாம் நாள் பெற்றோர்களும் கண்காட்சியினைப் பார்வையிடலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-117)

## மழைநீர் சேகரிப்புக் குறித்து 5 நாள்கள் பயிற்சி வகுப்பு

தென்மராட்சி,ஜூலை16

லங்கா மழை நீர் சேகரிப்பு நிறுவனத்தினர் குடாநாட்டில் மழை நீர் சேகரிப்புத் தொட்டிகளை அமைப்பது தொடர்பாக ஐந்து நாள்கள் பயிற்சி வகுப்பினை நாளை முதல் ஆரம்பிக்கவுள்ளனர்.

மாவட்டத்திலுள்ள கட்டடத்தொழிலாளர்களுக்கு (மேசன்) நடத்தப்படவுள்ள இப் பயிற்சி நெறியில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலிருந்தும் தலா இரண்டு பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

நாளை தொடக்கம் யாழ். மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ள இப் பயிற்சி நெறியில் கலந்துகொள்வோருக்கு நாளொன்றுக்கு 300 ரூபா வீதம் கொடுப்பனவு வழங்கப்படுமென யாழ். செயலக திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் நா.சிவபாதசுந்தரம் அறிவித்துள்ளார். (ஒ-117)

## கட்டாக்காலி நாய்களை அழிக்கும் பணி தீவிரம்

யாழ்ப்பாணம்,ஜூலை16

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 28 கிராம அலுவலர் பிரிவுகளிலும் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் பணி முழுவீச்சில் இடம்பெறவுள்ளது.

இதற்கான நடவடிக்கையினை பிரதேச சபை மேற்கொண்டுள்ளது.

உள்ளூராட்சி வாரத்தினையொட்டி எதிர்வரும் 19ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 25ஆம் திகதி வரை கிராம அலுவலர் பிரிவு ரீதியாக சகல கிராமங்களிலும் கட்டாக்காலி நாய் அழிப்பு நடவடிக்கை இடம்பெறவுள்ளது. (ஒ-185)

## மின்சாரம் இன்றி மக்கள் விசனம்

ஏழாலைதெற்கு,ஜூலை16

புன்னாலைக்கட்டுவன் தெற்குப் பகுதியின் ஜே/207 கிராம அலுவலர் பிரிவுக்கு இதுவரை மின்சாரம் விநியோகிக்கப்படவில்லை.

இப்பிரதேச பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மாவட்ட மின்சாரசபை அதிகாரிகளுடன் இது தொடர்பாகப் பல தடவைகள் தொடர்புகொண்டு கோரிக்கை விடுத்த போதும் சம்பந்தப்பட்டவர்கள் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதால் பொதுமக்கள் விசனம் அடைந்துள்ளனர். (ஒ-45)

## மாணவருக்கு அன்பளிப்பு

சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உரும்பிராய், செல்வபுரம் முன்பள்ளிச் சிறார்கள் 75 பேருக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

உரும்பிராய், செல்வபுரம் முன்பள்ளி நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வின்போது இப்பொருள்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறை நிர்வாகப் பொறுப்பாளர் வே.தமிழ்மறவன் வழங்கினார். (ஒ-86)

## செயலகத்தில் கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்துக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்ட நிதி ஒதுக்கீடு தொடர்பான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரதேச செயலர்கள், திணைக்களத் தலைவர்கள், செயலக அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (10-13-135-201)

# நிறுவை, அளவை கருவிகளுக்கு முத்திரை

தென்மராட்சி,ஜூலை16

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட வர்த்தக, வியாபார நிலையங்களில் பயன்படுத்தும் நிறுவை, அளவை கருவிகளுக்கு 2004 ஆம் ஆண்டுக்கான முத்திரையிடும் பணி எதிர்வரும் 19ஆம் திகதியிலிருந்து 22ஆம் திகதிவரை நான்கு நாள்கள் சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். செயலக நிறுவைகள், அளவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் இத்தினங்களில் வருகை தரவுள்ளனர் என்றும் -

வர்த்தக வியாபார நிறுவனங்கள் தமது நிறுவை, அளவைக் கருவிகளுக்கு இத்தினங்களில் முத்திரையிட்டுக் கொள்ளுமாறும் -

நகரசபை செயலாளர் மு.செ.சரவணபவ அறிவித்துள்ளார். (ஒ-31-117)

# இருவரைக் காணவில்லை என முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஜூலை16

கடந்த 4ஆம் திகதி வீட்டிலிருந்து புறப்பட்ட ஒன்பது வயதுச் சிறுவன் இதுவரை வீடு திரும்பவில்லையென்று மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

துணவி, அரசடிப்பிள்ளையார் கோயிலடி, சங்கரத்தையைச் சேர்ந்த விநாயகமூர்த்தி விசாகன் (வயது 9) என்ற சிறுவனே காணாமற் போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 4ஆம் திகதி வீட்டிலிருந்து விளையாடச் செல்வதாகக் கூறிச்சென்ற இச்சிறுவன் இதுவரைக்கும் வீடு திரும்பவில்லையென்று அவரது உறவினர்கள் அந்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை -

கடந்த 5ஆம் திகதி தனியார் கல்வி நிறுவனத்திற்குச் செல்வதாகக் கூறிச்சென்ற நயினாதீவைச் சேர்ந்த இராஜகோபால் கஜேந்தன் (வயது 18) என்ற மாணவனும் இதுவரைக்கும் வீடு திரும்பவில்லையென்றும் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (8-13)

இளைஞர் யுவதிகளின் கனவுகளை நனவாக்கும்

இளம் பருவத்தினரின் சேமிப்புக் கணக்கு



ஒரு லட்சம் ரூபா வரையிலான சுகாதாரக் காப்புறுதி

முதல் குழந்தைக்கு ரண் கெகுளு கணக்கு

உயர் கல்விக்கான புலமைப்பரிசில்

உயர் வட்டி

திருமணநாளில் ஒரு பவுண் தங்கப்பரிசு

ரூபா. 5 லட்சம் வரையிலான ஆயுள் காப்புறுதி

VISA Electron & Credit Card

வங்கிக் கடன் வசதி

18 +plus Youth Savings Account

இளம் பருவத்தினருக்கு அன்புடன்

Twin Advertising

BOC

ලංකා බැංකුව இலங்கை வங்கி

உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி



# மரண அறிவித்தல்

## மடுத்தீன் எட்வேட் (முத்து)



யாழ்ப்பாணம், நெடுந்தீவு 11ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட மடுத்தீன் எட்வேட் (முத்து) 14-07-2004 புதன்கிழமை நெடுந்தீவில் காலமானார்.

அன்னார் எட்வேட் எலன் அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மடுத்தீன் - சலோமை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான அக்கினேஸ், திருச்செல்வம் மற்றும் ஞானம்மா, காலஞ்சென்ற ஹார்த்தம்மா மற்றும் லோறன்ஸ், காலஞ்சென்ற அல்போன்ஸ், இராஜநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் பறுனாந்து, எமிலி ஆகியோரின் அன்பு மருமகனும் எட்வேட் ஜெயசுதாஸனின் (பிரான்ஸ்) அன்புத் தந்தையும் ஜேசுதாசன் ஜெலாவின் (பிரான்ஸ்) அன்பு மாமனாரும் ஜெசிக்கா, ஜெபித்தா, ஜெபினேஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு, நெடுந்தீவு சேமக்காலையில் நேற்று (15-07-2004)வியாழக்கிழமை மாலை 5மணியளவில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*11ஆம் வட்டாரம்,*
*நெடுந்தீவு.*

தகவல்:
எட்வேட் ஜேசுதாசன் (மகன்),
ஜேசுதாசன் ஜெலா (மருமகள்).

(34149)(42-18-19-24)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

மலர்வு 11 11 1909



உதிர்வு 17 06 2004

## அமரர் வேலுப்பிள்ளை காசிநாதர்

(முத்தையா)

அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் நாளை (2004-07-17) சனிக்கிழமை மு.ப.11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தாங்கள் குடும்பசகிதம் சமுகம்தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*பருத்தித்துறை வீதி,*
*(துபாற்கந்தோருக்கெதிராக)*
*இடைக்குறிச்சி, வரணி.* (34154) (32-18-19-24)

மக்கள்,
மருமக்கள்.


## குடும்பநல சேவையாளர் இடமாற்றம்

கைதடி,ஜூலை16

கைதடி தெற்குப் பிரதேசத்தின் குடும்பநல சேவையாளராக திருமதி ஏஸ்ரஜீபா கடந்த மாதம் தொடக்கம் பணியாற்றி வருகின்றார். இவர் யாழ்ப்பாணம் மாநகர சபையில் கடமையாற்றி தற்போது இடம்மாற்றம் பெற்றுள்ளார்.

இதேவேளை, கைதடி தெற்குப் பிரதேசத்தில் இதுவரை காலமும் குடும்பநல சேவையாளராகக் கடமையாற்றிவந்த திருமதி பு.புவனேஸ்வரி நாவற்குழிப் பகுதிக்கு இடம்மாற்றப்பட்டுள்ளார். (ஓ-75)

## ஆக்கப் போட்டிகள்

தென்மராட்சி,ஜூலை16

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களின் சமூகக்கல்விப் பாட ஆக்கப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன என வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார்.

(10-201-117)

## பதக்கம் வழங்கல்

கொழும்புத்துறை,ஜூலை16

சாந்திசேனா தொண்டர்களின் சேவைகளைப பாராட்டிப் பதக்கம் வழங்கும் வைபவம் இன்று வெள்ளிக்கிழமை சுண்டிக்குளியிலுள்ள சர்வோதயம் அமைப்பின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் சாந்திசேனா அமைப்பின் பணிப்பாளர் ரவீந்திர கந்தகே கலந்துகொண்டு பதக்கங்களை அணிவிப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10-201-30)

## சிறுவன் பெற்றோரிடம் ஒப்படைப்பு

கரவெட்டி,ஜூலை16

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைய வந்த வயதுகுறைந்த சிறுவன் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டான்.

கரவெட்டி, வதிரியைச் சேர்ந்த இந்தச் சிறுவன் வயதை அதிகமாகக் கூறி இயக்கத்தில் இணைய முற்பட்டான்.

ஆனால், அந்தச் சிறுவனின் சரியான வயதை அறிந்துகொண்ட வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.தயா சம்பந்தப்பட்ட சிறுவனைப் பொதுமக்கள் முன்னிலையில் பெற்றோரிடம் நேற்றுமுன்தினம் ஒப்படைத்தார். (ஓ-70)

## ஆன்மீகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஜூலை16

இந்துசமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் நடத்தும ஆன்மீகச் சொற்பொழிவின் 85ஆவது தொடர் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நாவலர் மணிமண்டபத்தில் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் "திருவருள் பெற" என்னும் தலைப்பில் உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை அதிபர் அ.ஆனந்தராசா சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (10-201)

## மீனவர் சம்மேளன நிர்வாகிகள்

குருநகர்,ஜூலை16

யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசங்களின் சம்மேளனத்தின் தலைவராகச் சின்னையா தவரட்ணம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் எஸ்.வென்சஸ்லோஸ் உபதலைவராகவும், கே.சூரியகுமாரன் செயலாளராகவும், ப.லோகதாஸ் பொருளாளராகவும் சமாசப் பிரதிநிதிகளால் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனக் காரியாலயம் யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள வடமாகாணக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பணிமனையின் ஒரு பகுதியில் இயங்கிவருகிறது. (ஓ-51)

## 130 குடும்பங்களுக்கு நிவாரணம் நிறுத்தம்

வலி. மேற்கு,ஜூலை16

வலி. மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் ஏ-9 தரைவழிப்பாதை திறக்கப்பட்ட பின்னர் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுள் மீளக்குடியமர்விற்கான நிவாரணம் 25ஆயிரம் ரூபாவைப் பெற்ற சுமார் 130 குடும்பங்களுக்கு உலர் உணவு நிவாரணம் மே மாதம் தொடக்கம் நிறுத்தப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கையினைப் பிரதேச செயலகத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

மீளக்குடியமர்ந்த குடும்பங்களுள் முதல் கட்டமாக உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்படவுள்ள குடும்பங்களில் பெரும்பாலான குடும்பங்கள் வறுமையான பெண்களைக் குடும்பத் தலைவியாகக் கொண்ட குடும்பங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுகின்ற விதவைப் பெண்களுக்கும் நிவாரணம் நிறுத்தப்படவுள்ளது.

யாழ். மாவட்ட அரச அதிபரின் பணிப்பிற்கிணங்க மீளக்குடியமர்விற்கான நிவாரணம் 25ஆயிரம் ரூபா பெற்ற சகல குடும்பங்களுக்கும் உலர் உணவு நிவாரணம் கட்டங்கட்டமாக நிறுத்தப்படவுள்ளது. (ஓ-175)

# சவூதிஅரேபியாவில் வெளிநாட்டவர்கள் முறைகேடாக நடத்தப்படுகின்றார்கள்

## மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு குற்றஞ்சாட்டுகிறது

றியாத்,ஜூலை16

சவூதிஅரேபியாவிலுள்ள வெளிநாட்டுத் தொழிலாளர்கள் சவூதி முதலாளிகளால் மட்டுமல்ல நாட்டின் சட்ட அமைப்பினாலும் மோசமாக நடத்தப்படுகிறார்கள் என்று குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இவ்வாறு இம்சைக்குள்ளாகும் வெளிநாட்டவர்களைக் காப்பாற்றும் நிலையில் சவூதி சட்ட திட்டங்கள் அமைந்திருக்கவில்லை என்று மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு (ஹியூமன் ரைட்ஸ் வோச்) அறிவித்துள்ளது.

தொழிலாளர்கள் கொடுமைப்படுத்தப்படுகின்றனர்; குற்றங்களை ஒப்புக்கொள்ளும்படி வற்புறுத்தப்படுகின்றனர். குற்றங்களுக்கான விசாரணைகள் நீதியாக நடத்தப்படுவதில்லை என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த மேற்படி ஸ்தாபனம் விடுத்துள்ள அறிக்கையின்படி சவூதி இராச்சியத்தின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியான ஆசிய நாடுகளைச் சேர்ந்த ஊழியர்களே இவ்வாறு கொடுமைகளுக்குள்ளாகிறார்கள் என்று தெரியவந்துள்ளது.

சவூதி அரேபியாவின் இரண்டாவது நகரான ஜெட்டாவில் மட்டும் இந்தியா, இலங்கை, பிலிப்பைன்ஸ் நாடுகளைச் சேர்ந்த 300 பெண்கள் ஆஸ்பத்திரிகளை சுத்தம் செய்வதில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

சுழற்சிமுறையில் இவர்கள் 12 மணி நேரம் கிழமையில் ஆறுநாள்கள் வேலை செய்கிறார்கள். ஒரு சிறு அறையில் 14 பேர் வீதம் அடைக்கப்பட்ட நிலையில் வாழ்க்கை நடத்துகிறார்கள் என்று தெரிவித்துள்ள அந்த அமைப்பு ஆண்களும் பெண்களும் அடிமைகளைப் போன்ற நிலையில் காணப்படுவதாகவும் தெரியவந்துள்ளது.

சவூதியில் 8 அல்லது 9 மில்லியன் வெளிநாட்டவர்கள் இருப்பதாக அந்நாட்டு தொழில் அமைச்சர் அண்மையில் கூறியிருந்தார். இவர்களில் பெரும்பான்மையானவர்களும் இந்தியத் துணைக்கண்டத்தையும் தென்கிழக்கு ஆசியாவையும் சேர்ந்தவர்கள். சவூதி அரேபியாவின் சட்ட திட்டங்களில் சீர்திருத்தங்கள் செய்யப்படவேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு வலியுறுத்தியிருக்கும் அதே வேளை, சர்வதேச நெருக்கடி குழு என்ற அமைப்பு அரசியல் சீர்திருத்தங்களைக் கொண்டு வரும்படி ஆட்சிபுரியும் சவூதி மன்னர்களை வற்புறுத்தியுள்ளது. (ப-8)

## ஹெலிகொப்டர் விபத்தில் நைஜர் பிரதமர் தப்பினார்!

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்று நைஜர். அந்த நாட்டில் எதிர்வரும் 24ஆம் திகதி நகர சபை தேர்தல்கள் நடைபெறுகின்றன. இதில் ஆளும் கட்சிக்கு ஆதரவாக பிரசாரம் செய்வதற்காக பிரதமர் ஹமர் அமடாவ் இராணுவ ஹெலிகொப்டரில் சென்று கொண்டிருந்தார்.

அவரது ஹெலிகொப்டர் மகாரியா என்ற இடத்துக்கு அருகே வந்தபோது அதில் திடீர் கோளாறு ஏற்பட்டது. ஹெலிகொப்டரைத் தரை இறக்க முயன்றபோது அது மரத்தின் மீது பயங்கரமாக மோதியது. ஹெலிகொப்டர் நொறுங்கி விழுந்தது. ஆனாலும், பிரதமர் அமடாவ் லேசான காயங்களுடன் உயிர் தப்பி விட்டார்.

அந்தப் பகுதியில் உள்ள கிராம மக்களும், தகவல் கிடைத்து விரைந்து வந்த பொலீஸாரும் பிரதமரை மீட்டனர். காயங்களுக்கு சிகிச்சை பெற்று விட்டு பிரதமர் காரில் தனது தேர்தல் பிரசாரத்தை மீண்டும் தொடங்கினார். (8)


## ஈராக்கின் மொசூல் நகர ஆளுநரை தீவிரவாதிகள் சுட்டுக்கொன்றனர்!

ஈராக்கில் சதாம் ஆட்சி அகற்றப்பட்ட பிறகும் அவரது ஆதரவுத் தீவிரவாதிகள் தொடர்ந்து அமெரிக்கப் படைமீது தற்கொலைத் தாக்குதல் நடத்தி வருகின்றனர். ஆட்சிப் பொறுப்பை பிரதமர் அல்லவி தலைமையிலான இடைக்கால அரசிடம் ஒப்படைத்த பிறகும் தீவிரவாதிகளின் தாக்குதல் அங்கு நீடிக்கிறது.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் பக்தாத் நகரில் ஆளுநர் ஒருவரைத் தீவிரவாதிகள் சுட்டுக்கொன்றனர்.

மொசூல் நகர ஆளுநர் ஒசாமா கசூமுல் பக்தாத்தின் தெற்குப் பகுதியில் காரில் சென்று கொண்டிருந்தார். அப்போது சதாம் ஆதரவு தீவிரவாதிகள் அந்தக் காரைநோக்கி சரமாரியாகக் குண்டுவீசித் தாக்குதல் நடத்தினார்கள்.

இதில் கவர்னர் ஒசாமா கசூமுல் மற்றும் அவரது பாதுகாவலர்கள் இருவரும் பலியானார்கள். இதையடுத்து தீவிரவாதிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே நீண்ட நேரம் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது. இதில் ஆளுநரைக் கொன்ற 4 தீவிரவாதிகளும் சுட்டுக்கொல்லப்பட்டனர்.



எதிர்வரும் நவம்பர் மாதம் 4ஆம் திகதி அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. தற்போது அதிபராக உள்ள ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷும் அமெரிக்க ஜனநாயகக் கட்சியின் சார்பில் ஜோன் கெரி என்பவரும் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றனர். இருவரும் தமது தேர்தல் பிரசாரங்களை இப்பொழுது மும்முரமாக மேற்கொண்டுவருகின்றனர். அமெரிக்காவின் பெரும்பாலான மாகாணங்களில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோன் கெரிக்கு மக்கள் ஆதரவு அதிகரித்துவருகிறது. அதனை முறியடிக்க அதிபர் புஷ்ஷும் தனது பிரசாரத்தை ஆரம்பித்துவிட்டார் நேற்றுமுன்தினம் அவர் தனது மகள் பார்பராவுடன் வெள்ளை மாளிகையிலிருந்து தேர்தல் பிரசாரத்துக்காக புறப்பட்டுச் செல்லும் காட்சி இது.

## இந்தியாவில் சுட்டுக்கொல்லப்பட்ட மாணவிக்கு தீவிரவாதிகள் தியாகிப் பட்டம் சூட்டிப் புகழாரம்

குஜராத் மாநிலம் அஹமதாபாத் நகரில் கடந்த மாதம் மாணவி இஸ்ரத் உட்பட 4 தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இவர்கள் குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடியை கொலை செய்யும் சதித் திட்டத்துடன் ஊடுருவியபோது பொலீஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மாணவி இஸ்ரத் அப்பாவி என்றும் பொலீஸார் தவறுதலாக அவரை சுட்டுக்கொன்றுவிட்டனர் என்றும் அப்போது குற்றஞ்சாட்டப்பட்டது.

குஜராத் மற்றும் மும்பை பொலீஸார் பல்வேறு ஆதாரங்களை திரட்டியும் சுட்டுக்கொல்லப்பட்ட இடத்தில் சிக்கிய தடயங்கள் மூலமும் இஸ்ரத் பெண் தீவிரவாதி என்பதை நிரூபித்தனர்.

இதற்கிடையே, சுட்டுக்கொல்லப்பட்ட மாணவி இஸ்ரத்துக்கு பாகிஸ்தானின் லஸ்கர் - இ - தொய்பா தீவிரவாத இயக்கம் தியாகிப் பட்டம் சூட்டிக் கௌரவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தத் தீவிரவாத இயக்கம் வெளியிட்ட தகவல் பாகிஸ்தான் பத்திரிகைகளிலும், தீவிரவாதிகள் இரகசியமாக நடத்தும் இன்டர்நெட்டிலும் வெளியாகியுள்ளது.



அதில் மேலும் கூறியிருப்பதாவது:-

இஸ்ரத் ஜஹான் லஸ்கர் - இ - தொய்பா இயக்கத்தைச் சேர்ந்த பெண் தீவிரவாதி, அவருடன் கொல்லப்பட்ட 3 பேரும் தீவிரவாதிகள்தான். இஸ்ரத் தனது கணவருடன் காரில் முன் இருக்கையில் அமர்ந்து இருந்தார்.

லஸ்கர் - இ - தொய்பா இயக்கம் 2002 இல் அமெரிக்காவால் தடை செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஜமாத் உல் தாவா என்ற பெயரில் செயல்பட்டு வந்தனர்.

சுட்டுக்கொல்லப்பட்ட மாணவி இஸ்ரத் எங்கள் தியாகி அவருக்கு வீர அஞ்சலி செலுத்துகிறோம் - என்றுள்ளது. (8)

## பெர்னாண்டஸிடம் நிர்வாணச் சோதனை; மன்னிப்புக் கோரினார் ரிச்சர்ட் ஆர்மிடேஜ்

புதுடில்லி,ஜூலை16

• முன்னாள் இந்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் கடந்த ஆண்டும் அதற்கு முன்னரும் அமெரிக்காவுக்குச் சென்றபோது நியூயோர்க் விமான நிலையத்தில் அமைச்சர் என்றும் பாராமல் அவரது கோட், காலில் அணிந்திருந்த காலணி, காலுறை ஆகியவற்றைக் கழற்றி சோதனை நடத்தினார்கள் விமான நிலையப் பாதுகாப்புத்துறை அதிகாரிகள்.

அதைக் கேட்டு நான் அதிர்ச்சியடைந்தேன் என்று கூறிய அமெரிக்க வெளியுறவுத்துறை துணை அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் அது தொடர்பாக ஜோர்ஜ் பெர்னாண்டஸிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

இதை அவரே டில்லியில் செய்தியாளர்களிடம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை தெரிவித்தார்.

பாதுகாப்புத் துறை அமைச்சர் என்ற முறையில் அமெரிக்காவுக்கு பெர்னாண்டஸ் 2002இல் அதிகாரபூர்வப் பயணம் மேற்கொண்டார். மற்றொரு முறை பிரேஸில் நாட்டுக்குச் செல்லும் போது நியூயோர்க் வழியே சென்றார். அந்த இரு முறையும் நியூயோர்க்கிலுள்ள அதிகாரிகள் பாதுகாப்புச் சோதனை என்ற பெயரில், அவர் அணிந்திருந்த 'கோட்', ரை, காலணி, காலுறை ஆகியவற்றைக் கழற்றச் சொல்லி சோதனை நடத்தியுள்ளனர்.

- அமெரிக்க முன்னாள் வெளியுறவுத் துணை அமைச்சர் ஸ்டிரோப் தால்பாட் எழுதி வெளியாகியுள்ள புத்தகத்தில் இது பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.



அதுகுறித்து பெர்னாண்டஸிடம் கேட்டபோது, சோதனை நடத்தப்பட்டது உண்மைதான என்று தெரிவித்துள்ளார். தான் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் என்று பெர்னாண்டஸ் கூறியபிறகும் அச்சோதனை நடத்தப்பட்டுள்ளது. அதனால், இனி நான் அமெரிக்காவுக்கு செல்லவே மாட்டேன் என்று அவர் கூறியுள்ளார்.

தற்போது டில்லி வந்துள்ள இப்போதைய அமெரிக்க வெளியுறவுத்துறை துணை அமைச்சரிடம் இதுபற்றி செய்தியாளர்கள் கேட்டனர்.

அதற்கு அவர் அளித்த பதில்:-

அது பற்றிக் கேள்விப்பட்டு நான் அதிர்ச்சி அடைந்தேன். பெர்னாண்டஸிடம் நான் தொலைபேசியில் பேசினேன். அச்சம்பவத்துக்காக தனிப்பட்ட முறையில் அவரிடம் மன்னிப்புக் கேட்டேன் - என்றார் அவர்.

## தடுப்புச் சுவர் இடிப்புக்கு இஸ்ரேலை இணங்கவைக்க ஐ.நா.தீர்மானம்?

பலஸ்தீனத்தின் மேற்குக்கரையில் இஸ்ரேல் கட்டியுள்ள தடுப்புச் சுவரை இடிக்க இஸ்ரேலை இணங்கவைக்க ஐ.நா. சபை தீர்மானம் இயற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பலஸ்தீனத்தின் மேற்குக்கரையில் கட்டியுள்ள சுவரை இடிக்கவேண்டும் என்று சர்வதேச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஆனால், அதை இடிக்க முடியாது என்று இஸ்ரேல் மறுத்துவிட்டது. எனவே, இஸ்ரேலை நிர்ப்பந்திக்கும் பொருட்டு ஐ.நா.சபை தீர்மானம் இயற்றும் என்று தெரிகிறது.

191 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட இச்சபையில் உள்ள அரபு நாடுகள் அனைத்தும் இத்தீர்மானத்தை வரவேற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேசமயம் கவுன்ஸிலின் தீர்மானம் மூலம் இஸ்ரேலைக் கட்டுப்படுத்த முடியாது. இஸ்ரேலைக் கட்டுப்படுத்தப் பாதுகாப்புக் கவுன்சிலில் தீர்மானம் நிறைவேற்றவேண்டும். அதிலும் இஸ்ரேலின் கூட்டாளியான அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தின் மூலம் தீர்மானத்தை ரத்துச் செய்யலாம். (8)

## உலக அரங்கில்

### ஈராக்கிலிருந்து பிலிப்பைன்ஸ் படைகள் வாபஸாகின்றன

ஈராக்கில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பிலிப்பைன்ஸ் படையினர் கடந்த புதன் கிழமைமுதல் நாடு திரும்புகின்றனர்.

படைகளை வாபஸ் பெறாவிடில் பணயக் கைதியாகப் பிடித்து வைத்துள்ள பிலிப்பைன்ஸ் நாட்டு லொறிச் சாரதியைக் கொலை செய்யப் போவதாக ஈராக்கில் உள்ள இஸ்லாமியத் தீவிரவாதிகள் மிரட்டியிருந்தனர். இதையடுத்து தீவிர ஆலோசனைக்குப் பிறகு தனது படையினரை வாபஸ்பெற பிலிப்பைன்ஸ் முடிவு செய்தது.

முதற் கட்டமாக 51 வீரர்களில் 8 பேர் கடந்த புதன்கிழமை ஈராக்கை விட்டு வெளியேறினர். தற்போது அங்கு 43 பேர் மட்டுமே உள்ளதாகவும், அவர்களும் படிப்படியாக திரும்ப அழைத்துக் கொள்ளப்படுவர் என்றும் பிலிப்பைன்ஸ் வெளியுறவுத் துறைச் செயலர் டெலீயா ஆல்பர்ட் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## வேலை ஏற்றுமதி முறையை ஏற்றுக்கொண்டார் அமெரிக்க ஜனநாயகக் கட்சி வேட்பாளர்

அமெரிக்க நிறுவனங்கள் தமது பணிகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி, குறிப்பாக இந்தியாவுக்கு அனுப்பிசெய்து முடித்துக்கொள்ளும் வேலை ஏற்றுமதி முறையை அமெரிக்க ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோன் கெரி ஏற்றுக்கொண்டுவிட்டார்.

ஜனநாயகக் கட்சி சார்பில் அமெரிக்க அதிபர் பதவிக்குப் போட்டியிடவுள்ள கெரி, ஏற்கனவே அதைக் கடுமையாக எதிர்த்துவந்தார். அவ்வாறு வேலைகளை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்பவர்கள் துரோகிகள் என்று வர்ணித்துவந்தார்.

ஆனால், இப்போது அதுதான் யதார்த்தம் என்பதைப் புரிந்துகொண்டதால், அதை ஏற்றுக் கொண்டுவிட்டார் என்று அவரது கட்சியைச் சேர்ந்தவரும் நியூ மெக்ஸிக்கோ மாகாண ஆளுநருமான பில் ரிச்சர்ட்சன் கூறினார்.

இந்தியாவுடன் எப்பொழுதும் நல்லுறவைப் பேணுவதற்கு ஜனநாயகக் கட்சி ஆர்வமாக இருந்துவந்துள்ளது. இந்தியாவுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்தியவர், ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த அதிபரான பில் கிளின்ரன். அதிபர் பதவிக்குப் போட்டியிடவுள்ள ஜோன் கெரி ஒரு சர்வதேசவாதி; சர்வதேச சுதந்திர வர்த்தகத்தை ஆதரிப்பவர். அவர் அமெரிக்க அதிபராவதை இந்தியா ஆதரிக்கவேண்டும் என்றார் பில் ரிச்சர்ட்சன். (8)

# பழமரச் செய்கையை ஊக்குவிக்க பொருண்மிய நிறுவனம் நடவடிக்கை

வலி.தெற்கு,ஜூலை16

யாழ்.மாவட்டத்தில் பழமரத் தோட்டச் செய்கையை ஊக்குவிப்பதற்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன்கீழ் ஒவ்வொரு கமநல சேவை நிலையங்களிலும் பழமரத்தோட்டச் செய்கையினை நன்கு ஆர்வமுடனும் தொழில்நுட்ப அறிவுடனும் செய்கைபண்ணக் கூடிய விவசாயிகளைச் தெரிவுசெய்து அவர்களுக்கு வேண்டிய பழமரக் கன்றுகளை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கமநலசேவை நிலையங்களை பழமரத்தோட்டச் செய்கையில் ஈடுபடக்கூடிய விவசாயிகளை இனம்கண்டு அறிவிக்குமாறு கேட்டுள்ளது.

பழமரத் தோட்டச் செய்கையில் ஆர்வமுள்ள விவசாயிகள், அவர்களிடம் பழமரச் செய்கைக்கு பயன்படுத்தப்படக் கூடியதாக உள்ள நிலம் அன்னாசி, பாஷன்புருட், மா, பப்பாசி போன்ற மரங்கள் ஓர் ஏக்கருக்கு மேல் பயிரிடக் கூடிய வசதிகள் உள்ளனவா? என்பன போன்றவற்றை நேரில் சென்று கண்டறிந்து விவரம் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இது ஒரு பரீட்சார்த்த செய்கை முறை என்பதால் தேர்வு செய்யப்படும் விவசாயிகள் தோட்டச் செய்கையில் ஆர்வமுடையவர்களாகவும் நீர்ப்பாசன வசதிகளைப் பெறக்கூடியவர்களாகவும் இருக்கவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

தேர்வுசெய்யும் விவசாயிகளின் பெயர், முகவரி, காணியின் அளவு, தேவையான பழமரங்கள் போன்ற விவரங்களை அறிவிக்குமாறு கண்டிப்பாக செயற்கை உரம், கிருமி நாசினி என்பவற்றை இவற்றுக்குப் பயன்படுத்த அனுமதிக்கக்கூடாது எனவும் பொருண்மிய நிறுவனம் அறிவித்துள்ளது. (ஒ-152)


## சாரதி தேவை

எமது நிறுவனத்துக்கு சகல வாகனமும் செலுத்தக்கூடிய சாரதி உடன் தேவை. முன் அனுபவம் உள்ளவர்கள் சாரதி அனுமதிப் பத்திரத்துடன் உடன் தொடர்புகொள்ளவும்.

**THAMPI AIR TOURS (Pvt), Ltd.**
90,கந்தப்பசேகரம் வீதி.
யாழ்.
T.P. 222 2040, 2504 (34162)(40)



## வீட்டுடன் காணி விற்பனைக்கு

இல.7, சிவப்பிரகாசம் வீதி. ஐயனார் கோயிலடியில் 3 1/4 பரப்புக் காணியில் மூன்று அறை, மண்டபத்துடன் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு. நேரில் வரவும்.

**கோல்டன் ஈகிள் பாதுகாப்பு சேவை**
இல. 43, கல்லூரி வீதி.
யாழ்ப்பாணம். T.P. 222 5102
(யாழ். இந்துக் கல்லூரி மைதானத்துக்கு அண்மையில்)
(C/36012)(22-32-12-16)



## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்
அமரர் சு.ஸ்ரீராமலிங்கம்
அவர்களின் திடீர் மறைவினால் நாம் ஆறாத் துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்,
திருநெல்வேலி. (34163) (43-16-12-32)



## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு ஆசிகள் வழங்கிய முன்னாள் மானிப்பாய் பங்குத்தந்தையும், யா/இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி முன்னாள் அதிபரும், யாழ். மறை மாவட்டத்தைச் சேர்ந்தவருமான

**அன்ரன் இராஜநாயகம் அடிகள்**

அமரத்துவமடைந்த செய்தி அறிந்து ஆறாத்துயரடைகின்றோம். அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

யா/மானிப்பாய் மெமோறியல்
கல்லூரிக் குடும்பம்.
மானிப்பாய். (34161) (43-16-12-32)



## கண்ணீர் அஞ்சலி

இ.மி.சபையில் மின் அத்தியட்சகராக கடமையாற்றி ஓய்வுபெற்ற
அமரர் வேலுப்பிள்ளை மார்க்கண்டேயப்பிள்ளை
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
மின் அத்தியட்சகரும், ஊழியர்களும்,
இ.மி.சபை சுன்னாகப் பணிமனை.
(34160) (43-16-12-32)



## கண்ணீர் அஞ்சலி

சாளம்பை, புலோலி மேற்கு, பருத்தித்துறையை வசிப்பிடமாகக் கொண்ட
**அமரர் வேலுப்பிள்ளை மார்க்கண்டேயப்பிள்ளை**
அவர்களின் மறைவையிட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னார் யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் பணிப்பாளராகவும் கூட்டுறவாளராகவும் இருந்து கூட்டுறவுத்துறைக்கு ஆற்றிய பணிகளை நன்றியுடன் நினைவுகூரும் இவ்வேளையில் அவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அமரரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போமாக!
ஓம் சாந்தி!

கூட்டுறவாளர், வீரசிங்கம்
மண்டப கட்டடத் தொகுதி, தலைவர், பணிப்பாளர்
2ஆம் மாடி, யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை
இல.12, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (C/36009)(22-16-12-32)



## மரண அறிவித்தல்

### நல்லதம்பி கந்தசாமி



இணுவில் கிழக்கு, மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி கந்தசாமி அவர்கள் நேற்று (15.07.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி-மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற துரை மற்றும் இரத்தினம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் அருந்தவமலரின் அன்புக் கணவரும் சசிகரன் (லண்டன்), சசிகலா (B.A, யாழ். பல்கலைக்கழகம்), காந்தரூபி (வெளிவாரிப்பட்டதாரி, யாழ்ப்பாணம்), வாசுகி, புஸ்பமலர், உதயராசா (மாணவன் T.T.I-கட்டுநாயக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும் நடராசா, பரமேஸ்வரி, இரத்தினம்மா, மனோன்மணி, காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் இராஜேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் செல்வநாயகம், இராசநாயகம், மகேந்திரராஜா, வசந்தகுமாரி, யோகராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15.07.2004) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சகோதரன்
ந.இராஜேஸ்வரன் (சின்னத்தம்பி)

மஞ்சத்தடி,
இணுவில். (34165) (43-12-16-32)


## வீதிவிளக்குகள் பொருத்த நடவடிக்கை

வளலாய்,ஜூலை16

வலி.கிழக்குப் பிரதேச சபையின் அச்சுவேலி உப அலுவலகத்திற்குட்பட்ட பிரதேசங்களில் உள்ள வீதிகளுக்கு 'நிக்கொட்' நிறுவனம் வீதி விளக்குகள் அமைக்க உதவ முன்வந்துள்ளது.

இப்பகுதியில் இரவு வேளைகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதையடுத்து பொதுமக்கள் பிரதேச சபையிடம் வீதி விளக்குகளை அமைக்குமாறு கோரிவந்தனர். இதனையடுத்து பிரதேச சபை உப அலுவலகம் எடுத்த முயற்சியின் பயனாக இலவசமாக வீதி விளக்குகளை அமைத்துக் கொடுக்க 'நிக்கொட்' நிறுவனம் முன்வந்து அதுதொடர்பான விவரங்களை உடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுள்ளது. (ஒ-178)

## இடமாற்றம்

அச்சுவேலிப் பகுதிக்கான பொதுச்சுகாதாரப் பரிசோதகராக எஸ்.தயாபரன் நியமிக்கப்பட்டுள்ளார். காரைநகர் பகுதியில் கடமையாற்றிய இவர் அச்சுவேலி சுகாதாரப் பரிசோதகர் வே.இராசேந்திரா உரும்பிராய்ப் பகுதிக்கு இடமாற்றப்பட்டதை அடுத்து அச்சுவேலிப் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (ஒ-11)

## அச்சுவேலி பஸ்நிலையத்தில் மலசல கூடம் அமைக்கக் கோரிக்கை

வளலாய்,ஜூலை16

அச்சுவேலி பஸ் நிலையப் பகுதியில் மலசல கூட வசதியின்றி பயணிகள் சிரமத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளனர்.

இப்பகுதியில் முன்னர் இருந்த மலசல கூடம் யுத்த நடவடிக்கைகளின்போது முற்றாக தகர்ந்து போய்விட்டது.

தற்போது பயணிகளின் எண்ணிக்கையும் வாகனங்களின் தொகையும் அச்சுவேலி பஸ் நிலையத்தில் அதிகரித்துள்ளன. இந்நிலையில் இங்கு மலசலகூடம் இல்லாமை பெரும் குறையாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஒ-178)

## பயனாளிகள் தெரிவு

உலகவங்கியின் உதவித் திட்டத்தின்கீழ் கொழும்புத்துறைப் பகுதியில் அமைக்கப்படவுள்ள சுயஉதவி வீட்டுத் திட்டத்திற்கு 132 பயனாளிகள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

பரீட்சார்த்தமாக அமைக்கப்படும் வீடுகளைப் பெறவுள்ள 25 பயனாளிகளின் பெயர்கள் ஜே/62 கிராம அலுவலரினால் வெளியிடப்பட்டுள்ளன.

சுமார் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படும் இந்தவீடுகள் 3 மாத காலத்திற்குள் கட்டிமுடிக்கப்படவுள்ளதாகச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் பரீட்சார்த்த வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டதும் கட்டம் கட்டமாக தெரிவு செய்யப்பட்ட ஏனையோருக்கும் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-30))


## தமிழ்நாடு, கர்நாடக ஆந்திரா திருத்தலயாத்திரை

**தரிசிக்கும் ஸ்தலங்களும் சுற்றுலா இடங்களும்:**
புட்டபத்தி பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா தரிசனம் திருப்பதி, சென்னை, பெங்களூர், பெங்களூர் மகாராஜா மாளிகை, மைசூர் பிருந்தாபனம், மகாவலிபுரம், மெரினாபீச், காஞ்சிபுரம் வரதராஜப்பெருமாள், சிதம்பரம் நடராஜர், தில்லைக் காளி அம்மன், திருவாரூர், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பூம்புகார், குற்றாலம், நாமக்கல் ஆஞ்சநேயர், தஞ்சாவூர் தஞ்சைப் பெருங்கோயில், திருச்சி உச்சிப்பிள்ளையார், ஸ்ரீரங்கம், பழனி, மதுரை மீனாட்சி ஆலயம், மதுரை சுந்தரேஸ்வரர் ஆலயம், திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், வள்ளிகுகை, நவக்கிரக கோயில்கள், திருத்தணிகை, பழமுதிர்ச்சோலை, சுவாமிமலை, இராமேஸ்வரம், கன்னியாகுமாரி, திருவேணி சங்கமம், குமாரியம்மன் ஆலயம், காந்திமண்டபம், சுவாமி விவேகானந்தர் நினைவாலயம் , திருவள்ளுவர்சிலை கடலில் யந்திரப்படகு மூலம் சென்று பார்த்தல், திருஅரங்கநாத சுவாமி, திருவரங்கம், திருவனைக்காவல் சிவன் கோயில் சமயபுர மாரியம்மன்.

யாத்திரியர்களுக்கு சௌகரியமான விடுதிகளில் தங்குமிட வசதியும் முற்றிலும் குளிரூட்டப்பட்ட சொகுசு வாகனங்களில் வழிகாட்டி துணையுடன் பிரயாணமும் உயர்தர சைவ உணவுகளும் வழங்கப்படும்.

இத்திருத்தல யாத்திரை ஓகஸ்ட் 09 ஆம் திகதி ஆரம்பமாகும். யாத்திரியர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டிருப்பதால் ஜூலை மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

நியாயமான கட்டணம்

**15 பகல், 14 இரவு**

**Metro Travels & Tours (Pvt) Ltd.**
No.403 1/2 Galle Road, Wellawatta Col.06
Tel:2362766, 2361937, 2361672 Fax:2361888
(இலங்கை உல்லாச பிரயாண சபையின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்)
(சி-36010)(16-12-32)



## ஸ்கிறீன் பிறின்ரிங்

**SCREEN PRINTING**

- திருமண அழைப்பிதழ்
- விசிற்றிங் காட்
- ரீ-சேட்கள்
- CD க்கள்
- துணிவகைகள்
- உலோகத் தகடுகள்
- பொலித்தீன் பைகள்
- பிளாஸ்ரிக் பொருள்கள்

ஆகியனவற்றில் ஸ்கிறீன் பிறின்ரிங் வேலைகள் துல்லியமாகவும் குறித்த நேரத்திலும் செய்து கொடுக்கப்படும்.

**அருண் பிறின்டேர்ஸ்**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(உதயன் பணிமனை வளாகத்துக்கு அருகில்)

# சபாநாயகரைப் பதவி விலக்க இ.தொ.கா. துணை போகாது!

## அதன் பிரதித் தலைவர் செல்லச்சாமி எம்.பி. உறுதி

கொழும்பு,ஜூலை16

ஜனநாயகமுறைப்படி தெரிவுசெய்யப்பட்ட சபாநாயகரை, பதவியில் இருந்து தூக்கி எறிவதற்கு இ.தொ.கா. ஒருபோதும் துணை போகாது என அடித்துக் கூறுகின்றார் இதொ.கா வின் பிரதித் தலைவர் எம்எஸ்செல்லச்சாமி எம்.பி.

சபாநாயகர் உடனடியாகத் தமது பதவியை இராஜினாமாச் செய்யவேண்டும, இல்லாவிட்டால் தூக்கி எறிவோம் என்று மாகாணசபைத் தேர்தல முடிந்தவுடன் ஜே.வி.பியினர் சவால் விட்டுள் ளனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இ.தொ.கா. அரசுடன் இணைந்துகொள்ளப்போவதாகவும் அது குறித்துப பிரதமருடன் பேசி இறுதித்தீர்வு எடுக்கப்பட்டி ருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. இது உண்மையா? - எனக் கேட்டபோதே செல்லச் சாமி மேற்கண்டவாறு கூறினார்.

இத்தகைய செய்திகளில் எந்த உண்மையும் இல்லை. ஆடி முடிந்தவுடன் - அமாவாசை முடிந்தவுடன் - அரசுடன் சேர்ந்துகொள்வோம் என்றெல்லாம் கூறுவதில் எந்தவித உண்மையு மில்லை.

மாகாணசபைத் தேர்தலுக்கு முன்பிருந்தே அரசு நச்சரித்துக் கொண்டிருக்கின்றது. இப்போதும அடிக்கடி கேட்கின்றனர். ஆனால், நாம் அப்படி ஒரு முடிவும் எடுக்கவில்லை.

சபாநாயகரைத் தூக்கி எறிவது இலேசான காரியம் அல்ல. சபாநாயகர் பதவிக்கு ஒருவர் தெரிவுசெய்யப்பட்டால் அவர் எந்தக் கட்சிக்கும் சொந்தமானவர் அல்லர்.

நாடாளுமன்றத்தின் கௌரவத்தையும் ஜனநா யகத்தையும் பாதுகாக்கும் முக்கிய பொறுப்பு சபாநாயகரிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே, இவ்வளவு பொறுப்புவாய்ந்த ஒருவரை நினைத்த மாத்திரத்தில் தூக்கி எறிந்து விட முடியாது.

அவருக்கு எதிராக ஆதாரபூர்வமான குற்றச் சாட்டுக்களைச் சமர்ப்பிக்கவேண்டும். அவை உறுதிப்படுத்தப்படவேண்டும். அதன்பின் முறைப் படி நாடாளுமன்றத்தில் அவருக்கு எதிராகக் குற்றப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்து நிறை வேற்றுவதன் மூலமே அவரைப பதவியிலிருந்து நீக்கமுடியும்.

ஆனால், ஜே.வி.பியினர் கூறுவது போல் மாகாண சபையில் தோல்வி கண்டதால் சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டாரவை அப் பதவியிலிருந்து தூக்கிவிடமுடியாது. அத்தகைய முயற்சிகளுக்கு நாம் ஆதரவளிக்கவும் மாட் டோம் - எனச் செல்லசாமி எம்.பி.மேலும் கூறி னார். (க)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் கட்சிப் பிரமுகர் படுகாயம்!

வலி.தென்மேற்கு,ஜூலை16

மானிப்பாய் - உடுவில் பிரதான வீதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் புத்தூரைச் சேர்ந்தவரும் புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளருமான சி.கா.செந்தில்வேல் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-135)

## நீதிமன்ற அமய ஊழியரை நிரந்தரமாக்க நடவடிக்கை

தென்மராட்சி,ஜூலை16

நதிமன்றங்களில் இரண்டு வருடங்களுக்கும் மேலாக அமய பதவிகளில் கடமையாற்றும் எழுதுநர்கள், சுருக்கெழுத்தாளர்கள், தட்டெழுத் தாளர்கள் ஆகியோரை நிரந்தர சேவையில் இணைக்க நீதிச்சேவை ஆணைக்குழு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

இப்பதவிகளில் இரண்டு வருட சேவையைப பூர்த்திசெய்த அப்பதவிகளுக்குத் தகைமையுடை யவர்களின் விண்ணப்பத்தினை சிபாரிசு செய்து எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன் அனுப்பு மாறு சகல நீதிமன்றங்களுக்கும் அறிவிக்கப்பட் டுள்ளது.

(ஓ-117)

**ஆசிரியர் போட்டிப் பரீட்சை**

தவசேகர் ஆசிரியரின் பயிற்சி நூல் தவிர்க்க முடியாத காரணத்தினால் சனிக் கிழமைமுதல் கிடைக்கும்.

D.M.I, Science Hall ஆகிய இடங்களில் வகுப்புகள் நடைபெறுகின்றன.

(34171)(36-13-14)

# சண்டிலிப்பாய் பாடசாலைகளில் சிறுவர் முற்றம் இல்லை என அதிருப்தி

யாழ்ப்பாணம்,ஜூலை16

சண்டிலிப்பாய் கோட்டத்திற்குட்பட்ட பாட சாலைகளில் பெரும்பாலான பாடசாலைகளுக்கு சிறுவர் முற்றம் அமைத்துக் கொடுக்கப்பட வில்லையெனப் பாடசாலை அதிபர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

புதிய கல்விக்கொள்கையின் அடிப்படையில் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டின் ஒரு பகுதி விளையாட்டின் மூலமே பூர்த்திசெய்யப்படு கின்றது.

இந்நிலையில், சண்டிலிப்பாய் கோட்டத்திற் குட்பட்ட 41 பாடசாலைகளில் 18 பாடசாலை களே சிறுவர் முற்றத்தினைக் கொண்டுள்ளது. இந்நிலைகுறித்து சண்டிலிப்பாய் கோட்டத் திற்கு உட்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணியசர்மா ஊடாக யுனிசெப், அகதிகளுக்கான ஐநா.தூதரகம், ஐநா.உதவித் திட்டம் ஆகிய நிறுவனங்களுக்கு விண்ணப்பித் துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(ஓ-185)

**நிர்மலா சினிமாஸ்** சங்கானை

அர்ஜுன், ரஞ்சிதா நடித்த

**ஜெய் ஹிந்** தினசரி: 11.00, 2.45, 6.00 (பு.நே)

வெள்ளி, சனி, ஞாயிறு THE GURU இரவு 8.45(ற)

(ரீகல்) (C-36291)(36)

**ராஜா** யாழ்ப்பாணம்

சரத்குமார், சாக்ஷி, விஜயகுமார் நடித்த



**மானஸ்தன்**

(ரீஸ்ஸ்)

புதியநேரம்: 10.30,2.30,6.30,9.30

**நாகம்ஸ்** சுன்னாகம்

அர்ஜுன், அபிராமி, பிரகாஸ்ராஜ் நடித்த

**வானவில்**

காட்சிகள்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)

(C/35739) (36)

## விபத்தில் இறந்தவரின் சடலத்துடன்

# பொலீஸ் முன் ஆர்ப்பாட்டம் செய்தோர் விரட்டியடிப்பு

வாகன விபத்தில் சிக்கிப் பலியான இளை ஞனின் சடலத்தை பொலீஸ் நிலையத்துக்கு முன்பாக வைத்து, பொதுமக்கள் செய்த ஆர்ப் பாட்டத்தின் போது, பொலீஸார் மேற்கொண்ட தாக்குதலில் எட்டுப் பொதுமக்கள் காயமடைந் தனர்; 46 பேர் கைது செய்யப்பட்டனர். காலி, கொஸ்கொட பகுதியில் இச்சம்பவம் இடம் பெற்றது.

கடந்த 10 ஆம் திகதி அம்பலாங்கொட வுக்கு அருகில் கொஸ்கொடப் பகுதியில் வாகன விபத்தொன்றில் சிக்கிக் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த பிரசாத் சஞ்சீவ் டி சில்வா (வயது-27) என்ற இளைஞர் மரணமடைந்தார். இந்த விபத்துக்கு பொலீ ஸாரின் கவனயீனமே காரணம் எனத் தெரிவித்து ஆத்திரமுற்ற மக்கள் கூட்டம் நேற்றுமுன்தினம் கொஸ்கொட பொலீஸ் நிலையத்துக்கு முன் னால் இறந்தவரின் சடலத்தை வைத்துக் கொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது. இதன் போது அங்கு மோதல் நிலை உருவானது.

பின்னர் கலகம் அடக்கும் பொலீஸார் அந்த இடத்துக்கு வரவழைக்கப்பட்டனர். ஆர்ப்பாட்டம் செய்தவர் களை அவர்கள் அங் கிருந்து விரட்டிய டித்தனர். இதன்போது எட்டுப் பொதுமக்கள் காயமடைந்தனர்; 46 பேர் கைது செய்யப் பட்டனர். அவர்களில் 40 பேர் விளக்கமறி யலில் வைக்கப் பட்டுள் ளனர் எனத் தெரிவிக் கப்பட்டது. (க)

**காணவில்லை**

மா வெள்ளை நிறமுடைய பசு மாடு கடந்த 14.07.2004 முதல் காணவில்லை. கழுத்தில் கயிறு வளையம் உள்ளது. இதனைக் கண்டவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

லீ.பொன்றோஸ்

8A, மத்தியூஸ் வீதி,

யாழ்ப்பாணம்.

(34161)(36)

## மரண அறிவித்தல்கள்

### செல்வி மரியா மக்டலீன் சின்னப்பு (ஞானம்)



கொழும்புத்துறை, வளன்புரத்தைப் பிறப்பிட மாகவும், சில்லாலை தெற்கைத் தற்காலிக வசிப் பிடமாகவும் கொண்ட புனித பத்திரிசியார் கல்லூரியின் இளைப்பாறிய ஆரம்பப் பிரிவு தலைமை ஆசிரியை செல்வி மரியா மக்டலீன் சின்னப்பு (ஞானம்) 15.07.2004 அன்று காலமானார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சில்லாலை தெற்கு,*
*சில்லாலை.*

(34172)(36-13-14)

தகவல்:
தாயார்.

### பறுநாந்து டோமினிக் (பிஸ்கால்)



யாழ்ப்பாணம், இல.16, இராஜேந்திரா வீதியைச சேர்ந்த பறுநாந்து டோமினிக் 11.07.2004 ஞாயிற் றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பறுநாந்து - அன்னம் மாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற அநதோனிப் பிள்ளை - பாக்கியம் ஆகியோரின் அன்பு மரு மகனும் ஆன்றோஸ் அவர்களின் அன்புக் கணவரும் டொனால்ட் (பிரான்ஸ்), குயின்ரன் றெஜினோல்ட், ராணி (சுவிஸ்), ராஜி (சுவிஸ்), ராதிகா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சகிலா (பிரான்ஸ்), அன்ரன் (சுவிஸ்). சரோஜா, ஈசன் (சுவிஸ்) றஞ்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் டிமோட்,டெறோன், டிசான், றொமானியஸ் றஜீவ், றெமாநோல் விசால, கத்தறின், லவ்றே, ஸ்ரேபான், நிசாந்தினி, கீர்த்திபன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞசென்ற அந்தோனிப்பிள்ளை, காலஞ்சென்ற செபமாலை, புஸ்பம், டோனாஸ ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற அருளம்மா, காலஞ்சென்ற பரிமளம், காலஞ்சென்ற செபமாலை, ராணி, றோக்நாதர், றெஜினா, கீதபொன்கலன் (பிரான்ஸ்), பீற்றர்போல் (ஹொலண்ட்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ( 17.07.2004) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இல.16, இராஜேந்திரா வீதியில் உள்ள அன்னாரது இல்லத்தில் இருந்து நல்லடக்கத்திற்காக யாழ்.மரியன்னை பேராலயத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.16, இராஜேந்திரா வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*(34173)(36-14-13)*

தகவல்:
குயின்ரன்(மகன்).

**வரலாறு காணாத மலிவு விற்பனை**

*கொழும்பு ஜெயா புக் சென்ரரின் அனுசரணையுடன் யாழ். பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினால் பல்கலைக்கழகத்தில் இரண்டாவது தடவையாக வரலாறு காணாத மலிவு விற்பனை நடைபெறவுள்ளது.*

நாள்: 2004 ஜூலை 19 முதல் 29 வரை

நேரம்: தினமும் 9.00 மணிமுதல் 6.00 மணிவரை (புதிய நேரம்)

இடம்: யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம்

- சகலருக்கும் இலங்கை நூல்களுக்கு 10% கழிவு வழங்கப்படும்.
- பிறநாட்டு வெளியீடுகளுக்கு 15% கழிவு வழங்கப்படும்.
- மொத்தமாகக் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் இலங்கை வெளியீடுகள் தவிர பிறநாட்டு வெளியீடுகளை (ஒவ்வொன்றிலும் ஆகக் குறைந்தது 10 பிரதிகள்) கொள்வனவு செய்வோருக்கு விஷேட கழிவாக **20%** வழங்கப்படும்.

பாடசாலைகள், பல்கலைக்கழகம், தொழில்நுட்பக்கல்லூரிகள், கல்வியியற்கல்லூரி, பொதுநிறுவனங்கள், பிரதேசசபை நூலகங்கள், தனியார் கல்விநிறுவனங்கள் ஆகிய நிறுவனங்களிற்கு கடன் அடிப்படையில் புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்குரிய ஒழுங்குகள் செய்து தரப்படும்.

*தொடர்புகளிற்கு: வணிக் மாணவர் மன்றம், யாழ்.பல்கலைக்கழகம்.*

(C/36016)(43-13-14-36)

## துயர்பகிர்கின்றோம்

எமது கழகத்தின் ஆரம்பகால உறுப்பினரான **Rtr.க.காந்தரூபி** அவர்களின் அன்புத் தந்தை

**நல்லதம்பி கந்தசாமி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரி னது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவிப்பதோடு, ஆத்மா சாந்தியடைய இறை வனைப் பிரார்த்திக்கின்றோம்.

மானிப்பாய் றோட்டறக்ட் கழகம்.

(34168)(40-13-36-14)

## கண்ணீர் அஞ்சலி



எமது அன்புக்கும், மதிப்பிற்கும் உரிய யாழ். பேராலய முன்னாள் பங்குத்தந்தையும் எமது இயக்குநருமாகிய

அமரர் அருட்திரு.

அன்ரன் T.இராஜநாயகம்

அடிகளாருக்கு எமது இதய அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

இவரின் ஆன்மா இறைவனில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*யாழ்.பேராலயம்.*

- இளைஞர் உருவாக்கல் இயக்கம்.

(34170)(36-13-14)

## காணவில்லை



உடுவில், சுன்னாகத்தைச் சேர்ந்த யோகலிங்கம் கலியுகன் என்பவரை (வயது 10, உயரம் 3 அடி) 26.06.2004 முதல் காணவில்லை. தயவுசெய்து இவ ரைப்பற்றிய தகவல் தெரிந்தவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

*சன்மானம் வழங்கப்படும்.*

தொடர்பு:- தெ.கருணா
C/O ஐ.யோகலிங்கம்
D.R.O. லேன்,
உடுவில், சுன்னாகம்.
T.P. 0777 155 202

(34167)(36-13-14)

# கருணாவின் சகாக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிகிச்சைப்பிரிவில் சிகிச்சைக்கு உட்படுத்தப் பட்டிருக்கின்றார்.

மேற்படி சச்சு மாஸ்டர் விடுதலைப் புலிகள அமைப்பில் முன்னர் இருந்தவர். கஞ்சிகுடிச் சாறு காட்டுப்பகுதியிலிருந்து புலிகளின் முகாம் களுக்கு விநியோகம் வழங்கவென அவரிடம் பொறுப்புக் கொடுக்கப்பட்ட நிதியை சூறையாடி னார் என்ற குற்றச்சாட்டின் பேரில் 2002ஆம் ஆண்டு புலிகளின் அம்பாறை மாவட்ட இராணு வப் பிரிவிலிருந்து, அமைப்பினால் அவர் வெளி யேற்றப்பட்டார்.

ஆனால், கடந்த மார்ச்சில் புலிகள் அமைப்பி லிருந்து வெளியேறித் தனித்து இயங்குவதற்கு கருணா முடிவு செய்ததும் அவரை மீள அழைத் தார். அம்பாறை மாவட்டத்துக்கான தனது தள பதியாகவும் சச்சு மாஸ்டரைக் கருணா நிய மித்தார்.

அதே மார்ச் மாதத்தில் காத்தான்குடிப் பகுதி யில் வான் ஒன்றில் ஆயுதங்கள் மற்றும் கிரனேட் டுடன் சென்று கொண்டிருக்கையில் சச்சு மாஸ்ட ரையும் அவரது ஆள்கள் நால்வரையும் பொலீஸா கைதுசெய்தனர்.

அன்றையதினம், அதற்கு முன்னர் காலையில மட்டக்களப்பு நகரத்தில் வைத்தும் அவரையும் அவரது குழுவினரையும் பொலீஸார் கைது செய்திருந்தனர். என்றாலும், இராணுவப் புலனாய்வுப் பிரிவின் உள்ளூர் அதிகாரி ஒருவரின் தலை யீட்டை அடுத்து அவர்கள் விடுவிக்கப்பட்டிருந் தனர் எனப் பொலீஸ் வட்டாரங்கள் கூறுகின்றன.

ஆனால், பின்னர் அவர்களைக் கைதுசெய்த காத்தான்குடிப் பொலீஸாரோ இவ்வித தலை யீட்டை ஏற்கமறுத்ததுடன், அவர்களை விடுவிப் பதாயின் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் எழுத்து மூலக் கோரிக்கை தேவை என விடாப் பிடியாகக் கூறினராம்.

இது சரிவராமல் போகவே பொலீஸார் அவர் களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். மார்ச் 31ஆம் திகதி அவர்கள் நீதிபதியினால் விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

பயங்கர ஆயுதங்களை வைத்திருந்த குற்றச் சாட்டுக்குப் பிணை அனுமதி இல்லை என்பதால் அவர்கள் தொடர்ந்தும் விளக்க மறியலில் இருந்து வந்தனர்.

அச்சமயத்திலேயே சச்சு மாஸ்டரைக் கரு ணாவின் பேச்சாளராகச் செயற்படுத்துவதற்கு இரா ணுவப் புலனாய்வுப் பிரிவு ஏற்பாடு செய்து கொடுத்தது என்று கூறப்படுகின்றது.

சிறையில் விளக்க மறியலில் இருந்த சச்சு மாஸ்டருக்கு கைத்தொலைபேசி ஒன்றை வழங் கச் செய்து, அதன் மூலம் கருணா ஆதரவான தமிழ் வார இதழ் ஒன்றுக்கும் வானொலி நிலை யம் ஒன்றுக்கும் விடுதலைப் புலி எதிர்ப்புப் பிரசாரப் பேட்டிகளை சச்சு மாஸ்டர் வழங்கு வதற்கு இராணுவப் புலனாய்வுத்துறை ஏற்பாடுக ளைச் செய்து கொடுத்திருந்தது எனப் புலிகள் குற்றம் சுமத்தியிருந்தனர்.

'மாறன்' என்ற பெயரில் கருணா அணிப் பேச் சாளராகத் தம்மை இனங்காட்டி வானொலிப் பேட்டிகள் மற்றும் செய்திகள் கொடுப்பவர் உண்மையிலேயே விளக்கமறியலில் இருந்த இந்த சச்சு மாஸ்டரே என்றும் -

அதை உறுதிப்படுத்துவதற்குத் தங்களிடம் தெளிவான ஆதாரங்கள் இருக்கின்றன என்றும் -

விடுதலைப் புலிகள் முன்னர் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நேற்றைய சம்பவத்தில் சுட்டுக்கொல்லப் பட்ட மற்றையவரான தீபன் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டு மே மாதம் 19 ஆம் திகதிமுதல் விளக்கமறியலில் வைக்கப்பட்டுவந்தார்.

இவர்கள் இருவருடைய மரணங்கள் தொடர் பாக மட்டக்களப்பு நீதிபதி எம்.அஜ்மீர் நேற்று மட்டக்களப்புச் சிறைக்குள் சென்று மரணவிசா ரணை நடத்தினார். மூன்று சக கைதிகளும் ஒரு சிறைச்சாலை அதிகாரி ஒருவரும் வாக்குமூலம் அளித்தனர்.

இருவரது மரணமும் கொலையென நீதிபதி தீர்ப்பளித்தார். (எ-க-9)

## சயனைட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று கூறப்படுகின்றது. எனினும், பொலீஸாரால தடுத்துவைக்கப்பட்டுள்ள மேற்படி இளைஞர் தமது உறவினரைப்பார்க்க வவுனியா பூந்தோட் டத்தில் இருந்து கொழும்பு வந்தவர் எனவும் -

அவரையே மட்டக்குழிப் பகுதி சிங்களவர் கள் பிடித்து பொலீஸாரிடம் ஒப்படைத்தனர் என வும் - அறியப்படுகின்றது. (க)

## யாழ். சிறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவம் யாழ். மாவட்ட மேலதிக நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரனின் கவனத் திற்குக் கொண்டுவரப்பட்டது. இதனையடுத்து, சிறையில் மேலும் மோதல்கள் இடம்பெறாமல் தடுப்பதற்கென யாழ். சிறைச்சாலையைச் சுற்றி வரக் காவல்கடமையில் ஈடுபடுமாறு நீதிபதி பொலீஸாருக்கு உத்தரவிட்டார். (எ-4-6)

# செஞ்.அதிகாரி முன்னிலையில் சந்தேகநபரின் வாக்குமூலம்

## இன்று பதியப்படும் எனவும் தகவல்

மட்டக்களப்புச் சிறைச்சாலைக்குள் வைத்து நேற்றுக்காலை சச்சு மாஸ்டரையும் அவரது சகா ஒருவரையும் சுட்டுக்கொன்றவர் எனக் கருதப்படுகின்ற மகேந்திரன் புவிதரனிடமிருந்து இன்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகள் முன்னிலையில் வாக்குமூலம் பெறப் படவிருப்பதாகத் தெரியவருகின்றது.

இச்சூட்டுச் சம்பவம் நடந்ததும் சிறைச்சா லைக் கூரையின் மீது ஏறிய புவிதரன் தான் கழே இறங்கி வந்து சரணடைவதற்கு செஞ்சிலு வைச் சர்வதேசக்குழு முன்னிலையில் தன்னு டைய வாக்குமூலம் பெறப்படவேண்டும் என்பது உட்பட சில நிபந்தனைகளை விதித்திருந்தார் எனக் கூறப்படுகின்றது.

சம்பவ இடத்திற்கு விரைந்த செஞ்சிலு வைச் சர்வதேசக்குழு அதிகாரிகள், ஏனையோ ருக்கும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு வினருக்கும் முன்னால் அதற்கான வாக்குறுதி களை வழங்கியதை அடுத்தே புவிதரன் கூரை யிலிருந்து இறங்கி சரணடைந்தார் எனவும் தெரிகின்றது.

அவருக்கு அப்போது அளிக்கப்பட்ட வாக்கு றுதிப்படி இன்று செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அதிகாரிகள் முன்னிலையில் அவரது வாக்கு மூலம் பெறப்படவிருப்பதாகக் கூறப்பட்டது.

இந்தச் சூட்டுச் சம்பவம் நடைபெற்ற பின் னர் சிறைக்குள் தேடுதல் நடத்திய பொலீஸா சூட்டுச் சம்பவத்துக்குப் பயன்படுத்தப்பட்டதா கக் கருதப்படும் 9 எம்.எம்.பிஸ்டல் ஒன்று, கைக் குண்டுகள் - இரண்டு, கையடக்கத் தொலை பேசி - இரண்டு ஆகியவற்றைக் கைப்பற்றி னர் என்றும் தெரிகின்றது.

துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டவர் எனக் கருதப்படும் புவிதரனின் தலையணை உறைக் குள் இருந்து, கொல்லப்பட்ட சச்சு மாஸ்டரை யும் மற்றைய வரையும் துரோகி என விமர்சிக் கும் இரண்டு ஆவணங்களையும் பொலீஸார் கைப்பற்றினர் என்று ஒரு செய்தி தெரிவித்தது.

# சச்சு மாஸ்டரைச் சுட்டவர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சிப்பதற்கு முன்னரே, அவர் கிரனேட் இரண்டு டனும், துப்பாக்கி ஒன்றுடனும் சிறைக்கூரை மீது ஏறிவிட்டார்.

சிறைக்காவலரோ, பொலீஸாரோ அவரை நெருங்க முடியாத நிலை நீடித்ததால் சிறை யைச் சுற்றிப் படையினர் குவிக்கப்பட்டனர்.

செஞ்சிலுவை மற்றும் யுத்த நிறுத்தக் கண காணிப்புக்குழு அதிகாரிகள் முன்னிலையில் அவர் சரணடைந்ததை அடுத்து அவரிடமிருந்த பிஸ்டலையும், கிரனேட்டுக்களையும் பொலீஸார் கைப்பற்றினர். கைப்பற்றப்பட்ட பிஸ்டல் எம்.எம்.9 ரகத்தைச் சேர்ந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

உடனடியாகப் பொலீஸாரின் ஜீப்பில் ஏற் றப்பட்டு பொலீஸ் விசாரணைக்காகச் சிறையிலி ருந்து அவர் கொண்டுசெல்லப்பட்டார்.

சிறைக்குள் அவருக்கு பிஸ்டலும், கிரனேட்டுக் களும் எப்படிக் கிடைத்தன என்ற கேள்வி எழுப் பப்பட்டுள்ளது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அடுத்து சிறைச்சாலையில் தடுத்துவைக்கப் பட்டிருக்கும் அனைத்துக் கைதிகளும் துருவித் துருவி விசாரணை செய்யப்பட்டனர். கைதிகளின் விவரக்கோவைகள் பரிசோதனைக்கு உட் படுத்தப்பட்டன. குண்டு செயலிழக்க வைக்கும் பிரிவினர் சிறைச்சாலையில் சல்லடைபோட்டுத் தேடுதல் நடத்தினர்.

கொல்லப்பட்ட சச்சு மாஸ்டருக்கு சிறைக்குள கைத்தொலைபேசி பாவனைக்குக் கிடைத்தது போன்று துப்பாக்கியும், கிரனேட்டும் சிறைக்குள் வந்திருக்கலாம் என ஓர் ஊகம் தெரிவிக்கப்பட்டது.

சச்சு மாஸ்டருடன் சிறைக்குள் நெருங்கிப் பழகிய ஒரு கைதியே சச்சு மாஸ்டரிடமிருந்த பிஸ்டலை நைஸாக எடுத்து அவரைச் சுட்டுக் கொன்றிருக்கலாம் என வேறு வட்டாரங்களில் பேசப்பட்டது.

துப்பாக்கிச் சூட்டில் பலியான சச்சு மாஸ்டரி னதும் அவரது சகாவினதும் மரணவிசாரணை கள் சிறைச்சாலையில் நேற்று நடைபெற்றன. துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்ட கொலை என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

இந்தத் திடீர்த்தாக்குதலை நடத்தியவர் என்று கூறப்படும் புவிதரன் சாதாரண திருட்டுக் குற்றத்தின் பேரில் விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்ததால் அவரை சச்சு மாஸ்டருக்கோ ஏனை யோருக்கோ ஆபத்து விளைவிக்கக்கூடிய நபர் என சிறைச்சாலை அதிகாரிகள் கருதவே இல்லை என்றும் - அதனால் பாதுகாப்பைக் கோட்டை விட்டுவிட்டனர் என்றும் - விடயமறிந்த வட் டாரங்கள் தகவல் [illegible] (எ-க-9)

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாகக் கூடும் நாடாளுமன்றத் தொடரில் விடு தலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக் காலத் தன்னாட்சி அதிகார சபை குறித்து விவாதிக்க வேண்டுமென ஜாதிக ஹெல உறு மயவின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வண. ஓமல்பே ஜோகித்த தேரர் சபாநாயகரிடம் முன்னறிவிப்பு செய்திருந்தார்.

இவ்விடயம் குறித்து விவாதிக்க ஆளும் தரப்பினரும் இணங்கியுள்ளனர் என நாடாளு மன்ற செயலாளர் நாயகம் பிரியாணி விஜேசேகர தெரிவித்துள்ளார்.

கடந்த 5ஆம் திகதி எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் சபாநாய கரைச் சந்தித்துக் குறிப் பிட்ட திகதிக்கு முன் னரேயே நாடாளுமன் றத்தைக் கூட்டுமாறு கோரிக்கை விடுத்தனர். அவ்வாறான விவா தத்திற்கு தமக்குக் கால அவகாசம் போதாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பி னர் சபாநாயகரிடம் ஆட் சேபம் தெரிவித்தனர்.

எனினும், நாடாளு மன்றம் கூடுவதற்கு முதல்நாள் அனைத்து கட்சித் தலைவர்களை யும் சபாநாயகர் சந் திப்பார் எனத் தெரி கின்றது. அப்போது இவ்விடயம் குறித்து இறுதி முடிவு எடுக்கப் படும்என எதிர்பார்க் கப்படுகின்றது. (க)


**பாடசாலை மாணவர்களுக்கான டொச் வகுப்புகள்**

ஆரம்பம்:
3, 4, 5, 6ஆம் வகுப்புகளுக்கு
BERN, ZURICH
ஆகிய பெரு நகரங்களில்
லிங்கம் மாஸ்ரரின் கற்பித்தலில்
தொடர்பு: 062 7974164 - 079 3344733
4665, OFTRINGEN, SWISS.
(33927)

**புதிய பிரிவுகள் ஆரம்பம். 23-07-2004**

அனைத்துக் கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன

குறிப்பு:- மானிப்பாய் Rotaract Club இனால் நடாத்தப்பட்ட கணினிக் கருத்தரங்கில் பங்கு பற்றிய மாணவர்களிற்கு 90% கட்டணக்குறைப்புச் செய்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

Maniam's Building 15, சிராம்பையடி வீதி, யாழ்ப்பாணம். (off Stanly Road)

**Computer courses**

அனேக மாணவர்களின் வேண்டு கோளுக்கிணங்க மேலும் புதிய பிரிவுகள் ஆரம்பம்

மேலதிக விபரங்களுக்கு:-
43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170

ஆரம்பம் 16.18.07.2004

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

பிரிவு 1 : 14.07.2004
பிரிவு 2 : 18.07.2004

அநேக மாணவர்களின் வேண்டுகோளுக் கிணங்க மேலும் இரண்டு பிரிவுகள் ஆரம்பிக் கப்படவுள்ளதென்பதை மாணவர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

ஆர்வமுள்ள மாணவர்கள் அனுமதிக்கு முந்திக்கொள்ளுங்கள்.

இயக்குநர்,
IIS
100, Clock Tower Rd., Jaffna.
(C-36132)

**மாதாந்தம் 300/= மட்டுமே**

என்ன நம்பமுடியவில்லையா? ஆம் 300/=
உங்களுக்காக மிகக்குறைந்த கட்டணத்தில் புதிய பிரிவுகள் ஆரம்பம்
Dip in OAC
17.07.2004
காலை 9.00 & 11.00 மணி
பதிவுகளுக்கு: College of Computer
K.K.S Road, Inuvil. T.P: 2227643
No: 88 Palaly Road, Thirunelvely.

**திருமறைக் கலாமன்றம்**

தயாரித்து வழங்கும்

**ஞானசௌந்தரி**

(இசை நாடகம்)

அன்பளிப்பு 30/=

பலரின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் நாளையும், நாளைமறுதினமும் (ஜூலை 17,18-2004 சனி, ஞாயிறு) மன்ற அரங்கில் மாலை 7.30 மணிக்கு மேடையேறுகின்றது.

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-36002)(29-13-14)

-திருமறைக் கலாமன்றம்.


## மரண அறிவித்தல்

### சேனாதிராசா இராமேஸ்வரன் (கடவுள்)

புலோலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் சாரையடியை வசிப்பிட மாகவும் கொண்ட சேனாதிராசா இராமேஸ்வரன் (கடவுள்) நேற்று (15.07.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சேனாதிராசா - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மகனும் கந்தப்பர் -சங்கரப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் சிவமலரின் அன்புக் கணவரும் சஞ்சீவன், சத்தியன் ஆகியோரின் தகப்பனாரும் காலஞ்சென்ற மண்டலேஸ்வரன் கமலேஸ்வரி, சுந்தரேஸ்வரி, ஞானேஸ வரி, திருக்குமரேஸ்வரன், ஸ்ரீஅமரேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோ தரனும் சிவபாதசுந்தரம், தர்மலிங்கம், பரமானந்தம் குமரேஸ், பாலச் சந்திரன், க.சி.சிவசுப்பிரமணியம் (ஆங்கில ஆசிரியர்) ஆகியோரின் மைத்துனரும் டாக்டர் பிரியதர்சினியின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2004) வெள்ளிக் கிழமை மாலை 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, ஆனைவிழுந்தான் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவமலர்(மனைவி),
பிள்ளைகள்.

(சி-36017)(29-13-16)






இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.07.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.